



தமிழரசு
ஏப்ரல் 1-15, 1999, ரூ.3







## நமது அன்றாட பழக்கவழக்கங்களால், எய்ட்ஸ் வராது. அதற்கு நீங்களே ஒரு உதாரணம்.

காலையில் எழுந்தது முதல் ராத்திரி படுக்கப் போகும் வரை நீங்கள் எத்தனையோ பேரைச் சந்திக்கிறீர்கள். ஓட்டலுக்குச் செல்கிறீர்கள், சினிமா பார்க்கிறீர்கள், நெரிசலான பஸ்ஸில் பயணம் செய்கிறீர்கள், பலருடன் கை குலுக்குகிறீர்கள்.

இவர்களில் யாருக்காவது எச்ஐவி/ எய்ட்ஸ் பாதித்து இருக்கலாம்.

**சாதாரண பழக்கவழக்கங்களின் மூலம் எய்ட்ஸ் பரவுவதாக இருந்தால், உங்களையும் எய்ட்ஸ் பாதித்திருக்க வேண்டும்.**

**ஆனால் அப்படி இல்லையே...**

ஏனெனில், கை குலுக்குவதாலோ, உணவைப் பகிர்ந்து கொள்வதாலோ, தொடுவதாலோ, தும்மலினாலோ, கழிப்பிடத்தை அனைவரும் உபயோகிப்பதாலோ, எய்ட்ஸ் பரவுவதில்லை.

எனவே எய்ட்ஸ் பாதித்தவரைக் கண்டு நீங்கள் ஒதுங்க வேண்டியதில்லை. உங்களுக்கு எந்த ஆபத்தும் இல்லை.

அவர்களும் நம்மைப் போன்றவர்கள்தான். அவர்களுக்கு எப்பொழுதும் போல நாம் அன்பும், ஆதரவும் காட்டுவோம்.

**சிறிதளவு ஆதரவு பெருமளவு சுமையைக் குறைக்கும்.**

குழந்தை பிறப்பைத் தடுப்போம்
எய்ட்ஸ் வந்தோரைக் காப்போம்

மேலும் விவரங்களுக்கு அணுக வேண்டிய முகவரி :
**தமிழ்நாடு எய்ட்ஸ் கட்டுப்பாட்டு அமைப்பு**
417, பாந்தியன் ரோடு, சென்னை - 600 008.
தொ.பே.: 8255467, 8255261, 8254917.
24 மணிநேர தொ.பே.: 8256882, 8256864.

Mudra:TNSACS:6259:98

## இந்த இதழில்...


★ கணினி மென்பொருள் ஏற்றுமதியில் சாதனை ................. 2

★ கலைஞர் ஆட்சியில்
எண்ணற்ற சாதனைகள்
ஏராளமான சலுகைகள் ................. 3

★ விவசாயத் தொழிலாளர்களுக்கு ஊதிய உயர்வு ................. 33

★ மாணவர்களை பள்ளியில் சேர்க்க இயக்கம் ................. 36

★ தரமான தமிழ்ப்படங்களுக்கு மானியம் ................. 39

★ நகர்புற நிலவரி விதிப்புமுறை சீரமைக்கப்படும் ................. 40

★ தமிழ்நாட்டில் 100 இலட்சம் மெட்ரிக் டன்
அரிசி உற்பத்தி ................. 44



# தமிழரசு

திருவள்ளுவர் ஆண்டு 2030
பங்குனி – சித்திரை
ஏப்ரல் 1–15, 1999
மலர் : 30 இதழ் : 19
விலை ரூ.3


**கைம்மாறு வேண்டா கடப்பாடு மாரிமாட்**
**டென்னாற்றுங் கொல்லோ உலகு.**

**கை**ம்மாறு கருதி மழை பொழிவதில்லை; அந்த மழையைப் போன்றவர்கள் கைம்மாறு கருதி எந்த உதவியும் செய்பவர்கள் அல்லர்.

– கலைஞரின் திருக்குறள் உரையிலிருந்து...

# கணினி மென்பொருள் ஏற்றுமதியில் சாதனை!

– முதலமைச்சர் **கலைஞர்** அறிவிப்பு!

கணினி மென்பொருள்கள் தமிழகத்திலிருந்து இதுவரை இல்லாத அளவில், 1998–99 ஆம் ஆண்டிற்கு நிர்ணயிக்கப்பட்ட 700 கோடி ரூபாய் இலக்கினை விஞ்சி 1170 கோடி ரூபாய் அளவுக்கு ஏற்றுமதிச் செய்யப்பட்டு புதிய சாதனை நிகழ்த்தப்பட்டுள்ளது.


1997–98 ஆம் ஆண்டில் தமிழகத்திலிருந்து ஏற்றுமதியான மென்பொருள்களின் மதிப்பு 400 கோடி ரூபாய் மட்டுமே. 1998–99 ஆம் ஆண்டில் இது 300 விழுக்காடு அளவுக்கு உயர்ந்துள்ளது குறிப்பிடத்தக்கது.

தமிழகத்தில் 155 கணினி மென்பொருள் நிறுவனங்கள் செயல்படுகின்றன. இவற்றில் 103 நிறுவனங்கள் மென்பொருள்களை ஏற்றுமதிச் செய்கின்றன. இந்திய மென்பொருள் தொழில் நுட்பப் பூங்காக்களில் (Software Technology Parks of India) முழுவதும் ஏற்றுமதியை அடிப்படையாகக் கொண்ட 110 நிறுவனங்கள் பதிவு செய்துள்ளன.

தமிழகத்தில் உற்பத்தி செய்யப்படும் மென்பொருள்களில் 76 விழுக்காடு அமெரிக்க ஐக்கிய நாடுகளுக்கும், 10 விழுக்காடு இங்கிலாந்து நாட்டிற்கும், எஞ்சியவை மற்ற ஐரோப்பிய நாடுகளுக்கும், ஜப்பான், சிங்கப்பூர் ஆகிய நாடுகளுக்கும் ஏற்றுமதி செய்யப்படுகின்றன.

5 நிறுவனங்கள் ஒவ்வொன்றும் 10 கோடி ரூபாய்க்கும் மேலான மென்பொருள்களையும், 33 நிறுவனங்கள் ஒவ்வொன்றும் 1 கோடி ரூபாய்க்கும் மேலான மென்பொருள்களையும் 1998–99 ஆம் ஆண்டில் ஏற்றுமதி செய்துள்ளன.


தமிழக அரசின் தகவல் தொழில்நுட்பக் கொள்கையின் காரணமாகவும், தமிழகத்தில் கிடைக்கும் மிகச்சிறந்த தொழில்நுட்பப் பணியாளர்கள் மற்றும் கட்டமைப்புகளின் காரணமாகவும், இந்திய மென்பொருள் தொழில்நுட்பப் பூங்கா போன்ற அமைப்புகள் அளித்துவரும் சீரிய ஒத்துழைப்பின் காரணமாகவும் 1998–99 ஆம் ஆண்டில், தமிழகத்தில் மென்பொருள்களின் ஏற்றுமதியில் இந்த வரலாற்றுச் சிறப்புமிக்க சாதனை நிகழ்த்தப்பட்டுள்ளது என்று முதலமைச்சர் **கலைஞர்** அறிவித்துள்ளார். ●



# கலைஞர் ஆட்சியில் எண்ணற்ற சாதனைகள் ஏராளமான சலுகைகள்

**மா**ண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிதிநிலை அறிக்கையை இந்த அவையிலே வழங்கியபோது, அவையிலே இருந்து அதைப் படித்து உணர்ந்த மகிழ்ந்த என்னுடைய அருமைத் தம்பி திரு. ஆல்பன் அவர்கள் அந்த நிதிநிலை அறிக்கைக்கு நான் பதில் அளிக்கின்ற நேரத்தில் இல்லையே என்கின்ற ஆழ்ந்த வேதனையோடு என்னுடைய உரையைத் தொடங்குகிறேன்.

இந்த நிதிநிலை அறிக்கை குறித்து, ஏறத்தாழ 30க்கும் மேற்பட்ட, சரியாகச் சொல்ல வேண்டுமானால் திட்டத்திலே தங்களுடைய வாகான கருத்துக்களை எடுத்துக் கூறுகின்ற வாய்ப்பு பெற்றமைக்காக நான் மிகுந்த மகிழ்ச்சியடைகிறேன். இந்த அறிக்கையைக் குறித்து, உரையாற்றிய எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும், மற்றும் மற்ற கட்சிகளினுடைய தலைவர்களும், உறுப்பினர்களும், பாராட்டியும், பாராட்டுக்களுக்கு இடையே குறைபாடுகளைச் சுட்டிக்காட்டியும், அரசு ஆழ்ந்து சிந்திக்க வேண்டிய அரிய கருத்துக்களை எடுத்துரைத்தும் கடமையினை ஆற்றியிருக்கிறார்கள். பல பாராட்டுக்களை இன்று நிதிநிலை அறிக்கையைப் பற்றி இங்கே தெரிவித்த



34 பேர், கருத்துக்களைத் தெரிவித்திருக்கிறார்கள். சுமார் 8 அல்லது 9 மணி நேரத்திற்கு மேலாக கருத்துக்கள் வழங்கப்பட்டிருக்கின்றன.

### சட்டசபையில் கையால் ஆகின்ற காரியங்கள் எதுவும் நடைபெறக்கூடாது

எத்தனையோ அலைகள், புயல்கள் இவைகளுக்கு இடையிலேகூட 34 பேர் இந்த வரவு–செலவுத் எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் ஒரு சில குறைபாடுகளைச் சுட்டிக்காட்டி, என்ன காரணத்தினாலோ "இது கையாலாகாத சர்க்கார்; இது கையாலாகாதவர்கள் தயாரித்த பட்ஜெட்" என்பதைப் போன்ற ஒரு வார்த்தையைச் சொன்னார்கள். **சட்டசபையிலே கையால் ஆகின்ற காரியங்கள் எதுவும் நடைபெறக்கூடாது** என்பதற்காகத்தான் கடந்த நான்கு, ஐந்து நாட்களாக பலவித விவாதங்களிலே

**மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் 1999–2000 ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கை மீதான விவாதங்களுக்குப் பதிலளித்து சட்டமன்றப் பேரவையில் 27–3–1999 அன்று ஆற்றிய உரை.**

நாம் ஈடுபட்டுக் கொண்டிருக்கிறோம். இருந்தாலுங்கூட, Slip of the tongue என்பார்களே அப்படியோ, அல்லது உள்ளபடியே எண்ணியோ அவர் அந்தக் கருத்தைச் சொல்லியிருப்பாரேயானால், உள்ளபடியே திறமையாக, மேலும் ஆற்றலாக இன்னும் அறிவுபூர்வமாகச் செயல்படுவதற்கு, எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுடைய கருத்தை வரவேற்பதற்கு நான் தயாராக இருக்கிறேன்.

எதிர்க்கட்சித் தலைவர் இங்கே உரையாற்றுகிறார் என்றால், அவர் இங்கே கூறுகிற அறிவுரைகள், கருத்துக்கள் இவையெல்லாம் என்னுடைய அன்பிற்கினிய நண்பர் திரு.மூப்பனார் அவர்களுடைய கருத்துக்களாகவே நான் ஏற்றுக் கொண்டு, அவற்றை இங்கே நான் செயல்படுத்துவேன். ஆனால், **இந்த வார்த்தை திரு. மூப்பனாருடைய வாயிலிருந்து வரக்கூடிய வார்த்தை இல்லை** என்பதையும் நான் மிக நன்றாகவும் தெளிவாகவும் அறிவேன்.

இந்த விவாதத்தில், பல கருத்துக்கள் என்னுடைய உள்ளத்திலே பதிந்திருக்கின்றன.

மாண்புமிகு உறுப்பினர் சுப்பராயன் அவர்கள் இங்கே பேசும்போது முதல்வர் இந்த அவையிலே இல்லாவிட்டாலும் கூட, எங்களுடைய பேச்சுக்களையெல்லாம் படித்துப் பார்க்கத் தவற மாட்டார் என்று குறிப்பிட்டார். அது உண்மை. உடல்நலம் இல்லாமல் நான் படுக்கையிலே இருந்த நேரத்திலேகூட, அந்தக் கருத்துக்களை எல்லாம் நான் படித்துப் பார்த்தேன். நேற்றைய தினமும் எல்லோரும் பேசியதை தொகுப்பாகப் படித்துப் பார்த்துவிட்டுத் தான் என்னுடைய பதிலுரையைத் தயாரித்திருக்கின்றேன். நம்முடைய நண்பர் ஞானசேகரன் அவர்கள் கூட, தெனாலிராமன் கதையைச் சொல்லி இது நான் சொல்கின்ற கதையல்ல, முதலமைச்சர் கருணாநிதி எதிர்க்கட்சித் தலைவராக இருந்தபோது இங்கே சொன்ன கதை என்று சொல்லி எனக்கு ராயல்டி கொடுக்காமலேயே அந்தக் கதையை இங்கே எடுத்துச் சொல்லியிருக்கின்றார். என்ன காரணமோ சுப்பராயன் அவர்கள் பேசும்போது அழுத்தம் திருத்தமான கருத்துக்கள் எடுத்துக் கூறக்கூடிய ஆற்றல் படைத்தவர்; நான் எதிர்பாரா கருத்துக்களை அவர் சொன்னாலும்கூட, அவைகளை நான் ஆழ்ந்து கவனிப்பது, என்னுடைய வாடிக்கை. காரணம் அந்த அளவிற்குச் சொல் வேகம், அழுத்தம், சொல்லுகிற வார்த்தையில் ஒரு கனம் இத்தனையும் வாய்ந்த பேச்சு நண்பர் சுப்பராயன் அவர்களுடைய பேச்சாகும். ஆனால், அன்றைக்கு நான் அந்தப் பேச்சைக் கேட்டபோது – எங்கிருந்து கேட்டாய் என்றெல்லாம் என்னைக் கேட்கக்கூடாது – நான் கேட்டபோது, அவருடைய பேச்சில் தொங்கு சதை, மூச்சுத் திணறல், கவர்ச்சித் திட்டங்கள் போன்ற – அவரே, சற்று நினைத்துப் பார்த்தால் இப்படியா பேசிவிட்டோம் என்று எண்ணக்கூடிய சொற்றொடர்களையெல்லாம் பயன்படுத்தியிருந்தார். தொடக்கத்திலேயே மூச்சுத் திணறலோடு இந்த பட்ஜெட் தயாரிக்கப்பட்டிருக்கிறது என்று அவர் குறிப்பிட்டார். உண்மைதான். என்னுடைய நிலையை அவர் உணர்ந்ததற்காக நான் உள்ளபடியே பாராட்டுகின்றேன்.

திரு. கே. சுப்பராயன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, **நான் அன்றும், இன்றும் பெரிதும் மதிக்கத்தக்க ஒரு தலைவர் கலைஞர் அவர்கள்.** நான் மூச்சுத் திணறல் என்று சொன்னதனுடைய பொருள் பட்ஜெட் தாக்கலில், நிதிப்பற்றாக்குறையால் பட்ஜெட் மூச்சு திணறுகிறது என்று குறிப்பிட்டேன். மிக எச்சரிக்கையோடு அதைக் குறிப்பிட்டேன் என்பதை அவைக்குத் தெரிவிக்க விரும்புகிறேன்.

## சில நேரங்களில் தோழமைக்கட்சிகளாலும் மூச்சுத்திணறல் ஏற்படுகிறது

முதலமைச்சர் கலைஞர் : நான் அதை முழுமையாகச் சொல்லி முடிப்பதற்குள் சுப்பராயன் அவர்கள் குறுக்கிட்டு விளக்கம் அளித்துவிட்டார். அந்த விளக்கத்தை இந்த உரையிலே, என்னுடைய உரையோடு சேர்த்துக்கொள்கின்றேன். மூச்சுத் திணறல் ஏற்படுவது சில நேரங்களில் தோழமைக் கட்சிகளாலும் ஏற்படுகிறது. எப்படியென்றால் ஒரு வரியைப் போடும்போது, அந்த வரிக் கூடாது என்று சொல்வதும் தோழமைக்கட்சிகள்தான். ஏன் வருவாயைப் பெருக்கி நல்ல திட்டங்களை நிறைவேற்றக்கூடாது என்று கேட்பதும் தோழமைக் கட்சிகள்தான்.

## குடிசைவாசிகளுக்கு எதிரானதல்ல இவ்வரசு

சென்னை மாநகரத்தை ஏன் அழகாக வைத்திருக்கக்கூடாது, சிங்காரச் சென்னை, சிங்காரச் சென்னை என்று மேயர் கூறிக்கொண்டேயிருக்கிறாரே, ஏனோ சிங்காரச் சென்னை உருவாகவில்லை என்று கேட்பதும் எதிர்க்கட்சிகள் மாத்திரமல்ல, தோழமைக்கட்சிகளும்தான் கேட்கிறார்கள். ஆனால், அதற்காக, கூவத்தையோ அல்லது பக்கிங்ஹாம் கால்வாயையோ, ஒட்டேரி நல்லாவையோ அழகுப்படுத்த வேண்டும், ஆழப்படுத்த வேண்டும், அகலப்படுத்த வேண்டும், சென்னையை நாகரீக நகரமாக மாத்திரமல்ல, சுகாதாரம் மிகுந்த நகரமாக, கொசுக்கடி போன்ற தொற்று நோயைப் பரப்பக்கூடிய கிருமிகள் உற்பத்தி ஆகாத இடமாக மாற்ற வேண்டும் என்று விரும்பி அதற்கான முயற்சிகளிலே ஈடுபட்டு, அதற்காக இப்போது அங்கு இருக்கின்ற குடிசைகளையெல்லாம் அகற்றி, அவர்களுக்கு வேறு மாற்று இடம் தருகின்ற முயற்சியிலே மாநகராட்சி மன்றம் ஈடுபடுகிற

நேரத்திலும், மாநகராட்சிக்கு துணையாக மாநில அரசு இருக்கின்ற நேரத்திலும்கூட, ஜனதாதளக் கட்சியைச் சேர்ந்த நண்பர்கள் அங்கு வாழுகின்ற குடிசைவாசிகளை அழைத்துக்கொண்டு ஒரு ஊர்வலம் விடுகிறார்கள் என்றால், நான் அங்கு இருக்கின்ற குடிசைவாசிகளுக்கு எதிரானவன் அல்ல, அவர்களுக்கு மாற்று இடம் தரவேண்டும், அவர்கள் நல்லமுறையிலே வாழவேண்டும் என்கின்ற எண்ணம் உடையவர்கள் தான் நாம். ஆனாலும் ஒரு நாலாயிரம், ஐந்தாயிரம் பேரைக் கூட்டிக்கொண்டு வருகின்ற காரணத்தினாலே அந்த அழகுப்படுத்துகின்ற காரியத்தை அரசோ அல்லது மாநகராட்சி மன்றமோ செய்யலாமா, செய்ய வேண்டாமா என்கின்ற மூச்சுத்திணறலுக்கு ஆளாக நேரிடுகிறது. மத்திய சர்க்காரால் மட்டுமல்ல மூச்சுத் திணறல், தோழமைக் கட்சிகளாலேயும் எனக்கு மூச்சுத் திணறல் ஏற்படுகிறது என்பதை எடுத்துக்காட்ட நான் கடமைப்பட்டிருக்கின்றேன். கவர்ச்சித் திட்டங்களைப் பற்றியெல்லாம் அவர் சொல்லும்போது தொங்கு சதை என்று குறிப்பிட்டார். அவருக்கே உரிய சில வார்த்தைகள் உண்டு. இந்த அவையிலே எனக்கோ அல்லது பேராசிரியருக்கோ, மற்றவர்களுக்கோகூட தோன்றாத, உச்சரிக்காத அந்த வார்த்தைகளை தனக்கென்று, அவருக்கென்று மாத்திரமே Copy right என்கின்ற அளவிற்கு அந்த வார்த்தைகளை அவர் பயன்படுத்துவார். இதிலே ஒரு நியாயமான உண்மை என்னவென்றால், எனக்கோ அல்லது அவை முன்னவர் பேராசிரியருக்கோ, அவர் குறிப்பிடுவதைப்போல தொங்கு சதை எதுவும் கிடையாது. நாங்கள் ஏற்கெனவே இளைத்த உருவங்கள்.

இந்த அமைச்சரவையிலே உள்ள நாங்கள் தயாரித்த இந்த வரவு செலவுத் திட்டத்தில், கவர்ச்சித் திட்டங்கள் எல்லாம் தொங்கு சதை என்று அவர் குறிப்பிட்டது மாத்திரமல்ல, இன்னொன்றையும் சொன்னார். யாரோ குறிப்பிட்ட சத்துணவுப் பற்றி குறிப்பிட்டபோதும், வேறு சில ஏழைகளுக்கு உணவு வழங்குதல் போன்ற செய்திகளை சொன்னபோதும் திரு.சுப்பராயன் அவர்கள் குறுக்கிட்டு சொன்னார்கள், அது என்ன காலையிலே சாப்பிட்டு அல்லது மாலையிலே சாப்பிட்டு, மறுநாள் காலையிலே வெளியே வருவதுதானே என்று குறிப்பிட்டார்கள். விஞ்ஞான ரீதியாக எல்லாம் தெரிந்த சுப்பராயன் அவர்களுக்கு மாலையிலே சாப்பிடுகின்ற உணவோ அல்லது எதுவோ, அது உடலிலே ஊறி இரத்தமாக மாறி உடலுக்கு வலு அளிக்கிறது என்பதுகூட தெரியாமலா இருக்கும். நிச்சயமாகத் தெரியும். தெரிந்தாலும்கூட என்னவோ அன்றைக்கு கோபித்துக்கொண்டு, வீட்டிலேயிருந்து வரும்போதே கோபத்தோடு வந்திருக்கிறார். மனைவி மீது இருக்கிற கோபத்தை மகன் மீது காட்டுவதைப் போல என்மீது அல்ல, நான் தயாரித்திருக்கிற பட்ஜெட் மீது அதைக் காட்டியிருக்கிறார். மற்றபடி அவர் பேசிய பேச்சுக்களிலே மிக ஆழ்ந்த, பொருளாதார தத்துவங்கள், சமுதாய நலன்களுக்காக கூறப்பட வேண்டிய கருத்துக்கள் மிக, மிக இருந்தன என்பதை நான் படித்துப் பார்த்து தெரிந்து கொண்டிருக்கின்றேன்.

இங்கே இன்றைக்கு வரவில்லை நம்முடைய நண்பர் அழகிரி, எம்.எல்.ஏ., அவர்கள். அவரும் அவருடைய கட்சியினுடைய அதிகாரப்பூர்வமான பத்திரிகையிலே எழுதிய கட்டுரையையும் படித்துப் பார்த்தேன். அவர் அந்த நிதிநிலை அறிக்கையைப் பற்றி குறிப்பிட்டு விட்டு, கடைசியாக முடிக்கும்போது இந்த நிதிநிலை அறிக்கையிலே, இலக்கியவாதி கலைஞரைத்தான் காணமுடிகிறது, நிதியமைச்சர் கலைஞரை காணமுடியவில்லை என்று குறிப்பிட்டிருக்கிறார். எனக்கு இது ஒரு மகிழ்ச்சி. இலக்கியவாதி கலைஞர் சாகிற வரையிலே வாழ்வார். நிதியமைச்சர் கலைஞர் அப்படி வாழ முடியாது. இடையிலே அந்தப் பதவி போய்விடும். இலக்கியவாதி என்பதுதான் கடைசி வரையிலே நிலைக்கும். எனவே, அவர் அப்படி குறிப்பிட்டது எனக்கு மிகுந்த மகிழ்ச்சிதான்.

**பலரும் புகழ்ந்து பாராட்டிய 12ஆவது நிதிநிலை அறிக்கை**


நம்முடைய நண்பர் ஞானசேகரனோ அல்லது மற்றும் திருநாவுக்கரசு அவர்களோ, நம்முடைய எதிர்க்கட்சித் தலைவரோ, நம்முடைய இந்திய கம்யூனிஸ்ட் கட்சியினுடையத் தலைவர் பழனிசாமி அவர்களோ அல்லது இந்திய தேசிய லீக்கின் தலைவர் அப்துல் லத்தீப் அவர்களோ, பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பிலே பேசிய மணி அவர்களோ, நண்பர் சந்தானம் அவர்களோ, வெங்கடசாமி அவர்களோ, பேராசிரியர் தீரன் அவர்களோ இத்தனை பேரும் கூறிய இந்தக் கருத்துக்களையெல்லாம் எடுத்து வைத்து, என்னுடைய உரையைத் தயாரித்திருக்கின்றேன். மற்றும் பல உறுப்பினர்கள் சொன்ன கருத்துக்களையும் சிந்தித்துப் பார்த்து, எண்ணிப் பார்த்து என்னுடைய உரை இங்கே வழங்கப்படுகிறது. அதற்கு முன்பு ஒன்றைச் சொல்ல வேண்டும். **பேசியவர்கள் அனைவரும் ஆளும் கட்சியில் உள்ளவர்கள் உள்ளிட்ட அனைவரும் இது 12ஆவது நிதிநிலை அறிக்கை என்பதை புகழ்ந்து பாராட்டிக் குறிப்பிட்டார்கள்.**

**குறிப்பிடத்தக்க திட்டங்கள்**

1969ஆம் ஆண்டு என்னுடைய இனிய தலைவர் பேரறிஞர் அண்ணா அவர்களுடைய மறைவுக்குப் பிறகு என் தோள்களிலே சுமத்தப்பட்ட இந்தப் பெரும் பொறுப்பை நான் ஏற்று 12ஆவது நிதிநிலை அறிக்கையைப் படிக்கின்ற வாய்ப்பை உங்கள்

அனைவருடைய அன்பான வாழ்த்துக்களோடும், ஆதரவோடும் நான் பெற்றிருக்கின்றேன். 1969 முதல் இதுவரையில் இந்தப் பன்னிரண்டாவது அறிக்கைக்கு இடையில் உள்ள காலத்தில், மாநிலத்திற்காக வளர்ச்சித் திட்டங்கள் அன்றாட தேவைகளுக்கான திட்டங்கள் நிர்வாகத்திற்கான திட்டங்கள் இவைகள் போக குறிப்பிடத்தக்க திட்டங்கள் எவையெவை நிறைவேற்றப்பட்டு இருக்கின்றன என்பதை நினைவிலே வைத்துக் கொள்ள வேண்டியதவசியம் என்று நான் கருதுகிறேன். எனவே, அதை நினைவுபடுத்த விரும்புகிறேன். 1969க்கு முன்பு இலவசக் கல்வி எஸ்.எஸ்.எல்.சி. வரையிலே பெருந்தலைவர் காமராஜர் அவர்களால் வழங்கப்பட்டது.

1969–லேதான் அண்ணா அவர்களுக்குப் பிறகு நான் பொறுப்பேற்ற நேரத்தில் **பி.யூ.சி. வரையிலே இலவசக் கல்வி** என்ற நிலையை நீட்டிக்கச் செய்தேன். **1969–லேதான் பிற்படுத்தப்பட்டோருக்கான நலன்களை மேலும் விரிவாக ஆராய்ந்திட சட்டநாதன் அவர்களுடைய தலைமையிலே ஒரு கமிஷன் நியமிக்கப்பட்டது.** அதனுடைய பரிந்துரைகள் பல ஏற்றுக்கொள்ளப்பட்டன. **1969ஆம் ஆண்டில் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறையும், ஆதிதிராவிடர் நலத்துறையும் ஒன்றாக இருந்ததைத் தனித்தனியே பிரித்து, பிற்படுத்தப்பட்டோருக்காக பிற்படுத்தப் பட்டோர் நல அமைச்சகம் ஒன்று உருவாக்கப்பட்டது.** 1969–ல் ஆர்.ஏ. கோபால்சாமி ஐயங்கார், ஐ.சி.எஸ். அவர்களுடைய தலைமையில் **முதன்முதலாக 'போலீஸ் கமிஷன்' தமிழ்நாட்டிலே** – இந்தியாவிலேயே இந்த மாநிலத்தில்தான் முதன்முதலாக போலீசாருடைய தேவைகளை உணர, பரிந்துரைக்க அமைக்கப்பட்டது. 1967–க்கு முன்பு 1933ஆம் ஆண்டு தமிழகத்திலே அறிமுகப்படுத்தப்பட்டது மின்சாரம். 1933ஆம் ஆண்டிலிருந்து 66 வரையில் 20,250 கிராமங்கள் மாத்திரம்தான் மின்விளக்கு வசதி பெற்ற கிராமங்களாக இருந்தன, 20 ஆண்டுகால ஆட்சியில். இன்னும் சொல்லப்போனால் 33 ஆண்டுகள் வெள்ளைக்காரர்கள் ஆட்சியும் சேர்த்து, 1966ஆம் ஆண்டு வரையிலே 33 ஆண்டுக்காலத்தில் 20,000 கிராமங்கள்தான் மின் விளக்கு ஒளி பெற்ற கிராமங்களாக இருந்தன. அதிலும் குறிப்பாக ஆதிதிராவிடர்களுடைய காலனிகள் 20,000 என்றால் 2,000 காலனிகளுக்குத்தான் விளக்கு ஒளி வழங்கப்பட்டிருந்தது. இந்த அவையிலே **"மின் விளக்கு இல்லாத கிராமங்களே தமிழகத்திலே இருக்கக் கூடாது என்ற ஒரு நிலையை உருவாக்குவோம்"** என்று நான் அறிவித்து, சபதம் செய்து, அதன்படி மொத்தமுள்ள 58,000 பெரிய கிராமங்களிலே 400, 500 கிராமங்கள் தவிர, மற்ற எல்லா கிராமங்களுக்கும் மின் விளக்கு வசதி செய்து தரப்பட்டது. **20,000 ஆதிதிராவிடர் காலனிகளில், 18,000 காலனிகளுக்கு மின் விளக்கு வசதி செய்துதரப்பட்டது,** இது 1969–ல்.



1970ஆம் ஆண்டு – அது வரையிலே குடிசைகள் மேம்பாட்டு வாரியம் என்ற ஒன்று இருந்து, குடிசைப் பகுதிகளைச் சீராக, செம்மையாக, சுகாதார வசதிகளோடு வைத்துக் கொள்ள வேண்டுமென்று இருந்த அந்தத் திட்டத்தை அப்படியே மாற்றி குடிசைகளை அகற்றுகின்ற திட்டம் என்ற ஒன்று கொண்டுவந்து, குடிசைவாசிகளுக்கு மாடி வீடுகள் கட்டுகிற அந்தத் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது. **1970ஆம் ஆண்டு குடிசை மாற்று வாரியம்** அறிமுகப்படுத்தப்பட்டது.

## 15 ஏக்கர் நில உச்ச வரம்புச்சட்டம்

1960ஆம் ஆண்டு உச்ச வரம்புச் சட்டத்தின்படி 30 ஸ்டாண்டர்டு ஏக்கர் என்று கொண்டு வந்தும் ஒரு ஏக்கர் நிலம்கூட உபரி நிலமாக எடுத்து யாருக்கும் வழங்கப்படாத சூழ்நிலையை எண்ணிப் பார்த்து 1970ஆம் ஆண்டு – 15.2.1970–ல் **15 ஏக்கர் நில உச்ச வரம்புச் சட்டத்தை இங்கே நிறைவேற்றி, இந்தச் சட்டத்தின் காரணமாக 1,97,900 ஏக்கர் நிலத்தை உபரி நிலமாக எடுத்த அரசு, திராவிட முன்னேற்றக் கழக அரசு. இதில் நிலமற்றவர்களுக்கு வழங்கப்பட்ட நிலம் 1,71,673 ஏக்கர்.** இதனால் பயனடைந்த உழவர்களுடைய எண்ணிக்கை 1,37,236 பேர். இவர்களில் **ஆதிதிராவிடர்கள் 61,985 பேர். 204 பேர் பழங்குடி மக்கள்.**

## விவசாயத் தொழிலாளர்கள் பயனடைய 'குடியிருப்பு மனைச்சட்டம்'

1971ஆம் ஆண்டு – நம்முடைய பழனிசாமி அவர்கள் இங்கே சுட்டிக்காட்டினார்களே, அதைப்போல குடியிருப்பு மனைசட்டம் என்ற ஒரு தீவிரமான சட்டத்தைக் கொண்டுவந்து, எங்கெங்கே விவசாயத் தொழிலாளர்கள் குடியிருக்கிறார்களோ, அந்த மனைகளை எல்லாம், அவற்றை விற்கக்கூட, புதுப்பித்துக் கொள்ள, புதிய கட்டடம் கட்டிக்கொள்ள, அவர்களுக்கு குடியிருப்பு மனை அனுபோகதாரர்கள் சட்டம் கொண்டுவரப்பட்டு, **மணலி கந்தசாமி போன்ற மாபெரும் கம்யூனிஸ்டு கட்சித் தலைவர்கள் எல்லாம்,**

**பலபேருடைய ரத்தம் சிந்தியும் கிடைக்காத இந்தத் திட்டம், கருணாநிதி சிந்திய ஒரு பேனாவினுடைய ஒரு துளி மையினால் கிடைத்தது** என்று பாராட்டிப் பேசிய **அந்தத் திட்டத்தால் மனை பெற்றவர்கள் 1,75,000 பேர்.** அவர்களிலே தாழ்த்தப்பட்ட ஆதிதிராவிடர்கள் ஒரு இலட்சத்து இரண்டாயிரம் பேர். பிற்படுத்தப்பட்டோர் 40 ஆயிரத்து 550 பேர். பிற வகுப்பினர் 32 ஆயிரத்து 123 பேர். இது 71ஆம் ஆண்டு.

**பிச்சைக்காரர் மறுவாழ்வுத் திட்டம்**

அதே 71ஆம் ஆண்டுதான் தொழுநோய் இரவலர்கள் தெருவிலே திரிந்து அவர்களுக்கும் சங்கடம், மக்களுக்கும் சங்கடம் என்ற நிலையை மாற்றி அவர்களும் மனிதர்கள்தான், அவர்களுக்கு மறுவாழ்வு வழங்க வேண்டியது அரசின் கடமை என்ற திட்டத்தின்படி மறுவாழ்வு இல்லங்கள் 11 மாவட்டங்களில் அமைக்கப்பட்டு ஏறத்தாழ 4 ஆயிரத்திற்கு மேற்பட்ட தொழுநோய் இரவலர்கள் மறுவாழ்வு இல்லங்களிலே வாழ்கின்றார்கள் என்றால், 71ஆம் ஆண்டு இந்த அரசு கொண்டுவந்த திட்டம்.

**ஆதிதிராவிடர் மற்றும் பிற்படுத்தப்பட்டோர் இடஒதுக்கீடு உயர்வு**

அதே 71-ல், ஆதிதிராவிடர்களுடைய இட ஒதுக்கீடு, reservation 16 விழுக்காடு என்பதை 18 விழுக்காடு ஆக உயர்த்தி, பிற்படுத்தப்பட்டவர்களுக்கு 25 என்று இருந்ததை 31 விழுக்காடாகவும் உயர்த்தினோம். அதே 71ஆம் ஆண்டு, பேருந்துகள் நாட்டுடமையாக்கப்பட்டு போக்குவரத்துக் கழகங்கள் உருவாக்கப்பட்டன. அதே 72ஆம் ஆண்டில்தான் **தமிழகம் முழுவதும் கண்ணொளி வழங்குகின்ற திட்டம்** அறிமுகப்படுத்தப்பட்டு இலட்சக்கணக்கான ஏழை எளியமக்கள், கிராமப்புறத்து மக்கள், நகர்ப்புறத்திலேயுள்ள ஏழைகள், பயன் பெற்றார்கள். அந்த 72ஆம் ஆண்டில்தான் **தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் தொடங்கப்பட்டது, தமிழகத்தில்.**





**சிகப்பு நாடா முறை - இரகசியக் குறிப்பு முறை ஒழிப்பு**

அந்த 71-ல் தான் பல ஆண்டுகாலமாக இருந்த கோரிக்கை, அரசு அலுவலர்களுடைய கோரிக்கை ஒன்றை இந்த அரசு கவனித்து, இரகசியக் குறிப்புமுறை, சிகப்பு நாடா முறை ஒழிக்கப்பட்டு மீண்டும் 76ஆம் ஆண்டு குடியரசுத் தலைவர் ஆட்சியிலே நடைமுறைக்கு வந்து, மறுபடியும் 1990ஆம் ஆண்டு அந்த **சிகப்பு நாடா முறையை, இரகசிய குறிப்பு முறையை இந்த அரசுதான் ஒழித்தது.** முதலில் 72ஆம் ஆண்டு இரகசியக் குறிப்பு முறை ஒழிக்கப்பட்டபோது, இராஜாஜி மண்டபத்திலே அரசு அலுவலர்களால் நடத்தப்பட்ட கூட்டத்தில் தந்தை பெரியார் அவர்கள் எந்த அளவிற்கு அதைப் பாராட்டிப் பேசினார் என்பதையெல்லாம் நான் இங்கே விவரித்து சொல்ல விரும்பவில்லை. **அப்படிப்பட்ட ஒரு பாராட்டினை அன்றைக்கு தந்தை பெரியார் அவர்கள் இந்த அரசுக்கு வழங்கினார்கள்.**

1972-ல் 1,500க்கு மேற்பட்ட மக்கள் வாழும் கிராமங்களுக்கு இணைப்புச் சாலைத் திட்டம், அதற்குப்பிறகு 1990-ல் ஆயிரத்திற்கு மேற்பட்ட மக்கள் வாழும் கிராமங்களுக்கு இணைப்புச் சாலைத் திட்டம், **வரும் ஆண்டிலிருந்து 500 முதல் ஆயிரம் பேர் வரை மக்கள் வாழும் கிராமங்களுக்கு இணைப்புச்சாலைத் திட்டம்.**

**கை ரிக்ஷாக்கள் ஒழிப்பு**

1973ஆம் ஆண்டு கை ரிக்ஷாக்களை அகற்றி, கம்யூனிசம் தழைத்தோங்குகின்ற மாநிலங்களிலே கூட இன்னும் நிறைவேற்றப்படாத திட்டத்தை, **கை ரிக்ஷாக்களை ஒழிக்கின்ற திட்டத்தை நிறைவேற்றி, மாற்றுத் திட்டமாக இலவச சைக்கிள் ரிக்ஷாக்களை வழங்கக்கூடிய திட்டத்தைத் கொண்டு வந்தது இந்த அரசுதான்.** அந்த ஆண்டிலேதான் **பெண் காவலர்கள்** நியமிக்கப்பட்டார்கள். முதன்முதலாக பெண் காவலர்படை தமிழகத்திலே நியமிக்கப்பட்டதும் 73ஆம் ஆண்டிலேதான்.

**ஆதிதிராவிடர்களுக்கு இலவச கான்கிரீட் வீடுகள்**

1974ஆம் ஆண்டிலேதான் தமிழ்நாட்டில் **ஆதிதிராவிடர்களுக்கு இலவசமாக கான்கிரீட் வீடுகள்** கட்டித்தரப்படுகின்ற திட்டம் அறிமுகப் படுத்தப்பட்டு, ஒரு இலட்சம் வீடு கட்டப்படும் என்று கூறி 40,000 வீடுகள் கட்டப்பட்ட நிலையிலே ஆட்சி கலைக்கப்பட்டது என்பதையும் நீங்கள் அறிவீர்கள். **1974ஆம் ஆண்டில்தான் கோயம்புத்தூரிலே, 'தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்' தொடங்கப்பட்டது.** 1974ஆம் ஆண்டிலேதான், **ஊனமுற்றோர் மறுவாழ்வுத் திட்டம் இந்த ஆட்சியிலேதான் தொடங்கப்பட்டது.**

**கலப்புத் திருமணத் தம்பதிகளுக்கு தங்கப்பதக்கம் - நிதியுதவி**

1974ஆம் ஆண்டிலேதான் கலப்புத் திருமணத் தம்பதிகளுக்குத் தங்கப் பதக்கம் வழங்குகின்ற, அண்ணாவினுடைய கருத்தை ஏற்று, அதைத் தொடர்ந்து நடத்தி 1989ஆம் ஆண்டு, கலப்புத் திருமண தம்பதிகளுக்கு 5,000 ரூபாய் நிதி வழங்குவது என்று அறிவித்து நடைமுறைப்படுத்தி, 1996-ல் அதை 10,000 ரூபாய் என்கின்ற அளவிற்கு உயர்த்தி, 1997-ல் அந்த கலப்புத் திருமணத்திலே இருவரில் ஒருவர், **ஆணோ பெண்ணோ ஆதிதிராவிடர்கள் ஆக இருந்தாலும் அவருக்கு 20,000 ரூபாய் நிதி என்று அறிவித்திருப்பதும் இந்த அரசுதான்.**

**அரசு ஊழியர் குடும்பப் பாதுகாப்புத் திட்டம்**

1974-ல் அரசு ஊழியர் இறந்தால் 10,000 ரூபாய் குடும்பப் பாதுகாப்புத் திட்டம் என்பதை இந்தியாவிலேயே முதன்முதலாக அறிவித்தது இந்த அரசு. அந்தத் திட்டம் 1989-ல் 40,000 ரூபாய் என்று ஆயிற்று. **1996-ல் ஒரு இலட்சம் ரூபாய் என்கிற அளவிற்கு அது உயர்த்தப்பட்டிருக்கின்றது.**

**உயர்கல்வி வளர்ச்சி**

தமிழகத்திலுள்ள கல்லூரி மாணவர்களுடைய எண்ணிக்கை பற்றி திரு. அழகிரி எழுதிய அந்தக் கட்டுரையில் கூடப் படித்தேன். படிப்பிற்காக, கல்விக்காக என்ன செய்தார்கள், காமராஜருக்குப் பிறகு? என்று கேட்டிருக்கிறார். நான் காமராஜரை குறை கூறமாட்டேன். அவர் செய்து முடித்த காரியங்கள், செய்யத் தொடங்கிய காரியங்களை நிறுத்தாமல் தொடருவதே நாங்கள் காமராஜருக்குச் செய்கின்ற மரியாதைதான். 1966 வரையில், நாங்கள் ஆட்சிக்கு வருவதற்கு முன்பு வரையில் தமிழகத்திலே கல்லூரி மாணவர்களுடைய எண்ணிக்கை 94 ஆயிரம் பேர். நாங்கள் ஆட்சியை விட்டு இறங்கிய 1975ஆம் ஆண்டு அந்த 94 ஆயிரம் கல்லூரி மாணவர்கள் என்பது 2 இலட்சம் கல்லூரி மாணவர்கள் என்ற நிலையை உருவாக்கினோம். **1967 வரையிலே இருந்த கல்லூரிகளினுடைய எண்ணிக்கை 92. 1975-ல் இருந்த கல்லூரிகளினுடைய எண்ணிக்கை 189.**

பிறகு, 1975ஆம் ஆண்டு **'அனாதைச் சிறுவர், மகளிர் மறுவாழ்வுத்திட்டம்', ஆதரவற்ற மகளிர்க்கு தையல் இயந்திரம் வழங்கும் திட்டம், கருணை இல்லங்கள் தொடங்கும் திட்டம், விதவை மறுமணத் திட்டம்**, இத்தனைத் திட்டங்களும் 1975-ல். 1975-லேதான் **மீனவ மக்களுக்கு சிங்கார வேலர் நினைவாக இலவச வீட்டு வசதித் திட்டம்** தொடங்கப்பட்டது.

**பெண்களுக்கும் சொத்துரிமை**

1989ஆம் ஆண்டு பெண்களுக்குச் சொத்துரிமைச் சட்டம், 29ஆவது ஆண்டு செங்கல்பட்டு சுயமரியாதை மாநாட்டில் நம்முடைய அவைத் தலைவருடைய



தந்தையார் **பி.டி.ராஜன்** அவர்களும், **W.P. சவுந்தரபாண்டியனாரும்** கலந்துகொண்ட அந்த மாநாட்டில் **பெரியாரால்** கொண்டு வந்து நிறைவேற்றப்பட்ட தீர்மானமான **பெண்களுக்குச் சொத்துரிமைச் சட்டம்** 1989ஆம் ஆண்டு இந்த அவையிலே நிறைவேற்றப்பட்டது. பிறகு 1989-ல் சபாநாயகம், ஐ.ஏ.எஸ்., தலைமையில் **இரண்டாவது போலீஸ் கமிஷன்** அமைக்கப்பட்டு அதனுடைய பரிந்துரைகள் ஏற்றுக்கொள்ளப்பட்டன. 1989-லேதான் **நலிந்த பிரிவினருக்கு இலவச வேட்டி சேலை வழங்குகின்ற திட்டத்தைத்** தொடங்கினோம். அதிலே ஒரு ஊரிலே கொடுக்கப்படவில்லை என்பதைச் சொன்னார்கள். அதற்கு காரணமும் சொன்னார்கள். நல்ல வேஷ்டி, சேலையாக இருப்பதால் எல்லோரும் கேட்கிறார்கள் என்பதையும் நம்முடைய எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் இங்கே எடுத்துக்கூறினார்கள். **80 இலட்சம் பேருக்கு இன்றைக்கு வேஷ்டியும், 70**

**இலட்சம் பேருக்குச் சேலையும் தரப்படுகின்றது** என்றால் அந்தத் திட்டத்தை 1989–லே இந்த அரசு அறிவித்தது. 1989–லே ஈ.வெ.ரா. நாகம்மையார் நினைவாக மகளிர் இலவசப் பட்டப்படிப்புத் திட்டம். ஆண்டு வருமானம் ரூபாய் 12 ஆயிரத்திற்குள் இருந்தால் என்று தொடங்கி, 1997–ல் அதை **24 ஆயிரம் ரூபாய் என்று அந்த வருமான வரம்பை உயர்த்தி நாகம்மையார் நினைவு மகளிர் இலவசப் பட்டப் படிப்புத் திட்டத்தை அறிமுகப்படுத்தியதும் இந்த அரசுதான்.**

### மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவுத் திருமண நிதியுதவித் திட்டம்

டாக்டர் முத்துலட்சுமி ரெட்டியினுடைய நினைவாக மகப்பேறு நிதியுதவித் திட்டம் 1989ஆம் ஆண்டு அறிவிக்கப்பட்டு, நிறைவேற்றிச் செயல்படுத்தியதும் இந்த அரசுதான். 1989–லேதான் மகளிருக்காக அரும்பாடுபட்ட மூவலூர் மூதாட்டியார் நினைவாக திருமண உதவித் திட்டம் 1989–லே **5 ஆயிரம் ரூபாய் என்று தொடங்கி 1996–ல் 10 ஆயிரம்** என்று அறிவிக்கப்பட்டு **128 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டு** இந்த **மூன்று ஆண்டுகளிலே மாத்திரம் 1 இலட்சத்து 28 ஆயிரம் பெண்கள் பயன் பெற்றிருக்கிறார்கள். இந்த ஆண்டிலே அதற்காக 70 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது.** இந்தத் திட்டம் 1989ஆம் ஆண்டு நான் மூன்றாவது முறையாக ஆட்சிப் பொறுப்பிலேயிருந்தபோது அறிமுகப்படுத்தப் பட்டு செயல்படுத்தப்பட்ட திட்டம்.

1989–லேதான் **பணியில் பெண்களுக்கு 30 விழுக்காடு ஒதுக்கீடு** என்று அறிவிக்கப்பட்டது. இன்றைக்கு எல்லாம் கட்சிப் பணியிலே ஒதுக்கீடு என்கிறார்கள். அன்றைக்கு அரசுப் பணியிலேயே 30 விழுக்காடு ஒதுக்கீடு செய்த ஆட்சி திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி.

### மிகப்பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை - 20% இடஒதுக்கீடு

1989–லேதான் **மிகப்பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை** தொடங்கப்பட்டது. அதுவரையிலே பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை என்று இருந்தது; தாழ்த்தப்பட்டோர் நலத்துறை என்று இருந்தது. மிகப் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை தொடங்கப்பட்டது 1989–லேதான். அதுமாத்திரமல்ல, அந்த 1989–லேதான் அதற்காக இரத்தம் சிந்தி, குண்டடிப்பட்டு உயிரைத் தத்தம் செய்தவர்களுக்கு எல்லாம் மரியாதை காட்டுகின்ற வகையிலே சிறப்பு அளித்தது மாத்திரமல்ல, அவர்களுடைய எண்ணம் ஈடேறுகின்ற வகையில் தனி ஒதுக்கீடாக **மிகவும் பிற்படுத்தப்பட்டோருக்கு 20 சதவீதம் என்று அறிவித்ததும் இந்த ஆட்சியிலேதான்.**

### பதிவு முன்னுரிமை அடிப்படையில் இடைநிலை ஆசிரியர் நியமனம்


அதே 89ஆம் ஆண்டுதான் வேலைவாய்ப்பு பதிவு முன்னுரிமைப்படி, இடைநிலை ஆசிரியர் நியமனத்தில் பதிவு முன்னுரிமை வேலைவாய்ப்பு அலுவலகத்திலே எப்படிப் பதிவு செய்திருக்கிறார்களோ அந்த முன்னுரிமையின்படி வேலைவாய்ப்பு அளிக்கப்பட்டது.

காரணம், இங்கே சொன்னார்களே நம்முடைய எதிர்க்கட்சித் தலைவரவர்கள், எது எதற்கு எவ்வளவு ரூபாய், எது எதற்கு எவ்வளவு ரூபாய் என்று. அவைகளெல்லாம் இந்த ஆசிரியர்களுடைய வேலைவாய்ப்பிலும் வந்து விடக்கூடாது என்பதற்காகத்தான். இவர்கள் சொன்னது சரியோ, இல்லையோ, நம்முடைய பேராசிரியர் பதில் அளித்திருக்கிறார். அவைகளை விசாரிக்கலாம். அடிமட்டம் வரையிலே எங்கே ஊழல் இருந்தாலும் அதைக் களைய வேண்டியது இந்த அரசினுடைய பொறுப்பு.

பெருந்தலைவர் காமராஜரே சொல்லியிருக்கிறார். ஊழல் ஊழல் என்கிறார்களே, என்ன ஊழல்? திருவள்ளுவர் காலத்திலேயிருந்து ஊழல் இருக்கிறது என்று காமராஜரே சொல்லியிருக்கிறார். புத்தகம் இருக்கிறது. அவர் எழுதிய புத்தகம். அவர் பேசிய பேச்சு. திருவள்ளுவர் காலத்திலேயிருந்து இலஞ்சம், ஊழல் இருந்து கொண்டுதான் இருக்கிறது, என்ன செய்ய முடியும் என்று பெருந்தலைவர் காமராஜரே கூறியிருக்கிறார். எனவே, பெருந்தலைவர் காமராஜராலேயே அகற்ற முடியாத அந்த ஊழலையும், இலஞ்சத்தையும் நாம் மேல்மட்டம் வரையிலே வராமல் பாதுகாத்துக் கொள்ளலாமே தவிர, கீழ்மட்டத்திலே நமக்கு தெரியாமல் எங்கேயோ ஒரு மூலையில், ஒரு கோடியில் யாரோ ஒருவர், அவர்களாகத் தருகிற 5 ரூபாயோ, 10 ரூபாயோ வாங்குவதைத் தடுப்பது என்பது அவ்வளவு சுலபமான காரியம் அல்ல. அவ்வளவு நீளத்திற்கு இந்தக் கையால் ஆகாதவர்களுக்குக் கையும் கிடையாது. அதையெல்லாம் கண்டுபிடித்துத் தடுப்பதற்குக் கைகள் கிடையாது.

### 3 ஆண்டுகளில் 31,108 இடைநிலை ஆசிரியர்கள் புதிதாக நியமனம்

91–96–ல் 8,450 இடைநிலை ஆசிரியர்கள் கடந்த கால ஆட்சியிலே நியமிக்கப்பட்டார்கள். அதில் எத்தனை கோடி ரூபாய் ஊழலாக, இலஞ்சமாகப் புரண்டது என்பது மாண்புமிகு உறுப்பினர்களுக் கெல்லாம் மிக நன்றாகத் தெரியும். ஆனால், 1996–க்குப் பிறகு இந்த 3 ஆண்டுக் காலத்தில்



வேலைவாய்ப்புப் பதிவக முன்னுரிமைப்படி நியமிக்கப்பட்ட ஆசிரியர்களுடைய எண்ணிக்கை எவ்வளவு தெரியுமா? 5 ஆண்டுக் காலத்திலே கடந்த ஆட்சியிலே, ஜெயலலிதா ஆட்சியிலே 8,450 பேர். இந்த மூன்று ஆண்டுக்காலத்திலே **31,108 இடைநிலை ஆசிரியர்கள் நியமிக்கப் பட்டிருக்கிறார்கள்.**

**புதிய பல்கலைக்கழகங்கள்**

89–லே நெல்லையிலே **மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக் கழகம்.** சென்னையிலே **தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக்கழகம்;** சென்னையில் **தமிழ்நாடு கால்நடை அறிவியல் மருத்துவப் பல்கலைக் கழகம்.**

89–ல் 8ஆம் வகுப்பு வரை **மாணவர்களுக்கு இலவசப் பேருந்து பயணச் சலுகை.** அது **இப்பொழுது விரிவுபடுத்தப்பட்டு 12ஆம் வகுப்பு வரை இலவசப் பேருந்து பயணச்சலுகை.**

**89–90–ல் தாழ்த்தப்பட்டவர்களுக்கு பட்டப் படிப்பு வரை இலவசக் கல்வி. 89–90–ல் மிகப் பிற்படுத்தப்பட்டவர்களுக்குப் பட்டப்படிப்பு வரை இலவசக் கல்வி.**

90ஆம் ஆண்டில் மலைவாழ் மக்களுக்கு ஒரு விழுக்காடு தனி ஒதுக்கீடு – ரிசர்வேஷனில். 19ஆக அன்று இருந்ததை 18 என்று ஆதிதிராவிடர்களுக்கு ஒதுக்கிவிட்டு **ஒரு விழுக்காடு எஸ்.டி.க்கு மலைவாழ் மக்களுக்கு என்று ஒதுக்கப்பட்டது.**

**1990**ஆம் ஆண்டு **விவசாயிகளுக்கு இலவச மின்சாரம்.** இந்தியாவுக்கே வழிகாட்டிய மாநிலம் என்ற வகையில் இலவச மின்சாரம் விவசாயிகளுக்கு அளித்தது.

**90–91–ல்** பிற்படுத்தப்பட்டவர்களுக்கு வருவாய் வரம்புக்கு உட்பட்டு **பட்டப்படிப்பு வரை இலவசக்கல்வி.**

**44,000 பெண்களுக்கு உள்ளாட்சி அமைப்புகளில் பதவி**

**96–ல்** உள்ளாட்சித் தேர்தல், பெண்களுக்கு 33 விழுக்காடு ஒதுக்கீடு. 2 பெண் மேயர் உட்பட 44,143 பதவிகளில் பெண்கள் உள்ளாட்சிகளிலே அமர்ந்திருக்கிறார்கள். 44 ஆயிரம் பேர் இன்றைக்குப் பெண்கள் உள்ளாட்சி அமைப்புகளிலே அமர்ந்திருக்கின்றார்கள்.

**உயர் கல்விப் படிப்பில் புதிய சலுகைகள்**

**96–97–க்குப்** பின் மாநில, மாவட்ட அளவில் 10, 12ஆம் வகுப்புத் தேர்வுகளில் முதல் 3 இடங்கள் பெறும் மாணவ–மாணவியர்களுக்கு உயர் கல்விச் செலவை அரசே ஏற்கும் என்ற திட்டம்.

**96–ல்,** பட்டதாரி இல்லாக் குடும்ப மாணவர்களில் ஒவ்வொரு தொழில் கல்வியிலும் சேரும் முதல் பத்து நிலை மாணவர்களின் கல்விச் செலவை அரசே ஏற்கும். பட்டதாரியே இல்லாத குடும்பத்திலேயிருந்து, அது பிற்படுத்தப்பட்ட குடும்பமாக இருந்தாலும் சரி, பிராமணர்கள் வீட்டுக் குடும்பமாக இருந்தாலும் சரி, அங்கே பட்டதாரியே இல்லை என்றால் அங்கிருந்து வருகின்ற ஒரு மாணவனுக்கு அவன் எடுக்கின்ற மதிப்பெண்களைப் பொறுத்து 10 மாணவர்களை அதிலே பொறுக்கியெடுத்து அவர் விரும்புகின்ற தொழிற்கல்வி எதுவானாலும், மருத்துவக் கல்வியானாலும், என்ஜினியரிங் கல்லூரியானாலும், வேளாண்மையானாலும், சட்டப்படிப்பானாலும் அதிலே அவர்கள் சேர்வதற்கான அந்த உரிமை மாத்திரம் அல்ல; அதற்கான கல்விச் செலவு முழுமையும் அரசே ஏற்கும் என்ற திட்டம் அந்தத் திட்டம்.



**புதிய துறைகள் உருவாக்கம்**

**96–ல்** தான் தமிழ் வளர்ச்சிக்குத் தனி அமைச்சகம். தலைமைச் செயலகத்தில் நெடுஞ்சாலைத் துறை புதிய அறிமுகம். **1997–ல்** உயர்கல்வித் துறை புதிதாக




அறிமுகம். 1998-ல் நெடுஞ்சாலைத் துறைக்கு அமைச்சகம். தகவல் தொழில்நுட்பத் துறை அறிமுகம்.

1997-ல் கிராமப்புற மாணவர்களுக்குத் தொழிற்கல்வியில் 15 விழுக்காடு இட ஒதுக்கீடு. அதிலே நண்பர் மணி சொன்னதைப்போல, இருக்கின்ற குறைபாடுகளைக் களைவதற்காக சில முயற்சிகளை அரசு இன்றைக்கு எடுத்திருக்கின்றது. 1997-ல் சேலத்திலே பெரியார் பல்கலைக்கழகம். சென்னையில் டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகம். சென்னை மருத்துவக் கல்லூரி நிகர்நிலைப் பல்கலைக்கழகமாக நிலை உயர்த்தப்பட்டது.

1997-ல் 100 சமத்துவபுரங்கள் அமைக்க 35 கோடி ரூபாய் ஒதுக்கீடு. இதுவரை 14 சமத்துவபுரங்கள் திறக்கப்பட்டுள்ளன. வருகிற ஆண்டில் 17.5 கோடி ரூபாய் செலவில் மேலும் 50 சமத்துவபுரங்கள். **பெரியார் நினைவு சமத்துவ புரங்களாக இவைகள் எல்லாம் விளங்கும்.**

**தூர் வாரும் பணிகள்**

1997 முதல் கடந்த இரண்டாண்டுகளில் தூர்வாரும் பணிகளுக்கு மாத்திரம் 58 கோடி ரூபாய், வெள்ளச் சேதங்களைத் தடுக்கவும், விவசாயிகள் பயனுறவுமான திட்டம்; பராந்தக சோழன் காலத்திலே என்று சொன்னாரே நம்முடைய பரிதி இளம்வழுதி, அதைப் போல அந்தக் காலத்திலிருந்து தூர் வாரப்படாத இந்த ஆறுகள், வாய்க்கால்கள் எல்லாம் 58 கோடி ரூபாய்ச் செலவில் தூர் வாரப்பட்டன.



**வளர்ச்சிப்பணிகளில் புதிய திட்டங்கள்**

1997-98-ல் **சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம்.** ஒரு உறுப்பினருக்கு ரூ.25 இலட்சம். 1998-99-ல் அது ரூ.35 இலட்சம். **இந்த ஆண்டு ரூ.50 இலட்சம்.** 1997-98-ல் **'நமக்கு நாமே திட்டம்'.** நம்முடைய எதிர்க்கட்சித்தலைவர் கூட இங்கே பாராட்டினாரே, அந்த நமக்கு நாமே திட்டத்திற்கு 5 கோடி ரூபாய் தனி ஒதுக்கீடு. 1998-99-ல் 10 கோடி ரூபாய், வரும் ஆண்டிற்கும் 10 கோடி ரூபாய். 1997-98-ல் **'அண்ணா மறுமலர்ச்சித் திட்டம்'** அறிமுகம். அதற்குச் சிறப்பு நிதி ஒதுக்கீடு 52 கோடி ரூபாய். 1998-99-ல் 75 கோடி ரூபாய். வரும் ஆண்டிலும் 75 கோடி ரூபாய்.

**சமுதாய இணைய மையங்கள் அறிமுகம்**

1998ஆம் ஆண்டு தகவல் தொழில்நுட்பத் துறை அறிமுகம். 8-10-1998-ல் தகவல் தொழில்நுட்ப பணி முனைப்புக் குழு அமைப்பு. 1998-ல் World Tel நிறுவன உதவியோடு தமிழகம் முழுவதும் 13,000 சமுதாய இணைய மையங்கள் - Community Internet Centres அமைக்கும் திட்டம் ஒரு இலட்சத்து ஐம்பதாயிரம் இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்கப்படும் என்ற நிலையில்.

1998-99-ல் **மினி பஸ் திட்டம்.** அது நல்லமுறையில் செயல்படுகின்றது என்றாலும்,




இந்த நிதிநிலை அறிக்கையில் அறிவிக்கப் பட்ட திட்டங்களையும் நினைவு கூறவேண்டும். ஏனென்றால், கடந்த நான்கைந்து நாட்களில் நிதிநிலை அறிக்கை என்ற ஒன்று இங்கே வைக்கப்பட்டதே பல பேருக்கு மறந்து போய் விட்டது. நான் கூட தலைவர்கள் அவர்களே, உங்களுடைய அனுமதி பெற்று, மீண்டும் இன்றைக்கு நிதிநிலை அறிக்கையைப் படித்துவிட்டு மறுபடியும் உறுப்பினர்களைப் பேசச் சொல்லலாம் என்றுகூட எண்ணினேன்.

ஆனால், இவ்வளவு சங்கடங்களுக்கு இடையிலும்கூட தங்களுடைய கடமையை ஆற்ற வேண்டும் என்று எண்ணிய கண்ணியம் மிகுந்த உறுப்பினர்கள் அந்தக் கடமையை ஆற்றியிருக் கிறார்கள் என்பதை அவர்கள் பேசிய பேச்சுக்களைப் படித்துப் பார்த்து நான் உணர்ந்துள்ள காரணத்தினால், அந்த அறிக்கையிலே என்னென்ன திட்டங்களைச் சொல்லியிருக்கிறோம் என்பதை மாத்திரம் சொல்ல விரும்புகிறேன்.

எந்தத் திட்டங்களும் இல்லை என்று நம்முடைய நண்பர் அழகிரி எம்.எல்.ஏ. அவர்கள் ஒரு பத்திரிகையிலே சொல்லியிருக்கிறார்.

- ★ **450 கோடி ரூபாய் செலவில் 208 பாலங்கள் இந்த அறிக்கையிலே சொல்லப்பட்டிருக்கிறது; 20 கோடி ரூபாய் செலவில் காரனோடை பாலம்; 12 கோடி ரூபாய் செலவில் கரூர் பாலம்.**
- ★ **43 கோடி ரூபாய் செலவில் தாம்பரத்திலிருந்து மதுரவாயல் வரையில் சென்னை புறவழிச் சாலை.**
- ★ **36 கோடி ரூபாய் செலவில் மதுரை புறவழிச் சாலை.**

நீதிமன்றத்தினுடைய இடைக்காலத் தீர்ப்பால் எல்லா இடங்களிலும் செயல்பட முடியாத சூழ்நிலை. இந்த ஆண்டு 1999–ல் **'மகளிர் சிறு வணிகக் கடன் திட்டம்'** சென்னையிலே தொடங்கப்பட்டு, ஆறு மாநகராட்சி மன்றங்களிலும் – சென்னை, சேலம், கோவை, மதுரை, திருச்சி, நெல்லை என்று எல்லா மாநகராட்சி மன்றங்களிலும் இன்றைக்கு இதுவரையிலே, இந்த ஒரு வார காலத்திலே மாத்திரம் – இது ஆரம்பிக்கப்பட்டது கடந்த மாதம் என்றாலும் கூட, இந்த ஒருவார காலத்தில், ஒரேநாளில், துறையினுடைய அமைச்சர் நேரு அவர்கள் நேரில் சென்றிருந்து இது ஆரம்பிக்கப்பட்டு, 6,000 மகளிர் இந்த சிறு வணிகக் கடன் திட்டத்தால் பயன்பெற்றுக் கொண்டிருக்கின்றார்கள். அவர்கள் கடன் வாங்கும்போதே, ஒரு ரூபாய் வட்டி. அவர்கள் வேறு யாரிடமாவது வாங்கினால் 10% அல்லது 15% வட்டி தரவேண்டும். வெறும் ஒரு ரூபாய் வட்டிக்கு, 100 ரூபாய் வாங்கினால் 99 ரூபாய் கொடுப்பார்கள். மறுநாள் 100 ரூபாயைத் திருப்பிக் கொடுத்துவிட்டு மறுபடியும் கடன் வாங்கலாம் என்கின்ற அளவுக்கு அந்தக் கடனை வாங்கி, சிறு சிறு தொழிலை ஆரம்பிக்கலாம் என்கின்ற அளவுக்கு ஒரு மகத்தான திட்டம். இவ்வளவும் 1969 முதல் இன்று வரையில் – இந்த எளியோனால் – இந்த எளியோன் ஏற்றுக்கொண்ட பொறுப்பால் – தமிழகத்துக்கு வழக்கமான வளர்ச்சித் திட்டங்களன்னியில், புதியதாக, சமுதாயத் திட்டங்களாக, பொருளாதார ஏற்றங்களுக்கானத்திட்டங்களாக அறிவிக்கப்பட்டு, செயல்படுத்தப் பட்டு வருகின்றன என்பதை, இந்த 12ஆவது நிதிநிலை அறிக்கையைப் படித்து, அதற்கான விவாதத்திற்குப் பதிலைக் கூறுகின்ற நேரத்தில் நான் நினைவுபடுத்தக் கடமைப் பட்டிருக்கின்றேன்.



★ 92 கோடி ரூபாய் செலவில் கோவை புறவழிச் சாலை.

★ 212 கோடி ரூபாய் செலவில் சென்னை மாநகரத்தில் ஆரச் சாலைகளை மேம்படுத்தும் பணி.

★ 256 கோடி ரூபாய் செலவில் 'நபார்டு' உதவியோடு ஊரக அடிப்படைக் கட்டமைப்பு வசதிகள்.

★ 500 முதல் 1000 வரை மக்கள் தொகை கொண்ட கிராமங்களுக்கு இணைப்புச் சாலை. 1000க்கு மேற்பட்ட மக்கள் தொகை கொண்ட எஞ்சிய 301 கிராமங்களுக்கும் இணைப்புச் சாலை.



★ சாலைப் பராமரிப்புக்காக 270 கோடி ரூபாய். 75,850 எக்டேர் பரப்பில் 96.73 கோடி ரூபாய் செலவில் காடு வளர்ப்புப் பணி.

★ 50 கோடி ரூபாய் செலவில் தூர் வாரும் பணி, மேலும் இந்த ஆண்டு.

★ 219 கோடி ரூபாய் செலவில் பாசன மேம்பாட்டுத் திட்டங்கள்.

★ 8.94 கோடி ரூபாய் செலவில் நிலையூர் கால்வாய்த் திட்டம்.

★ 16.79 கோடி ரூபாய் செலவில் மிருகண்டா நதித் திட்டம்.

★ 23 கோடி ரூபாய் மதிப்பீட்டில் உள்ளாறு நீர்த் தேக்கத் திட்டம்.

★ 6 கோடி ரூபாய் மதிப்பீட்டில் முக்கொம்பு பலப்படுத்தும் திட்டம்.

★ 9.5 கோடி ரூபாய் செலவில் மாம்பழத்துறையார் திட்டம்.

★ 26.52 கோடி ரூபாய் செலவில் 18ஆம் கால்வாய்த் திட்டம்.

★ 14.8 கோடி ரூபாய் செலவில் மீனவர்களுக்கு நாலாயிரம் வீடுகள் கட்டும் திட்டம்.

★ 10 ஆயிரம் எக்டேரில் தரிசு நில மேம்பாட்டுத் திட்டம்.

★ காய்கறிகள், பழங்கள் பயிரிடும் விவசாயிகளுக்கு நியாய விலை கிடைக்கப் புதிய திட்டம்.

★ 40.52 கோடி ரூபாய் மதிப்பீட்டில், தோட்டக் கலை உற்பத்திப் பொருட்களைச் சேமித்து வைக்க குளிர்பதன சேமிப்புக் கிடங்குகள்.

★ சென்னையில் – கூவம், அடையாறு, பக்கிங்காம் கால்வாய், ஓட்டேரி நல்லா தூர் வாரும் மிகப் பெரும் திட்டம்.

★ 150 கோடி ரூபாய் செலவிலே 10 நகராட்சிகளில் மற்றும் 25 பேரூராட்சிகளில் குடிநீர் வழங்குதலை மேம்படுத்த பொன்விழா ஆண்டு சிறப்புத் திட்டம்.



★ 6,300 ஊரகக் குடியிருப்புகளுக்கு 450 கோடி ரூபாய் செலவில் குடிநீர் வசதி செய்யும் திட்டம்.

★ 1,200 அனைத்து அரசு மேல்நிலைப் பள்ளிகளிலும் கணினி பயிற்றுவிக்கும் திட்டம்.


★ உலகத் தமிழ் இணைய பல்கலைக்கழகம் Tamil Virtual University அமைக்கும் திட்டம்.

★ 14 வயது வரை அனைத்துச் சிறார்களுக்கும் கட்டாயக் கல்வி அளிக்கும் திட்டம் வாழ்வொளித் திட்டம்.

★ ஒரு இலட்சம் பேருக்கு இலவச கண் உள்ளாடி (LENS) வழங்குகின்றத் திட்டம்.

★ தமிழக வரலாற்றைத் தொகுத்து நிரந்தரக் கண்காட்சி அமைக்கும் திட்டம்.

★ 52.6 கோடி ரூபாய் செலவில் தீப்பிடிக்காத கல்நார் கூரை வீடுகள் 42,089 குடிசை வாழ் மக்களுக்குக் கட்டும் திட்டம். டெல்லியிலே தீப்பிடித்து எரிந்த பிறகு, டெல்லியிலே உள்ளவர்கள் சென்னைக்கு வந்து, இந்தத் திட்டத்தைப்பற்றி, நம்முடைய அதிகாரிகளிடத்திலே பேசி, இந்தத் திட்டம் நிறைவேற்றப்படுகின்ற இடத்தையும் பார்வையிட்டு விட்டுச் சென்றிருக்கிறார்கள் என்றால், இந்தத் திட்டத்தின் பெருமையை நீங்கள் அறிந்து கொள்ளலாம். 52.6 கோடி ரூபாய் செலவில் தீப்பிடிக்காத கல்நார் கூரை வீடுகள் 42,089 குடிசை வாழ் மக்களுக்குக் கட்டும் திட்டம்.



★ மனிதக் கழிவுகளை மனிதன் அகற்றும் இழிவைப் போக்கும் திட்டத்தின் தொடர்ச்சி.

★ நெசவாளர்களுக்கு காப்பீட்டுத் தொகை உயர்வு.

★ தென் மாவட்டங்களில் பொருளாதார வளர்ச்சிக்கான திட்டத்தை வரைய தனிக்குழு. இந்தத் திட்டத்தில் புதுக்கோட்டையைச் சேர்க்கவில்லை என்று தம்பி திருநாவுக்கரசும், கன்னியாகுமரியைச் சேர்க்கவில்லை என்று திரு.மணி அவர்களும் சொன்னார்கள். இரண்டு மாவட்டங்களும் இதிலே சேர்க்கப்படும் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

★ சென்னையை அடுத்த ஒக்கியம் – துரைப்பாக்கத்தில் 37.5 கோடி ரூபாய் செலவில் 3,000 அடுக்குமாடிக் குடியிருப்புகள் உருவாக்கும் திட்டம்.

★ சென்னையிலும், ஏனைய நகரங்களிலும் 6 கோடி ரூபாய் செலவில் குடிசையிலே வாழும் 30,000 குடும்பங்களுக்கு அடிப்படை வசதிகள் செய்து தரும் திட்டம்.

★ வருமானச் சான்றிதழ், சாதிச் சான்றிதழ், இருப்பிடச் சான்றிதழ் இவைகளை ஒருசேர பள்ளியிலே வழங்க புதிய திட்டம்.

**தொடக்கப் பள்ளிகள் இல்லாத குக்கிராமங்களே இல்லை என்ற நிலையை இந்த ஆண்டு உருவாக்கும் திட்டம்**, மாணவர்களை விளையாட்டுப் போட்டிகளில் ஊக்குவிக்க புதிய சிறப்புத் திட்டம், சட்டமன்ற உறுப்பினர் மேம்பாட்டுத் திட்டத்திற்கு உறுப்பினர் களுடைய கோரிக்கையை ஏற்று 50 இலட்சம் ரூபாய் வீதம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்ட இந்த செயல், இவைகள் எல்லாம் அடங்கியுள்ளதுதான், எதுவுமே இல்லை இந்த நிதிநிலை அறிக்கையிலே என்று

வர்ணிக்கப்பட்ட இந்த வரவு-செலவுத் திட்டத்திலே இருக்கின்றவைகள்.

**ஒவ்வொரு சொல்லையும் அளந்து சொல்ல வேண்டும்**

எடுத்த எடுப்பிலே நம்முடைய எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்கூட, பத்திரிகையாளர்கள் கேட்டபோது, 'உருப்படியா ஒன்றும் கிடையாது' என்று அவர் சொன்னது பத்திரிகையிலே வந்தது; படித்துப் பார்த்தேன். அவர் என்னைவிட மூத்தவர் அல்ல என்றாலும்கூட தோற்றத்திற்கு என்னைவிட மூத்தவராகத்தான் தெரிவார். இந்த அவையிலே நல்ல அனுபவம் உள்ளவர். உருப்படியாக தெரியாவிட்டாலும்கூட, நாம் தோழமைக் கட்சியைச் சேர்ந்தவர்கள், நான் ஏதோ கட்சியோ, அணியோ சேர்ப்பதாக யாரும் கருதக்கூடாது. நம்முடைய ஒவ்வொரு சொல்லையும் பயன்படுத்திக்கொள்ள மாற்றார் தயாராக இருக்கின்றார்கள். எனவே ஒவ்வொரு சொல்லையும் நாம் அளந்து சொல்ல வேண்டியவர்களாக இருக்கின்றோம் என்பதற்காகத்தான் இதைச் சொல்கின்றேன். சொல் ஒன்றுதான் கீழே உதிர்ந்தால் மறுபடியும் எடுத்து வாயிலே போட்டுக்கொள்ள முடியாதது, பல் உதிர்ந்தால்கூட மாற்று பல் வைத்துக்கொள்ளலாம், ஆனால் சொல் உதிர்ந்தால் அதற்காக ஒரு மாற்று சொல்லை வைத்துக்கொள்ள முடியாது. எனவே தோழமைக் கட்சி, கூட்டணியிலே இருக்கின்ற எல்லோரும் எல்லா தொண்டர்களும், செயல் வீரர்களும் அவரவர்களும் மனம் சுணங்குகின்ற அளவிற்கான வார்த்தைகளை வெளிப்படுத்தாமல் மிகுந்த எச்சரிக்கையோடு இருக்க வேண்டும். அப்படி வெளிப்பட்ட காரணத்தால் கடந்த காலத்திலே நாடாளுமன்ற தேர்தலிலே நமக்கு ஏற்பட்ட அனுபவம் தொண்டர்களுடைய சோர்வினால் ஏற்பட்ட விளைவு என்பதை நாம் நன்றாக அறிந்திருக்கிறோம். அதனால்தான் இதைச் சொல்கிறேனே அல்லாமல் வேறல்ல. இந்த வரவு-செலவுத் திட்டத்தைப் பற்றி 'பிசினஸ் ஸ்டாண்டர்டு' 10ஆம் தேதி எழுதும்போது குறிப்பிடுகிறது. மாநிலங்களின் திட்ட நிதி ஒதுக்கீட்டு அளவை அதிகரிப்பதற்கு,

Pant gets tough on hike in State Plan size

– என்ற தலைப்பில் வெளியான செய்தியில் பின்வரும் கருத்தை 'பிசினஸ் ஸ்டாண்டர்டு' அறிவிக்கிறது.

"Tamil Nadu has obtained a 17 percent increase in Plan size for 1999-2000 over 1998-99"

அதாவது, தமிழ்நாடு 1998–99ஆம் ஆண்டைவிட, 1999–2000 ஆண்டு திட்ட ஒதுக்கீட்டிற்கு 17 விழுக்காடு கூடுதலாகப் பெற்றுள்ளது.

"Yojana Bhavan sources said they were impressed by the fiscal management of the Tamil Nadu Government..."

நிதி ஆதாரங்களைக் கண்டறிந்து திட்டங்களை செவ்வனே நிறைவேற்றுவதில் தமிழ்நாட்டின் திறமை பாராட்டத்தக்க முறையிலே உள்ளதாக திட்டக் கமிஷன் அலுவலகம் கருதுகிறது.

Yojana Bhavan என்பது

திட்டக் கமிஷன் அலுவலகம், அதற்கு இந்தியிலே உள்ள சொல் அது. இதை பிசினஸ் ஸ்டாண்டர்டு பத்திரிகை குறிப்பிடுகிறது.

'பிசினஸ் லைன்' பத்திரிகையில்,

"40% of the Budgetary allocation in Tamil Nadu will go towards strengthening the economic infrastructure; 35% towards social sectors and the rest towards agriculture and rural development. The State expects a 6% average in State Development Product in 1997-98 and 1998-99"

தமிழ்நாட்டின் நிதி ஒதுக்கீட்டில் 40 விழுக்காடு நிர்வாகக் கட்டமைப்பை பலப்படுத்தவும், 35 விழுக்காடு சமூக மேம்பாட்டுத் துறைகளுக்கும், எஞ்சியவை வேளாண்மை வளர்ச்சி, கிராம வளர்ச்சி போன்றத் துறைகளின் நிர்வாக மேம்பாட்டிற்காகவும் செலவிடப்படுகிறது. 1997–98, 1998–99 ஆகிய ஆண்டுகளில் தமிழ்நாட்டின் சராசரி உற்பத்தி விகிதம் 6 விழுக்காடாக இருக்குமென்று எதிர்பார்க்கப்படுகிறது என்று 'பிசினஸ் லைன்' கூறியுள்ளது.

இங்கே இந்த நிதிநிலை அறிக்கையிலே விவாதத்தைத் தொடங்கிவைத்த என்னுடைய நண்பர், சட்டமன்ற உறுப்பினர் ஞானசேகரன் அவர்கள் பேசும்போது, வறுமைக் கோட்டைப் பற்றி குறிப்பிட்டிருக்கிறீர்களே, வறுமைக் கோட்டினுடைய அளவு குறைந்திருப்பதாக சொல்லியிருக்கிறீர்களே, இது எங்கே இந்த விவரம் உங்களுக்கு கிடைத்தது என்றவொரு பிரச்சினையை எழுப்பியிருக்கிறார். தமிழகத்தில் 1996–97ஆம் ஆண்டிற்கான பொருளாதார ஆய்வறிக்கை தற்போதுதானே வெளிவந்திருக்கிறது, அப்படியிருக்க 1997–98ஆம் ஆண்டிற்கான வறுமைக்கோட்டிற்குக் கீழே வாழும் மக்கள் தொகையின் விவரங்களை அரசு எவ்வாறு கண்டுபிடித்து வழங்கியுள்ளது என்று கேட்டார். நான் அவருக்கு தருகின்ற விளக்கம் – அவர் பதிலாக எடுத்துக்கொள்ளக்கூடாது – விளக்கமாக எடுத்துக்கொள்ள வேண்டும் –

Evaluation and Applied Research Department

– என்ற ஒன்று இருக்கிறது; அவருக்கும் தெரியும். அதாவது, மதிப்பீடு மற்றும் செயல்முறை ஆராய்ச்சித்துறை.

தமிழ்நாட்டின் பொருளாதார ஆய்வறிக்கையை ஒவ்வொரு ஆண்டும் தயாரித்து அது வெளியிடுகிறது. அண்மையில் 1996–97ஆம் ஆண்டிற்கான பொருளாதார ஆய்வறிக்கை அத்துறையால் வெளியிடப்பட்டுள்ளது. திரு. ஞானசேகரன் அவர்கள் கூறியதைப்போல, 1997–98ஆம் ஆண்டிற்கு மாநில பொருளாதாரத்தின் முக்கிய துறைகளின் செயல்பாடுகள் பற்றி விரிவான ஆய்வுப் பணிகளில் அந்தத்துறை இப்போது ஈடுபட்டுள்ளது. இது தொடர்பாக மாநில வருவாய், விவசாயம், வேலைவாய்ப்பு, சமூகநலம் போன்ற துறைகளின் செயல்பாட்டினை ஆராய்ந்து அதற்கான வரைவு அறிக்கை (Draft Report) தயார் செய்யப்பட்டுவிட்டது. அந்த வரைவு அறிக்கையிலிருந்து எடுத்த விவரங்கள்தான் நிதிநிலை அறிக்கையிலே குறிப்பிடப் பட்டிருக்கிறது என்பதை திரு. ஞானசேகரன் அவர்களுக்கு நான் தெரிவித்துக்கொள்கிறேன். அனைத்துத் துறைகளுக்கான வரைவு ஆய்வுகளையும் மே மாத இறுதிக்குள் முடித்து ஜூன், ஜூலையில் இத்துறை வெளியிடத் திட்டமிட்டிருக்கிறது.

**வறுமைக்கோட்டிற்குக் கீழே வாழ்வோர் தொகை குறைவு**

சமூக நலம் தொடர்பான ஆய்வில் மத்திய திட்டக் குழுவின் ஆய்வு முறைப்படி தேசிய மாதிரி ஆய்வு நிறுவனத்தின் National Sample Survey Organisation 50ஆவது சுற்றின் விவரங்களையும், மாநில மொத்த உற்பத்தி வளர்ச்சி, தனி நபர் வருமானம் போன்ற விவரங்களையும் கொண்டு தமிழகத்தில் வறுமைக் கோட்டிற்குக் கீழே வாழும் மொத்த மக்கள் தொகையின் விழுக்காடு கணக்கிடப் பட்டுள்ளது. அதன்படி தமிழ்நாட்டில் வறுமைக் கோட்டிற்குக் கீழே வாழ்வோர் தொகை கிராமப் பகுதிகளில் 1993–94–ல் 32.48 விழுக்காடாக இருந்து, 1997–98–ல் 24.72 விழுக்காடாகவும், நகர்ப் பகுதிகளில் 39.77 விழுக்காடாக இருந்து 32.70 விழுக்காடாகவும் குறைந்துள்ளது. மொத்தத்தில் தமிழகத்திலே வறுமைக் கோட்டிற்குக் கீழே வாழ்வோரின் தொகை 1993–94ஆம் ஆண்டில் 35.03 விழுக்காடாகவும் 1996–97ஆம் ஆண்டில் 30.73 விழுக்காடாகவும் இருந்து 1997–98–ல் 27.58 என்ற விழுக்காடாகக் குறைந்துள்ளது என்பதை நான் மிகுந்த மகிழ்ச்சியோடு அன்றைக்கும் தெரிவித்தேன். இன்றைக்கும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**ஒட்டுமொத்தப் பற்றாக்குறை குறைந்ததற்கான காரணங்கள்**

திரு.ஞானசேகரன் இன்னொன்றையும் கேட்டார். மூலதன கணக்கிலே திட்டச் செலவு குறைந்துவிட்டதா என்ற ஒரு பிரச்சினையை எழுப்பினார். 1998–99ஆம் ஆண்டிற்கான திருத்த மதிப்பீட்டில் ஒட்டுமொத்தப் பற்றாக்குறை குறைந்ததற்கு, மூலதனச் செலவுத் திட்டங்களில் செலவு குறைந்ததுதான் காரணம் என்ற ஒரு பிரச்சினையை அவர் எழுப்பினார். 1998–99ஆம் ஆண்டின் ஒட்டுமொத்தப் பற்றாக்குறை வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில் 876.67 கோடி ரூபாயிலிருந்து 1998–99ஆம் ஆண்டு திருத்த மதிப்பீட்டில் 235.73 கோடியாக அதாவது 640.94 கோடி ரூபாய் குறைந்துள்ளது, உண்மை. இதில் மூலதனச் செலவில் ஏற்பட்டுள்ள குறைவு 404 கோடி ரூபாய். இதற்கான முக்கிய காரணங்கள், விவசாயிகளுக்கு இலவச மின்சாரம் வழங்கியதற்காக தமிழ்நாடு மின்சார வாரியத்தில் அரசின் பங்கு தொகையை கூடுதல் மானியமாக வருவாய்க் கணக்கில் மாற்றி அமைத்ததால் – மூலதனக் கணக்கில் 314 கோடி ரூபாய் குறைந்துள்ளது. இது தவிர, உலக வங்கி நிதியுதவியுடன் செயல்படவுள்ள சாலைத் திட்டத்திற்கு உலக வங்கியின் ஒப்புதல் இதுவரை கிடைக்காததால், அந்தத் திட்டத்திற்காக 1998–99ஆம் ஆண்டு வரவு–செலவுத் திட்டத்தில் மதிப்பிடப்பட்ட 70 கோடி ரூபாய் என்பது திருத்த மதிப்பீட்டில் 18 கோடி ரூபாயாக குறைந்துள்ளது..

கல்வி, மருத்துவம் மற்றும் பொது சுகாதாரம், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலன், பிற்படுத்தப்பட்டோர் நலன், சமூகப் பாதுகாப்பு நலன் போன்ற மற்ற இனங்களில் மூலதனச் செலவிற்கு திருத்திய மதிப்பீட்டில் அதிக நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்பதையும் தெரிவித்துக் கொள்கின்றேன். வருவாய்க் கணக்கில் பற்றாக்குறை 23 கோடி ரூபாய் குறைந்துள்ளது. பொதுக்கணக்கில் உபரி 359 கோடி ரூபாய் அதிகரித்துள்ளது. இதன் விளைவாக ஒட்டுமொத்தப் பற்றாக்குறை திருத்திய மதிப்பீட்டில் 640.94 கோடி ரூபாய் குறைந்துள்ளது என்பதை நான் விளக்கமாக தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.

நம்முடைய எம்.ஜி.ஆர். அதிமுகவினுடைய தலைவர் திரு. திருநாவுக்கரசு அவர்கள் திருத்த மதிப்பீட்டில் குறைவதற்கு என்ன காரணம், வரவு கணக்கில், என்ற ஒரு வினா எழுப்பினார். அவர் அதை ஒரு தாக்குதல் கணையாக அதைத் தொடுக்காமல் ஒரு விளக்கம் பெறுவதற்காக அதைக் கேட்டார். வருவாய் கணக்கில் 1998–99–ல் திட்ட மதிப்பீடு 15,039 கோடி ரூபாய் என்று கடந்த ஆண்டு குறிப்பிடப்பட்டிருந்தது என்றும் அது திருத்த மதிப்பீட்டில் 14,198 கோடி ரூபாயாகக் குறைந்துவிட்டது என்றும், அதற்கு முக்கிய காரணம், மத்திய வரிகளின் பங்கும், மாநிலத்தின் சொத்து வரி வருவாயும் 1998–99ஆம் ஆண்டுக்கான திருத்திய மதிப்பீட்டில் குறைந்துவிட்டதே, என்ன காரணம் என்றும்

அவர் கேட்டார். 1997-98ஆம் ஆண்டின் கணக்கின்படி மத்திய வரிகளின் பங்காக நமது மாநில அரசுக்கு 2,728 கோடி ரூபாய் கிடைத்தது. 1998-99ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் மத்திய வரிகளின் பங்கை நாம் ரூ.2,920 கோடியாக இருக்குமென்று கடந்த ஆண்டு திட்ட மதிப்பீட்டில் குறிப்பிட்டிருந்தோம். நமது மாநிலத்தின் நிதிநிலை அறிக்கை கடந்த ஆண்டு, மத்திய அரசு நிதிநிலை அறிக்கை அளிப்பதற்கு முன்பாகவே தயாரிக்கப்பட்டதால், அந்தச் சமயத்தில் மத்திய அரசும், மத்திய திட்டக் குழுவும் தெரிவித்தபடி மதிப்பீடுகள் நிர்ணயிக்கப்பட வேண்டியிருந்தன. ஆனால், மத்திய அரசு அதன் நிதி நிலை அறிக்கையை தாக்கல் செய்யும்போது இன்னும் குறைத்து மாநில அரசின் பங்கு ரூபாய் 2,413 கோடியாக குறைத்து மதிப்பிட்டது. இவ்வாண்டு மத்திய அரசு தாக்கல் செய்த நிதிநிலை அறிக்கையின்படி நமது மாநிலத்திற்கு 1998-99-ல் ரூ.2,408 கோடி மத்திய வரிகளில் நமது மாநிலத்தின் பங்காக மத்திய அரசு தெரிவித்திருந்தது. மத்திய அரசு வரி வசூல் குறைவும், தாமாகவே முன்வந்து வருமானத்தை தெரிவிக்கும் திட்டத்திலும், (VDIS) மாநில அரசின் பங்கு முழுமையாக கடந்த ஆண்டிலே அளித்ததே இக்குறைவுக்குக் காரணம். கடந்த ஆண்டிலேயே அளித்துவிட்டார்கள்.

### திருத்திய மதிப்பீட்டில் வரிவருவாய் குறைவுக்குக் காரணம்

ஆனால், இந்த ஆண்டு அவர்கள் அளிக்கவில்லை. அது இந்தக் குறைவுக்கு ஒரு காரணம். மாநில சொந்த வரி வருவாய் 1998-99ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் ரூ.10,024 கோடியாக மதிப்பிடப் பட்டிருந்தது. ஆனால், திருத்திய மதிப்பீட்டிலே 9,625 கோடி ரூபாய் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. இதற்கு முக்கிய காரணம், விற்பனை வரியின் குறைவான வசூலாகும். வரிச் சலுகைகள் வழங்கியவை, மாநிலத்தில் மோட்டார் வண்டிகள், ஜவுளி தொழில் ஆகிய தொழில்களில் நிலவும் மந்த நிலை ஆகியவற்றின் காரணமாக விற்பனை வரி, நுழைவு வரி வசூல் குறைந்துள்ள காரணத்தால் திருத்திய மதிப்பீட்டில் குறைவாகவே மதிப்பிடப்பட்டுள்ளது. மேலும் நடப்பாண்டு நிலவரி தள்ளுபடி, கேளிக்கை வரி குறைப்பு ஆகியவற்றின் காரணமாக 1998-99ஆம் ஆண்டுக்கான திருத்திய மதிப்பீட்டில் வரவுகள் குறைவாகவே இருக்குமெனக் கருதப்படுகிறது.


இன்னொன்றையும் கேட்டார்கள். செலவுக் கணக்கிலே குறைவு ஏன் என்று திருநாவுக்கரசு கேட்டார். அதைப் பார்க்கும்போது, கல்லூரி மற்றும் பல்கலைக்கழக ஆசிரியர்களுக்கு திருத்திய ஊதிய விகிதங்களை மத்திய அரசு நிர்ணயிப்பதில் தாமதம் ஏற்பட்டதால் நடப்பு நிதியாண்டில் அவர்களுக்கு திருத்திய ஊதியம் வழங்கப்படவில்லை. தற்போது முடிவெடுக்கப்பட்டு வரும் நிதியாண்டில்தான் அவர்களுக்கு திருத்திய ஊதியம் வழங்கப்படும். ஆகவே, அதற்கான செலவினத்தில் நடப்பு நிதியாண்டில் சேமிப்பு ஏற்பட்டுள்ளது.

பொது விநியோகத் திட்டத்தின்கீழ் உதவித்தொகை இந்த ஆண்டு 1,000 கோடி ரூபாயாக இருக்குமென மதிப்பிடப்பட்டிருந்தது. ஆனால், எதிர்க்கட்சித் தலைவருக்கு நான் அளித்த விளக்கத்தைப்போல, முந்திய ஆண்டுகளில் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்திற்கு கூடுதலாக வழங்கப்பட்ட உதவித்தொகையை சரிக்கட்டியதால், 1998-99ஆம் ஆண்டிற்கான ஒதுக்கீட்டில் ரூ.500 கோடி குறைக்கப்பட்டுள்ளது.

மத்திய அரசோடு இணைந்து செயல்படுத்தும் வறுமை ஒழிப்புத் திட்டங்களுக்கு மத்திய அரசின் நிதி ஒதுக்கீடு இவ்வாண்டு குறைந்துள்ளது. இதனால், இத்திட்டங்களுக்கு தேவைப்படும் மாநில அரசின் பங்கும் குறைந்துள்ளது.

### பட்ஜெட் நுணுக்கங்களைப் புரிந்து கொள்ள சட்டமன்ற உறுப்பினர்களுக்குப் பயிற்சி

இந்த பட்ஜெட் விவகாரங்கள், இதிலே தொகையைப் பற்றிய கணக்குகள், புள்ளி விவரங்கள், இவைகள், ஒரு 5,6 பேருக்குத்தான் இதிலே அதிகக் கவலை, அக்கறை, அதைப் பற்றிய விவாதங்கள். நேற்றும் இன்றும் நானும் திரு.சொக்கர் அவர்களும் இந்த விஷயங்களை அடிக்கடி பரிமாறிக்கொண்டிருக்கிறோம், நானும் நிதித்துறை செயலாளர் அவர்களிடத்திலே இதைப் பற்றி விளக்கம் கேட்கிறேன், அவருக்குச் சொல்கிறேன், அதிலே அவர் ஆறுதல் அடைகிறார், ஒத்துக்கொள்கிறார். இதற்காகத்தான் ஏற்கெனவே சொல்லியிருக்கின்றேன். இந்த பட்ஜெட் என்றால் என்ன, திட்டம் என்றால் என்ன, டெல்லிக்குச் செல்கிறோம், 5 ஆயிரம் கோடிக்கு திட்ட ஒதுக்கீட்டிற்கு டெல்லி அனுமதி தந்துவிட்டது என்றதும், உடனே ஆகா 5 ஆயிரம் கோடி கையிலே நான் வாங்கி வந்துவிட்டதாக எண்ணிக்கொண்டு பாராட்டுகிறார்கள். அல்ல. 5 ஆயிரம் கோடி செலவு செய்துகொள்ள ஒப்புதல், 5 ஆயிரம் கோடி தந்துவிடவில்லை. அதற்கு என்ன resource இருக்கிறது, என்ன அடிப்படையிருக்கிறது, நிதியாதாரம் இருக்கிறது என்று அவர்கள் கேட்டு, அவர்கள் அதற்கு மேல் ஒதுக்குகின்ற மானியங்கள், கடன் தொகை இதையெல்லாம் சேர்த்துத்தான் 5 ஆயிரம் கோடி. முழுமையாக 5 ஆயிரம் கோடி அல்ல அது. அதைப்போல பல நுணுக்கங்கள் பட்ஜெட் விவகாரத்திலே இருக்கின்ற காரணத்தால், சட்டமன்றத்திலே உள்ள, அக்கறை உள்ள



இருக்கிறேன். யார் யாருக்கு விருப்பம் இருக்கிறதோ, அவர்களுடைய பெயர்களை எல்லாம் குறிப்பிட்டு எந்தத் தேதியிலே அந்த நிகழ்வை வைத்துக்கொள்ளலாம் என்று விரும்பினால், அதன்படி நண்பர் சொக்கர் அவர்களை – எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுடைய அனுமதியோடு, அவரையே அந்தக் காரியத்திற்காக கன்வீனராக நியமிக்கிறேன்; எதிர்க்கட்சித் தலைவர் அனுமதிப்பார் என்று கருதுகின்றேன்; அனுமதி தருகின்றார். திரு. சொக்கரே கன்வீனராக இருந்து அந்த கூட்டத்தைக் கூட்டி, யார் யார் கலந்து கொள்கிறார்கள் என்ற பட்டியலை நிதிச் செயலாளரிடம் தந்தால், ஒரு நாள் அதற்காக ஒதுக்கி இராஜாஜி மண்டபத்தில் அதற்காக ஒரு கூட்டத்தை கூட்டி, யார் யாருக்கு பட்ஜெட்டிலே என்னென்ன சந்தேகங்கள் வருகிறதோ – டெக்னிக்கல் பாயிண்ட்ஸ், கணக்கு வழக்குகள், அதிலே யார் யாருக்கு என்ன சந்தேகங்கள் வருகிறதோ, அவைகளை எல்லாம் கேட்டு, அதற்கு நிதிச் செயலாளர் பதில் சொல்வார்; நிதிச் செயலாளரைவிட இன்னும் விஷயம் தெரிந்த நம்முடைய

உறுப்பினர்களுக்கு, பட்ஜெட்டை படித்துவிட்டுப் பேச வேண்டும், பட்ஜெட்டிலே இருக்கின்ற விவரங்களைப் புரிந்துகொண்டு பேச வேண்டும், நாமும் ஒரு காலத்திலே ஆட்சி பொறுப்புக்கு வரக்கூடும்.

அப்போது வருகிற நேரத்தில் இதற்கெல்லாம் பதில் சொல்ல வேண்டும். எனவே, நாம் இப்போதே தயார்படுத்திக் கொள்ளவேண்டும் என்கின்ற அந்த அக்கறையோடு இருக்கின்ற உறுப்பினர்கள் யாராக இருந்தாலும், அவர்களுக்கெல்லாம் இதற்காக ஒரு பயிற்சி நடத்த வேண்டுமென்ற விருப்பத்தை நான் ஏற்கெனவே வெளியிட்டு இருக்கிறேன். அதை எப்பொழுது வைத்துக்கொள்ளலாம் என்று நண்பர் சொக்கரும் மற்றவர்களும் என்னிடத்திலே கேட்டுக்கொண்டு இருக்கிறார்கள். நேற்றைய தினம் கூட நிதிச் செயலாளரிடத்திலே அதுபற்றி பேசி

அப்துல் லத்தீப் போன்றவர்களும் உங்களுக்கு விளக்கம் அளிப்பார்கள். அப்படி அனைவரும் விளக்கம் அளிக்கின்ற வகையிலும், நம்முடைய திருநாவுக்கரசு அவர்கள் எப்போதுமே பட்ஜெட்டிலே பேசும்போது ஆழ்ந்த அனுபவத்தோடு பேசக்கூடியவர்; அவர்கள் எல்லாம் கலந்து கொண்டு மற்றவர்களுக்கு விளக்கம் அளிக்கின்ற வகையிலும் இந்த ஆலோசனைக் கூட்டம், விவரம் அறிகின்ற கூட்டம், விளக்கம் தருகின்ற கூட்டம் நடைபெறும் ஒரு தேதியை நீங்களே நிர்ணயித்து, நிதிச் செயலாளர் அவர்களோடு கலந்து ஏற்பாடு செய்ய வேண்டுமென்று உங்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

**திரு.ஆர். சொக்கர் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த பயிற்சி வகுப்பு நடத்துவதற்கு மெத்த மகிழ்ச்சியை நான் தெரிவித்துக்

கொள்கிறேன். ஆனால், அந்த பயிற்சி வகுப்பிலே நான் மாணவனாகத்தான் இருக்க விரும்புகின்றேன்; கன்வீனராக இருக்க விரும்பவில்லை. ஆகவே, கன்வீனராக நிதித்துறை செயலாளர் அவர்களே இருந்து, நான் மாணவனாக பயிற்சி பெற நீங்கள் வாய்ப்பு கொடுத்தால் போதுமானது.

முதலமைச்சர் கலைஞர்: மாணவர் கழகங்களுக்கும் அமைப்பாளர்கள் உண்டு. தலைவர் அவர்களே, மானிய உதவிகள் – இதைத்தான் நம்முடைய சுப்பராயன் அவர்களுக்கு; சுப்பராயன் அவர்களுக்கு மாத்திரமல்ல, சொக்கரே கூட ஒரு துண்டு அறிக்கை வெளியிட்டு இருக்கிறார்; படித்துப் பார்த்தேன். மானிய உதவிகளை அளித்தே இந்த அரசு மிகவும் ஆடிப் போய் இருக்கிறது; என்ன திட்டங்களை நிறைவேற்ற முடியும் என்று இந்த மானியங்களைப் பற்றி சொல்லி இருக்கிறார்கள். இந்த மானியங்களை ஒழித்துக் கட்ட வேண்டும் என்பதற்காகவே மத்தியிலே ஒரு சர்க்கார் இப்போது வந்து இருக்கிறது. அரசுக்கு ஏதோ ஒரு வகையிலே உதவிகரமாக நீங்கள் கருத்துகளை வெளியிட்டுக் கொண்டு இருக்கிறீர்கள். நான் கேட்கிறேன், இந்த மானியத்திலே எதைக் குறைக்கலாம்? இதைத்தான் தொங்கு சதை என்றார் நம்முடைய சுப்பராயன் அவர்கள். இந்த தொங்கு சதையிலே எந்தத் தொகையை கழிக்கலாம் என்பதை நான் படித்துக் காட்டுகிறேன்; தயவுசெய்து சொல்லுங்கள்.

- ★ **பொது விநியோகத் திட்டத்திற்காக உதவித்தொகை நிதியொதுக்கம் ஆயிரம் கோடி ரூபாய்.**
- ★ **விவசாயிகளுக்கு இலவச மின்சாரம் வழங்க, தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு மின் கட்டண இழப்பீட்டை ஓரளவு சரிக்கட்ட மானியம் 250 கோடி ரூபாய். மின் வாரியத்திற்கு 1,900 கோடி ரூபாய் இலவச மின்சாரத்துக்காக ஆகிறது. அதிலே அரசு கொடுக்கின்ற மானியம் 250 கோடி ரூபாய்.**
- ★ **சத்துணவுக்கு ஏற்படுகின்ற செலவு மாத்திரம் 532 கோடி ரூபாய்.**
- ★ **நிதி உதவி பெறும் அரசு சாரா தொடக்கப் பள்ளிகள் மற்றும் இடைநிலைப் பள்ளிகளுக்கு மானியம் 947 கோடி ரூபாய்.**
- ★ **அரசு உதவி பெறும் தனியார் கல்லூரிகளுக்கு மானியம் 192.15 கோடி ரூபாய்.**
- ★ **அரசு உதவி பெறும் தனியார் பல்தொழில் பயிற்சி பயிலகங்களுக்கு மானியம் 22.77 கோடி ரூபாய். மருந்துகளுக்காக ஒதுக்கீடு 115 கோடி ரூபாய்.**
- ★ **இலவச வேட்டி, சேலை வழங்கும் திட்டத்திற்கு 100 கோடி ரூபாய்.**
- ★ **கைத்தறித் துணிகளுக்கு தள்ளுபடி மானியம் 72 கோடி ரூபாய்.**
- ★ **மாணவர்களுக்கு இலவச பேருந்து பயண அனுமதி 80 கோடி ரூபாய்.**
- ★ **மாணவர்களுக்கு சீருடைகள் 56 கோடி ரூபாய்.**
- ★ **மாணவர்களுக்கு இலவச பாடப் புத்தகங்கள் 25 கோடி ரூபாய்.**
- ★ **மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் திருமண நிதியுதவித் திட்டம் 70 கோடி ரூபாய்.**
- ★ **முதியோர் உதவித் தொகை மற்றும் பிற ஓய்வூதியங்கள் 141 கோடி ரூபாய். இன்றைக்கு டில்லியிலே அறிவித்து இருக்கிறார்களே, முதியோர்களுக்கெல்லாம் 10 கிலோ அரிசி என்று; அதை ஏற்கெனவே தமிழ்நாட்டிலே நிறைவேற்றிக் கொண்டு இருக்கின்றோம்; அந்தத் திட்டத்திற்காக 141 கோடி ரூபாய்.**
- ★ **சிறார்களுக்கு, சத்துணவு சாப்பிடும் சிறார்களுக்கு வாரம் ஒரு முட்டை வழங்குவதில் 35 கோடி ரூபாய்.**
- ★ **தொழில் மானியங்கள் ரூ.50.85 கோடி.**
- ★ **தமிழ்நாடு கூட்டுறவு பால் உற்பத்தியாளர் இணையத்திற்கு இழப்பீட்டு மானியம் – அவர்கள் அதிக விலை கொள்முதலுக்கு**



**கொடுக்க வேண்டு மென்பதால், அந்தப் போராட்டத்தை தடுக்க இழப்பீட்டு மானியம் தந்தது ரூ.15 கோடி.**

★ **கதர் தள்ளுபடி மற்றும் தமிழ்நாடு கதர் மற்றும் கைத்தொழில் வாரியத்திற்கான மானியம் ரூ.17.75 கோடி.**

★ **வேளாண் மற்றும் கால்நடை பல்கலைக் கழகங்களுக்கு அளிக்கப்படும் மானியங்கள் ரூ.67 கோடி.**

★ **இலவச வீட்டுமனைக்கான ஒதுக்கீடு ரூ.36.68 கோடி.**

★ **படிப்புதவித் தொகை ரூ.85.14 கோடி.**

எனவே, இந்த இனங்களுக்கான மொத்த ஒதுக்கீடு சுமார் ரூ.5,500 கோடி.

இதிலே, எந்த இனத்தை மானியம் வழங்காமல் நடத்தலாம் என்பதைச் சொன்னால், அந்த தொங்கு சதையை உடனே வெட்டியெறிய நான் தயாராக இருக்கிறேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். சொல்லிவிட்டு வெளியே போக முடியுமா என்பதை மாத்திரம் எண்ணிப் பார்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

### ஊரகப்பகுதி வாழ் மக்களுக்கு ரூ.3,755 கோடியில் திட்டங்கள்

கிராம மக்களுக்காக திட்டங்கள் எதுவும் இல்லை என்று மெத்த வருத்தத்தோடு, ஆதங்கத்தோடு நம்முடைய எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் குறிப்பிட்டார்கள். சிலவற்றைப் பாராட்டிவிட்டு, ஆனால் கிராம மக்களை தொடக்கூடிய எந்தத் திட்டமும் இல்லை; அவர்களை வாழ வைக்கக்கூடியத் திட்டம் எதுவும் இல்லை என்று சொன்னார்கள்.



தமிழ்நாட்டின் மக்கள் தொகையில் 65 விழுக்காடு ஊரகப் பகுதிகளில் வாழ்ந்து வேளாண் சார்ந்த தொழில்களில் ஈடுபடும் மக்கள் இருக்கிறார்கள். இவர்களுடைய நலனைக் கருதி அரசு பல்வேறு துறைகளின் வாயிலாகச் செயல்படுத்தும் திட்டங்களுக்காக 3,755 கோடி ரூபாயை வரும் ஆண்டில் செலவிடுகிறது என்பதை மாத்திரம் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

வேளாண்மை, மீனளம், கால்நடை போன்ற துறைகளின் திட்டங்களைச் செயல்படுத்த 1,051 கோடி ரூபாயும், கைத்தறி மற்றும் துணி துறையின் கீழ் திட்டங்களைச் செயல்படுத்த 153 கோடி ரூபாயும், கதர் மற்றும் கிராமத் தொழில்களில் 21 கோடி ரூபாயும், ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம் (IRDP), வேலைவாய்ப்பு உறுதித் திட்டம் (EAS), ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டம் (JVVT), இந்திரா வீட்டு வசதித் திட்டம் (IAY) போன்ற மத்திய அரசும், மாநில அரசும் ஒருங்கிணைந்து செயல்படுத்தும் திட்டங்களுக்கும், மாநில அரசு மாத்திரம் செயல்படுத்தும் அண்ணா மறுமலர்ச்சித் திட்டம், நமக்கு நாமே திட்டம், சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம் போன்ற திட்டங்களுக்கும் ஊரகப் பகுதி உள்ளாட்சி மன்றங்களுக்கு அளிக்கும் நிதி பகிர்வு போன்றவற்றிற்கும் 1,538 கோடி ரூபாய் செலவிடப்படுகிறது.

கிராமப் பகுதிகள் பயன் அடையும் வகையில் பாசன வசதித் திட்டத்திற்காக வரும் ஆண்டு 335 கோடி ரூபாய் செலவிடப்படும்.

இதேபோல் நபார்டு வங்கி நிதியுதவியோடு செயல்படுத்தப்படும், ஊரகக் கட்டமைப்பு மேம்பாட்டு இணையத்தின் மூலம் சாலைகளுக்காகவும், கிராமச்சாலைப் பணிகளுக்காகவும் வரும் ஆண்டில் 327 கோடி ரூபாய் செலவிடப்படுகிறது.

ஊரகப் பகுதிகளில் குடிநீர் வழங்கல் பணிகளுக்காக வரும் நிதி ஆண்டில் 450 கோடி ரூபாய் செலவில் பணிகள் மேற்கொள்ளப்பட்டு 6,300 குடியிருப்புகளுக்கு முழு அளவில் குடிநீர் வசதி செய்து கொடுக்கப்பட இருக்கிறது.

தமிழ் நாடு வனவளர்ச்சித் திட்டத்தின்கீழ் 200 கிராமங்களின் உள்ளூர் மக்களின் பங்கேற்புடன் 97 கோடி ரூபாய் ஒதுக்கீட்டில் பணிகள் மேற்கொள்ளப்பட இருக்கிறது.



ஆக மொத்தம் ரூ.3,755 கோடியை பல்வேறு திட்டங்களுக்கும் வருமாண்டில் ஊரகப் பகுதி மக்களுக்காக இந்த அரசு ஒதுக்கீடு செய்து உள்ளது.

**நகர்ப்புற மக்களுக்காக ரூ.1,286 கோடியில் திட்டங்கள்**

இதே அடிப்படையில் நகர்ப் பகுதிகளில் செயல்படுத்தும் திட்டங்களைக் கணக்கில் எடுத்துக்கொண்டால் அரசு 1,286 கோடி ரூபாய் செலவில் பல்வேறு துறைகளின் வாயிலாக வரும் நிதியாண்டில் பல திட்டங்களைச் செயல்படுத்த இருக்கிறது.

மொத்தத்தில் இந்த வகையிலே அரசு செயல்படுத்தும் திட்டங்களுக்கான மொத்த ஒதுக்கீடான 5,041 கோடி ரூபாயில் 75 விழுக்காடு கிராமப் பகுதி மக்களின் நலனுக்காக செலவிடப்படும் என்பதை எதிர்க்கட்சித் தலைவருக்கு நான் தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

இவை தவிர, அரசு சமூக நலன், மருத்துவம் மற்றும் பொதுச் சுகாதாரம், கல்வி, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலன், பிற்படுத்தப்பட்டோர் – மிகவும் பிற்படுத்தப்பட்டோர் நலன், நுகர்பொருள் வழங்கல் போன்ற துறைகளில் செயல்படுத்தும் திட்டங்களின் பெரும்பாலான பலன்கள் ஊரகப் பகுதி மக்களுக்குத்தான் செல்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

வேலைவாய்ப்பைக் குறித்து ஞானசேகரன் அவர்களும், சுப்பராயன் அவர்களும், திருநாவுக்கரசு அவர்களும் இங்கே குறிப்பிட்டார்கள். இதைப் பற்றி சில விவரங்களைச் சொல்வது என்னுடைய கடமையாகும்.

**தொழில் வளர்ச்சியும் – வேலைவாய்ப்பும்**

மதிப்பீடு மற்றும் செயல்முறை ஆராய்ச்சித் துறையின் (E&AR Dept) இயக்குநரின் ஆய்வின்படி கடந்த மூன்றாண்டுகளில் தமிழ்நாட்டில் சுமார் 11 இலட்சம் வேலைவாய்ப்புகள் உருவாக்கப்பட்டுள்ளன. இவற்றில் 4.22 இலட்சம் வேலைவாய்ப்பு வேளாண்மைத் துறையிலும், 6.78 இலட்சம் பணியிடங்களுக்கான வேலைவாய்ப்பு தொழில் மற்றும் சேவைத் துறைகளிலும் உருவாக்கப்பட்டுள்ளன. புதிய தொழிற்சாலைகளைத் தொடங்குவதற்கு நம் நாட்டைச் சேர்ந்த மற்றும் பன்னாட்டு நிறுவனங்களின் முதலீட்டை அதிக அளவில் பெறுவதற்கும் ஏற்ற சூழ்நிலையை அரசு உருவாக்கி வருகிறது. அரசின் இந்த முயற்சிகளால் தொழில்களுக்கும் கட்டமைப்புப் பணிகளுக்கும் முதலீடுகளை ஈர்ப்பதில் இந்தியாவிலேயே இரண்டாவது இடத்திற்கு தமிழ்நாடு முன்னேறியுள்ளது. ரூ.48,497 கோடி முதலீடுகளை தமிழ்நாடு ஈர்த்துள்ளது. இம்முதலீடுகளால் பல்லாயிரக்கணக்கானவர்களுக்கு வேலைவாய்ப்பு உருவாகும். உதாரணமாக, மஹிந்திரா மோட்டார்


வண்டிகள் துணைப்பாகங்கள் தொழிற்சாலை அமைப்பதனால் 3,000 பேருக்கு நேரடி வேலைவாய்ப்பும் இவற்றைச் சார்ந்த தொழில்களில் 10,000 பேருக்கு வேலைவாய்ப்பும் உருவாகும். திரவ இயற்கை எரிவாயு உற்பத்தி செய்யும் ஒருங்கிணைந்தத் திட்டத்தின் மூலம் 500 பேருக்கு நேரடி வேலைவாய்ப்பும், அதைச் சார்ந்த தொழில்களில் 2,000 பேருக்கு வேலைவாய்ப்பும் கிடைக்கும். 'வேர்ல்டு டெல்' நிறுவனத்துடன் அமைக்கப்படவிருக்கும் இணைய மையங்களால் சுமார் 1.50 இலட்சம் பேருக்கு நேரடியாகவும் இவற்றைச் சார்ந்த தொழில்களிலும் வேலைவாய்ப்பு உருவாகும்.

**ஊரகப் பகுதிகளில் வேலைவாய்ப்பு**

கடந்த 2 ஆண்டுகளில் ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம், ஊரகப் பகுதிவாழ் பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத் திட்டம், ஊரக இளைஞர்களுக்கான சுயவேலைவாய்ப்புத் திட்டம் போன்ற சுய வேலைவாய்ப்புத் திட்டங்களின் மூலம் 4 இலட்சம் பேருக்கு ஊரகப் பகுதிகளில் வேலைவாய்ப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது. இது தவிர, இவ்விரண்டு ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டம் மற்றும் வேலைவாய்ப்பு உறுதித் திட்டங்களின் கீழ் 1,902 இலட்சம் மனித நாட்கள் (Man Days) வேலைவாய்ப்பு உருவாக்கப்பட்டுள்ளது. நான் ஏற்கெனவே சொன்னதைப்போல, மகளிர் சிறு கடன் உதவி திட்டத்தின் மூலம் கார்ப்பரேஷன்களில் மாத்திரம் இதுவரை 6,000 பேர் வேலைவாய்ப்பு பெற்றிருக்கிறார்கள். மேலும், எல்லா நகரங்களுக்கும், மாநகரங்களுக்கும் விரிவுபடுத்தும்போது இலட்சக் கணக்கான பெண்களுக்கு இந்த வேலைவாய்ப்பு கிடைக்கும்.

**இளைஞர் சுயவேலைவாய்ப்பு நிதி நிறுவனம் – ஆராயக்குழு**

இதிலே நம்முடைய நண்பர் திருநாவுக்கரசு அவர்கள் கூறிய கருத்து, தொடர்ந்து அவர் சொல்லிக்கொண்டே வருகிறார், பத்திரிகையிலும் அறிக்கை விடுகிறார். நேற்றைக்கும் அழுத்தம் திருத்தமாகச் சொன்னார். **'இளைஞர் சுய வேலைவாய்ப்பு நிதி நிறுவனம்'** ஒன்றை அமைக்க வேண்டுமென்று கேட்டு, கடைசியாக குறைந்தபட்சம் அதற்காக ஒரு Committee யாவது போடுங்கள் என்று சொன்னார். Committee போடுவதும் பிரச்சினையின் தலையிலே ஒரு கல்லைப் போடுவதும் ஒன்றுதான் என்று பேராசிரியர் கல்கி ஒருமுறை சொன்னார். ஆனால் அப்படிப்பட்ட Committee அல்ல, உள்ளபடியே அதை ஆராய்ந்து, நல்ல கருத்தைச் சொல்லி, அந்த இளைஞர் சுய வேலைவாய்ப்பு நிதி நிறுவனத்தை அமைப்பதற்கான ஒரு Committee–ஐ இந்த அரசு நிச்சயமாக அமைக்கும் என்ற உறுதியை இங்கே நான் தெரிவித்துக்கொள்கிறேன்.



**தொழிலாளர்களுடைய பிரச்சினையை இந்த அரசு அலட்சியப்படுத்தாது**

மூடப்பட்ட தொழிற்சாலைகளைப் பற்றி இங்கே வேதனையோடு பேசப்பட்டது. நான் அவர்களுடைய கவலையோடு என்னுடைய கவலையை பகிர்ந்து கொள்ளத் தயாராக இருக்கிறேன். ஆனாலும், இதற்கான காரணங்கள் என்ன? அரசா அல்லது தனியாரா? வேறு என்ன நிலை? தொழிலாளர்களா? என்பதைப் பற்றியெல்லாம் தொழிலாளர் நலத்துறை அமைச்சர் பல நேரங்களில் இங்கே விவரமாக கருத்துக்களை வெளியிட்டிருக்கிறார்கள். கடந்த 3 ஆண்டுகளில் 47 தொழிற்சாலைகள் மூடப்பட்டு அதனால் 23 ஆயிரம் தொழிலாளர்கள் பாதிக்கப் பட்டுள்ளார்கள். ஆனால் அதே மூன்றாண்டுகளில் 5,743 தொழிற்சாலைகள் தொடங்கப்பட்டு அதனால் 98,883 தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது. இதை நினைத்து அதை மறந்துவிட வேண்டுமென்று நான் சொல்லவில்லை. அவர்களுடைய கஷ்டத்தையும் போக்கவேண்டும். மேற்கு வங்கத்தில் மாதம் 500 ரூபாய் மூடப்பட்ட ஆலைகளிலுள்ள தொழிலாளர்களுக்குத் தரப்படுவதாக பேராசிரியர் தீரன் அவர்கள் நேற்றைய தினம் குறிப்பிட்டார்கள். அதைப் பற்றி விசாரித்து எப்படி அது வழங்கப்படுகிறது என்பதை நான் அறிந்துகொள்ள இருக்கின்றேன். சுப்பராயன் அவர்களும் அன்றைக்குக் குறிப்பிட்டார்கள் என்று கருதுகிறேன். மற்றவர்களும் குறிப்பிட்டிருக்கின்றார்கள். இதற்கு மாத்திரம் மேற்கு வங்கத்தைக் காட்டுகின்றவர்கள், இந்த பஸ் கட்டணத்திற்குக் காட்டக் கூடாதா? 25 காசு, 30 காசு


வசூலிக்கிறார்கள் மற்ற மாநிலங்களில். இங்கே 18 காசு வசூலித்து, பஸ்ஸை இன்னும் அதிகமாக வாங்க முடியாத நிலைக்கு ஆட்பட்டிருக்கிறோம். இங்கே உட்கார்ந்திருக்கிற சட்டமன்ற உறுப்பினர்கள் எனக்கு இரண்டு பஸ் போதாது, இன்னும் ஒரு பஸ் கொடுங்கள் என்று யாராவது கேட்டால் போதும், இந்தப் பக்கம் உட்கார்ந்திருக்கிற ஆளுங்கட்சி உறுப்பினர்கள் அத்தனை பேரும் மேசை உடைகின்ற அளவுக்கு கையைத் தட்டுகின்றார்கள். ஆனால் ஒரு பைசா, இரண்டு பைசா பஸ் கட்டணத்தை உயர்த்த வேண்டுமென்று சொன்னால், அதை ஏற்றுக்கொள்ளத் தயாராக இல்லை. இப்படி பீடிகை போடுவதால் ஒருவேளை உயர்த்தப்போகிறோம் என்று யாரும் அச்சப்படத் தேவையில்லை.

நான் பஸ் கட்டணத்தை உயர்த்துவதாக இல்லை, தற்காலிகமாக என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். நாம்கூட பண்டிகைக் காலங்களிலே இந்தத் தொழிலாளர்களுக்கு உதவிகளை வழங்கி வருகின்றோம். பண உதவியைச் செய்து வருகின்றோம். இருந்தாலும், மேற்குவங்கத்திலே எந்தத் தொழிற்சாலைகள் மூடப்பட்டன, தனியார் தொழிற் சாலைகளா, அரசுத் தொழிற் சாலைகளா என்பதை எல்லாம் எண்ணிப்பார்க்க வேண்டும். அதைப்பற்றி எல்லாம் அறிந்த பிறகு, அதுபற்றி கூறலாம் என்று இருக்கின்றேன்.

அரசுத் தொழிற்சாலைகளைப் பொறுத்தவரையிலே அரக்கோணம் தொழிற்சாலையில் எல்லோருக்கும், கிட்டத்தட்ட ரூபாய் 1½ இலட்சம், 2 இலட்சம் ரூபாய் என்று தொழிலாளர்களுக்குத் தரப்பட்டு அவர்கள் தாங்களாகவே பணியிலிருந்து ஒதுங்கிக் கொண்டு, அந்த அரக்கோணம் தொழிற்சாலை இடத்தை வேறு ஏதாவது தொழில் வளாகத்திற்குக் கொடுக்கலாம் என்ற எண்ணத்தோடு ஏலம் விடுகின்ற நேரத்திலேகூட அ.தி.மு.க.வைச் சேர்ந்த ஒரு தொழிற்சங்கத் தலைவர் அதிலே தடை பெறுவதற்காக நீதிமன்றம் சென்றிருக்கிறார். இடைக்காலத் தடை கிடைத் திருக்கிறது. எனவே, தொழிலாளர்களுடைய பிரச்சினையை இந்த அரசு நிச்சயமாக அலட்சியப்படுத்தாது என்பதை நான் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**கன்னியாகுமரி மாவட்டத்தில் ரப்பர் தொழில் பூங்கா உருவாக்கம்**

ரப்பரைப் பற்றி இங்கே பேசப்பட்டது. அதிலும் கன்னியாகுமரி மாவட்டத்தில் ரப்பர் தொழில் நசிந்து போவதை நம்முடைய மணி அவர்களும் மோசஸ் அவர்களும் இங்கே எடுத்துக் கூறினார்கள். மோசஸ் அவர்கள் எப்போதும் மென்மையாகப் பேசக் கூடியவர்கள். இன்றைக்கு வரவில்லையா? பிரச்சினையை எழுப்பக்கூடியவர்கள் பதில் சொல்லுகின்றபோது வந்திருந்தால் அவர்களுக்குரிய விளக்கங்கள் கிடைத்திருக்கும். ரப்பர் தொழிற்சாலைகள் மூடப்பட்டு அந்தத் தொழிலே நலிவடைகின்ற நிலையிலே இருப்பதை நம்முடைய மணி அவர்கள் இங்கே சுட்டிக்காட்டினார்கள். அரசு ரப்பர் கழகத்தில், கன்னியாகுமரி மாவட்டத்தில் 2,199 தொழிலாளர்கள் பணியாற்றுகிறார்கள். அதிலே பால் வெட்டும் தொழிலாளர்கள் 1,427 பேர், களப் பணியாளர்கள் 506பேர், தொழில்கூடத் தொழிலாளர்கள் 128 பேர், மற்றவர்கள் 138 பேர். இது தவிர அரசு ரப்பர் கழகத்திலே மொத்தம் 323 பணியாளர்கள் இருக்கிறார்கள்.



ரப்பர் விலை கடந்த இரண்டு ஆண்டுகளாக இறங்கு முகமாக இருக்கிறது என்பதை எல்லோரும் அறிவார்கள். இதற்கு முக்கியமான காரணம் வெளிநாடுகளிலிருந்து இரப்பர் இங்கு இறக்குமதி செய்யப்பட்டது ஒன்று. மேலும் பாலியூரித்தேன் ஒருமுறை உபயோகிக்கப்பட்ட டயர் ஆகியவற்றை இறக்குமதி செய்வதாலும், இயற்கையான ரப்பருடைய விலை குறைய நேரிடுகிறது. அரசு ரப்பர் கழகம் 1996–97ல் 2,591 டன் ரப்பரும், 1997–98ல் 2,692 டன் ரப்பரும், 1998–99ல் 2,978 டன் ரப்பரும் உற்பத்தி செய்திருக்கின்றது. ஒன்றும் குறைவான உற்பத்தியைச் செய்யவில்லை. மேலும், மேலும் அதிகமாகத்தான் உற்பத்தியைச் செய்திருக்கின்றது. உற்பத்தி அதிகரித்த போதிலும், 1996–97ஆம் ஆண்டுகளில் ஒரு இலட்சத்து 65 ஆயிரம் டன் ரப்பர் இங்கே இறக்குமதி செய்யப்பட்டுவிட்ட காரணத்தால் ரப்பர் விலை மிகவும் குறைந்துவிட்டது. நான் அந்த இறக்குமதியை நிறுத்த வேண்டுமென்று கோரிக்கை வைத்ததன் காரணமாக இப்போது ரப்பர் இறக்குமதி தடை செய்யப் பட்டிருக்கின்றது. என்றாலும்கூட, கேரள மாநிலத்தில்

State Trading Corporation தன் கையிருப்பான 50 ஆயிரம் டன் ரப்பரை சந்தையிலே மலிவாக விற்கத் தொடங்கிவிட்ட காரணத்தால் இறக்குமதி தடை செய்யப்பட்டும்கூட இங்கே உள்ள ரப்பர் விலை அதிகரிக்கவில்லை என்ற செய்தியையும் நான் சொல்ல வேண்டியவனாக இருக்கின்றேன்.

கன்னியாகுமரி மாவட்டத்தில் ரப்பர் தொழில் பூங்கா அமைக்க நான் முன் நின்று பணியாற்றுவேன் என்று இதே அவையிலே மணி அவர்களுக்கு உறுதியளித் திருக்கின்றேன். கன்னியாகுமரி மாவட்டத்தில் ரப்பர் தொழிற் பூங்கா அமைக்க தோவாளை வட்டம் செண்பகராமன்புதூரில் 200 ஏக்கர் நிலம் தேர்வு செய்யப்பட்டுள்ளது. ரப்பர் தொழிற்பூங்காவிற்கான சாத்தியக்கூறு அறிக்கை கோட்டயத்திலே உள்ள மத்திய அரசு நிறுவனமான ரப்பர் கழகத்தால் தயார் செய்யப்பட்டு, அது வெகு விரைவில் கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. 18 கோடி ரூபாய்ச் செலவில் அமைக்கப்படவிருக்கும் இந்த ரப்பர் தொழிற் பூங்காவில் சுமார் 100 ரப்பர் தொழிற்சாலைகள் அமைய உள்ளன என்பதை நான் மணி அவர்களுக்கு மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கின்றேன். இது இரண்டு கட்டத்தில் நிறைவேற்றப்படவுள்ளது. தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் இந்தத் தொழிற்பூங்காவிற்குத் தேவையான தண்ணீரைத் தர உரிய நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. எனவே, ஆவலோடு எதிர்பார்த்துக்கொண்டிருக்கிற ரப்பர் தொழிற்பூங்கா கன்னியாகுமரி மாவட்டத்தில் விரைவில் அமைய உள்ளது என்பதை மீண்டும் ஒருமுறை இந்த அவையிலே நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

**நெசவாளர் நலன்**

கைத்தறியாளர்களுடைய நிலையைப் பற்றி இங்கேச் சொன்னார்கள். அதிலும், நம்முடைய ஞானசேகரன் அவர்கள், அரிச்சந்திரா மயான காண்டத்திலே சந்திரமதி புலம்புவதைப்போல, கைத்தறியாளர்கள் கதறுகிறார்கள்; அவர்களெல்லாம் சோற்றுக்கு இல்லாமல் திண்டாடுகிறார்கள்; பிச்சை எடுக்கிறார்கள் என்றெல்லாம் பேசியதைப் படித்துப் பார்த்ததைவிட நேரிலே அதைக் கேட்டபோது, காதிலே கேட்டபோது, உருக உருகப் பேசினார். அதைப்போலவே, பலரும் கைத்தறியாளர்களுக்கு இந்த அரசு எதுவுமே செய்யவில்லை என்பதைப் போன்ற கருத்துக்களை இங்கே எடுத்துக்கூறி இருக்கின்றார்கள்.

கழக ஆட்சியில் கூட்டுறவு சங்கங்களில் உறுப்பினராக உள்ள நெசவாளர்களுக்கு 1975–76ஆம் ஆண்டு முதல் சேமிப்பு மற்றும் பாதுகாப்புத்திட்டம் தொடங்கப்பட்டு செயல்படுத்தப்பட்டு வந்தது. இத்திட்டத்தில் உறுப்பினராக உள்ள **நெசவாளர்கள் இறக்க நேரிட்டால், அவர்கள் குடும்பத்திற்குக் கொடுக்கப்படும் காப்பீட்டுத் தொகையை இந்த அரசு ரூ.15,000–ல் இருந்து ரூ.20,000 ஆக 1996–97ஆம் ஆண்டில் உயர்த்தியது.** வயது உச்ச வரம்பை 58லிருந்து 60ஆக உயர்த்தியது. **நடப்பாண்டில் இந்தத் தொகை ரூ.35,000 ஆக உயர்த்தப்பட்டது.** மேலும், **வரும் நிதியாண்டில் இத்தொகையை ரூ.40,000 ஆக உயர்த்தப்படும்** என நிதிநிலை அறிக்கையில் அறிவிக்கப்பட்டுள்ளது, கைத்தறியாளர்களுக்காக. இதுதவிர, இந்த அரசு, கூட்டுறவு சங்கங்களில் **60 வயது வரை பணியாற்றி ஓய்வு பெற்ற உறுப்பினர்களுக்கு உதவித் தொகையாக மாதம் ரூ.150 வழங்கும் ஒரு புதிய திட்டத்தையும் செயல்படுத்தி வருகிறது.**

கடந்த ஆட்சியில் கைத்தறி நெசவாளர்கள் உற்பத்தி செய்யும் பொருட்களுக்கு ஆண்டில் 100 நாட்களுக்கு மாத்திரமே 20 விழுக்காடு தள்ளுபடி வழங்கப்பட்டது. இதுமட்டுமல்லாமல், ஆண்டில் கைத்தறிப் பொருட்களுக்கு ரூ.41 கோடி மட்டும் தள்ளுபடி மானியம் வழங்கப்பட்டது. இந்த அரசு பொறுப்பேற்ற பின்னர் கைத்தறியாளர்களுக்கு **20 விழுக்காடு தள்ளுபடி மானியம் ஆண்டு முழுவதும் வழங்கி வருகிறது.** மேலும், **முந்தைய ஆண்டுகளில் வழங்கப்படாத ரிபேட் – தள்ளுபடி மானிய நிலுவைத் தொகையை ரூ.43 கோடியாக வழங்கவும் இந்த அரசு அனுமதித்துள்ளது.**



அகில இந்திய அளவில் துணிச் சந்தையில் ஏற்பட்ட சுணக்கம் காரணமாக நெசவாளர் கூட்டுறவு சங்கங்களிலும் விற்பனை மந்தமானதைத் தொடர்ந்து 31.3.98 தேதியில் சுமார் ரூ.365 கோடி அளவிற்குச் சரக்குத் தேக்கம் ஏற்பட்டது. இதனையும் நெசவாளர்களின் இதரப் பிரச்சினைகளையும் அறிந்த அரசு, அலுவலர்கள் மற்றும் நெசவாளர்

பிரதிநிதிகள் உள்ளடக்கிய உயர்மட்டக் குழுவை அமைத்தது. இந்தக் குழு சமர்ப்பித்த அறிக்கையின் அடிப்படையில் நெசவாளர்களுக்குப் பயனளிக்கும் வகையில் பல்வேறு சிறப்புச் சலுகைகளை சட்டப்பேரவையில் நான் அறிவித்ததை மாண்புமிகு உறுப்பினர்கள் மறந்திருக்க முடியாது. இதன்படி, கைத்தறித் துணி வகைகளின் சரக்குத் தேக்கத்தைத் தடுத்து விற்பனையை அதிகரிக்க வேண்டும் என்ற நோக்கத்தோடு, கோ–ஆப்டெக்ஸ் மற்றும் பிரதம நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள் 31.3.98 தேதியில் தேங்கியுள்ள கைத்தறித் துணிகளுக்கு 1.5.98 முதல் 31.10.98 வரை 6 மாத காலத்திற்கு 30 விழுக்காடு சிறப்புத் தள்ளுபடி வழங்க அனுமதிக்கப்பட்டுள்ளது. இதனால், மொத்தம் 202.17 கோடி ரூபாய் மதிப்பிற்கு சரக்குகள் விற்பனை செய்யப்பட்டுள்ளன. எனினும், நெசவாளர் கூட்டுறவு சங்கங்களில் 31.10.98 தேதியில் லுங்கி ரகம் மாத்திரம் ரூ.16.04 கோடி மதிப்பிற்கு இருப்பாக இருந்தது. லுங்கித் துணித் தேக்கத்தைக் கருதி, லுங்கி இரகங்களுக்கு மட்டும் 31.3.99 வரை 30 விழுக்காடு சிறப்புத் தள்ளுபடி நீடித்து வழங்க அரசு ஆணையிட்டது. இதன்மூலம் 28.2.99 வரை ரூ.9.34 கோடி அளவிற்கு லுங்கி விற்பனை செய்யப் பட்டிருக்கிறது.

**இலவச வேட்டி, சேலை வழங்கும் திட்டத்தால் ஒரு இலட்சம் நெசவாளர்களுக்கு வேலைவாய்ப்பு**

இலவச வேட்டி, சேலை வழங்கும் திட்டத்தை அரசு ஆண்டுதோறும் செயல்படுத்துகிறது. **1999 பொங்கல் பண்டிகைக்கு 77,10,000 சேலைகளும், 70,42,000 வேட்டிகளும் குறித்த காலத்திற்குள் உற்பத்தி செய்யப்பட்டு விநியோகிக்கப்பட்டன.** இதன் வாயிலாக 30,000 கைத்தறிகள் பயன்படுத்தப்பட்டு, ஒரு இலட்சம் கைத்தறி நெசவாளர்கள் தொடர்ந்து வேலைவாய்ப்பு பெற்றார்கள் என்பதையும் மறந்துவிடக்கூடாது.

கைத்தறி நெசவாளர்களின் நலனைப் பாதுகாக்கும் பொருட்டு, மாநில அரசு உற்பத்திக்குரிய பொருட்களை ஒதுக்கீடு செய்தல் சட்டம் (Reservation Articles for Protection Act, 1985) செயல்படுத்தி, அமலாக்கப் பிரிவை ஏற்படுத்தி சேலம், திருச்செங்கோடு, திருப்பூர் மற்றும் மதுரை ஆகிய இடங்களில் செயல்படுத்தி வருகிறது.

இந்த அரசு எடுத்துள்ள இந்த நடவடிக்கைகளினால் கைத்தறி நெசவாளர்கள் பயனடைந்துள்ளார்களே தவிர, பசி பட்டினியால் யாரும் பதைக்கப் பதைக்க உயிரை விடவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்ள வேண்டியவனாக இருக்கின்றேன்.


**பத்தாவது வரை படித்த ஏழைப்பெண்களுக்குத் திருமண உதவி**

மூவலூர் அம்மையார் நினைவு ஏழைப் பெண்கள் திருமண உதவித் திட்டம் பற்றி இங்கே பேசப்பட்டது. நம்முடைய பழனிசாமி அவர்களும் சொன்னார்கள். மற்றவர்களும் பேசும்போது சிறப்பாக எடுத்துக் கூறியிருக்கிறார்கள். அதை ஏன் எட்டாவது என்பதை பத்தாவது என்று மாற்றினீர்கள் என்று. அதை 1989ஆம் ஆண்டு அறிவித்தபோது 5,000 ரூபாய்தான் அதற்காக திருமண உதவியாக, நிதியாக அரசு வழங்கியது. அதற்குப் பிறகு நான்காவது முறையாக ஆட்சிக்கு வந்தவுடன் இதை 10,000 ரூபாயாக உயர்த்தி வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டது. இதிலே சான்றிதழ் வாங்குவதில் பெரும் சுமையாக இருக்கிறது. அதை வாங்கப் போகின்ற இடத்தில் – எதிர்க்கட்சித் தலைவரே இங்கே சொன்னார். எது எதற்கு என்னென்ன ரேட் என்று. அப்படி சில ரேட்டுகளை அடிமட்டத்தில் இருக்கின்றவர்கள் அவர்கள் கேட்டாலும், கேட்காவிட்டாலும், கொடுத்தால்தான் கிடைக்கும் என்கின்ற ஒரு சந்தேகத்தோடு கொடுத்து அந்தச் சான்றிதழ்களைப் பெற வேண்டிய அவல நிலை அந்தப் பெண்களுக்கு இருக்கிறது. அந்தப் பெண்களைப் பெற்றவர்களுக்கு இருக்கிறது. 10,000 ரூபாய் என்றால் ஒரு 2,000 போனால் என்ன, 8,000 ரூபாயாவது கிடைக்கின்றதே என்கின்ற எண்ணத்தோடு ஒரு 2,000 ரூபாய் தர வேண்டியிருக்கிறது. சிலவேளைகளில் பாதிக்குப் பாதிகூட அவர்களுக்குப் போய்ச் சேருவதில்லை. இந்தச் செய்திகள் வந்தவண்ணம் இருக்கின்றன. எம்.எல்.ஏ–க்கள் தான் அதைப் பற்றி கடிதம் எழுதுகிறார்கள். இதைப் பற்றி பல இடங்களில் விசாரித்தபோது அதில் ஏற்படுகின்ற குறைபாடுகளை எப்படி நீக்குவது என்று எண்ணிய நேரத்திலேதான் பத்தாவது வரையில் படித்து தேர்வுகூட பெற வேண்டியதில்லை. அதிலே தேர்ச்சி பெறத் தேவையில்லை. பத்தாவது வரையில் படித்து பரிட்சை எழுதி அதில் தேர்வாகா விட்டாலும் பத்தாவது வரையிலே படித்ததற்கான certificate தரப்படும். இயல்பாகவே அந்த certificate தானாகவே தரப்படும். அந்த certificate–ஐ வைத்துக் கொண்டு அவர்களுக்கு இந்தத் தொகையை வழங்கலாம். இப்படி வழங்குகின்ற நேரத்திலே எந்த விதியையும் தளர்த்தவில்லை, எடுத்துவிடவில்லை, எல்லா விதிகளும் இருக்கின்றன. வருமான வரம்புக்குக் கீழே உள்ளவர்களுக்குத்தான் வழங்கப்படும். அதிலே ஏழைப் பெண்கள் யாரும் விடுபட்டுப் போய்விடமாட்டார்கள். **அதே 70 கோடி ரூபாய் தான் ஒதுக்கப்பட்டிருக்கிறது. நீங்கள் அடுத்த ஆண்டு பாருங்கள் இந்த 70 கோடி ரூபாயிலே 70,000 பெண்கள் திருமண உதவி பெற்றிருக்கிறார்களா இல்லையா என்பதை அடுத்து**

**ஆண்டு பாருங்கள்.** அப்படி பெற்றிராவிட்டால் என்னைக் கேளுங்கள். எட்டாவது வரையிலே என்று மாற்றிக்கொள்ளக்கூட நான் தயாராக இருக்கின்றேன். **அந்த அளவிலே அவர்களுக்குப் போய்ச் சேர வேண்டிய பணம், 'நெல்லுக்கிறைத்த நீர் வாய்க்கால் வழியோடி புல்லுக்கும் ஆங்கே பொசியுமாம் போல' ஆகிவிடக்கூடாது, என்பதற்காகத்தான் நெல்லுக்கே போய்ச் சேர வேண்டுமென்பதற்காக இந்த பத்தாவது வரையிலே என்று, இந்தத் திட்டம்** இன்றைக்கு வகுக்கப்பட்டிருக்கிறது என்பதை நான் உங்களுக்கு நினைவுபடுத்த விரும்புகிறேன்.

**தியாகிகளைப் போற்றும் அரசு**

தேசியத் தலைவர்கள், தேசத்தினுடைய விடுதலைக்காக பாடுபட்டவர்கள், மொழிக்காகப் பாடுபட்டவர்கள், பேரறிஞர்கள் இவர்களை எல்லாம் கௌரவிக்கும் அரசு இந்த அரசு என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் நன்றாக அறிவீர்கள். கட்டபொம்மனுக்குக் கோட்டை கட்டினோம். மருதுபாண்டியருக்கு நினைவகம் கட்டினோம். பூலித்தேவனுக்கு மாளிகை கட்டினோம். சுந்தரலிங்கம்





நகர் உருவாக்கினோம். விசுவநாததாஸ் நினைவு இல்லம், சுபாஷ் சந்திரபோஸ் சிலை, தில்லையாடி வள்ளியம்மை நினைவுச் சின்னம், பெரியார் நினைவு சமத்துவபுரம், காமராஜர் நினைவகம், காமராஜர் உள்நாட்டு விமான முனையம், இராஜாஜி நினைவகம், ஜீவானந்தம் நினைவகம், பக்தவச்சலம் நினைவகம், கக்கன் சிலை, தியாகிகள் மணிமண்டபம், சிப்பாய் கலகத்திற்கு நினைவுத்தூண், நாமக்கல் கவிஞர் மாளிகை, பொன்விழா நினைவுச் சின்னம், தியாகிகள் மணிமண்டப முகப்பில் சங்கரலிங்கம் மற்றும் பாஷியம் ஆகியோர் சிலைகள். அதை யாரும் நீங்கள் பாராட்டிக்கூட பேசவில்லையே. டி.எம்.சி–யிலே பேசியவர்கள் யாரும் சங்கரலிங்கம் சிலைக்காக, பாஷியத்திற்கு சிலைக்காக அதை யாரும் பாராட்டிப் பேசாதது வருத்தத்திற்குரியது. இவ்வளவு சீக்கிரம் அவர்களை மறந்துவிடக் கூடாது. கட்டபொம்மனுக்கு நடிகர் திலகம் சிவாஜி கணேசன் ஒரு விழாவிலே கேட்டுக்கொண்டதற்கிணங்க, நினைவூட்டியதற்கிணங்க கயத்தாற்றிலே கட்டபொம்மனுக்கு புகழாஞ்சலி. இந்த ஆண்டு 200ஆவது ஆண்டை நினைவுபடுத்துகின்ற வகையிலே புகழாஞ்சலி. அதைப்போல அதற்கு அடுத்த ஆண்டு மருதுபாண்டியருக்கு சிவகங்கை மாவட்டம், திருப்பத்தூரிலே நினைவாஞ்சலி. காமராஜருடைய மணிமண்டபம் என்ன ஆயிற்று என்று நம்முடைய அப்பாவு அவர்கள் கேட்டார்கள். நம்முடைய புலவர் இராமன் அவர்களும் கேட்டார்கள். 19.4.1998அன்று நாகர்கோவிலில் நடைபெற்ற ஜீவானந்தம் மணி மண்டப திறப்பு விழாவிலே பேசும்போது கன்னியாகுமரி கடற்கரையிலே காமராஜர் அஸ்தி வைக்கப்பட்ட இடத்தில் காமராஜருக்கு மணிமண்டபம் கட்டுவோம் என்று அறிவித்திருந்தேன். இந்த அறிவிப்பையொட்டி, அதற்கான ஏற்பாடுகள் உடனடியாக எடுக்கப்பட்டது. எப்போதும் என்னுடைய அறிவிப்புகள் அறிவிப்புகளாக நின்று விடுவதில்லை; உடனடியாக அமலுக்கு வரும்.

**கன்னியாகுமரியில் காமராஜர் மணிமண்டபம்**

காமராஜர் மணி மண்டபம் அமைப்பதற்கான இடம் மத்திய அரசின் சுற்றுப்புற சூழல் மற்றும் வனத்துறை அமைச்சகத்தின் 27.9.1996 நாளிட்ட ஆணையின்படி, கடற்கரை பாதுகாப்பு விதிகளின்படி, கடற்கரையிலே இருந்து 500 மீட்டர் தொலைவுவரை கட்டடம்

கட்டுவதற்குத் தடை செய்யப்பட்ட பகுதியாகும். எனவே, மத்திய அரசின் அனுமதி பெற தொடர்புடைய துறையிடமிருந்து விவரங்களைப் பெற்று மத்திய அரசின் சுற்றுப்புற சூழல் மற்றும் வனத்துறைக்கு **7.8.1998** அன்று அனுப்பப்பட்டது. சில விஷயங்களில் மத்திய அரசினுடைய அனுமதி பெற வேண்டியிருக்கும். நான் **1969**–ல் முதலமைச்சராக பொறுப்பேற்றபோது, இந்தக் கோட்டை எப்படி இருந்தது என்று ஒருமுறை நீங்கள் மனக் கண்ணால் பார்த்துக் கொள்ளலாம். கோட்டை முழுவதும் கள்ளிக் காடு, பாம்பு, பல்லி என்கிற அளவுக்கு பயங்கரமாக காடு மண்டியிருந்தது. எதிரே இப்படி சோலைவனமாக இல்லை. அதிகாரிகளைக் கூப்பிட்டு, இதையெல்லாம் சரி செய்யுங்கள்; இந்த மரங்களை வெட்டுங்கள்; புதர்களையெல்லாம் அழியுங்கள் என்றேன். அதிகாரிகள் கை பிசைந்து நின்றார்கள். என்ன என்று கேட்டேன். இதற்கு உங்களுடைய உத்தரவு எல்லாம் ஒன்றும் இல்லை; மத்திய சர்க்காரைக் கேட்க வேண்டும், இராணுவத்தைக் கேட்க வேண்டும் என்றார்கள். உடனே மத்திய சர்க்காருக்கு எழுதினேன். அப்போது, திரு. கிருஷ்ணா Defence State Minister ஆக இருந்தார். அவர் உடனடியாக எனக்குக் கடிதம் எழுதி, நேரடியாக நான் பார்வையிட்டு உத்தரவு போடுகிறேன் என்றார். அவர் வந்து பார்வையிட்டு போய், 3 மாதங்கள் கழித்து இந்தப் புதர்களை எல்லாம் அழிக்கலாம் என்று அரசுக்கு உத்தரவு கொடுத்தார். மாநில சுயாட்சி கேட்டதற்கு வந்த ஆத்திரத்திலே அது ஒரு காரணம். இருக்கிற புதர்களையும், கள்ளிக் காட்டையும் அழிப்பதற்கே மத்திய சர்க்காரிடத்திலே உத்தரவு கேட்க வேண்டிய சூழ்நிலை இருந்தது. வனத்துறைக்கு **7.8.1998** அன்று அனுப்பப்பட்டது. மத்திய அரசின் சுற்றுப்புற சூழல் மற்றும் வனத்துறை **7.10.1998** நாளிட்ட கடிதத்தின் மூலம் சில விவரங்களை நம்மிடமிருந்து கோரியது. அந்த விவரங்கள் அனைத்தும் பெறப்பட்டு, தமிழ்நாடு அரசின் சுற்றுப்புற சூழல் மற்றும் வனத்துறையின் ஒப்புதலோடு **21.1.1999** அன்று மத்திய அரசின் சுற்றுப்புற சூழல் மற்றும் வனத்துறைக்கு அனுப்பப்பட்டது. மீண்டும் நினைவூட்டுக் கடிதம் **22.2.1999** அன்றும் அனுப்பப்பட்டது. காமராஜர் மணி மண்டபம் கன்னியாகுமரி கடற்கரையில் அமைப்பது தொடர்பாக முழு விவரங்களும் பத்திரிகைகளுக்குச் செய்தி குறிப்பாக **7.1.1999** அன்று, செய்தித் துறை அமைச்சரால் தெரிவிக்கப்பட்டது. இவ்வளவுக்கும் பிறகு, **22.2.1999** அன்று மத்திய அரசின் சுற்றுப்புற சூழல் மற்றும் வனத்துறையின் இணை இயக்குநரிடமிருந்து வந்துள்ள பதிலில்,

"The undersigned is directed to refer to the above and inform you that the construction of the proposed Memorial in CRZ 1 area is not permissible, as per the provisions of the CRZ Notification 1991 as abandoned from time to time. Therefore we regret our inability to consider the proposal. You may identify a suitable site for the Memorial in confirmity with the provisions of the Notification".

அதாவது அவ்வப்போது திருத்தியமைக்கப்பட்ட கடற்கரை ஒழுங்குமுறைப்படுத்தப்பட்ட பகுதி அறிவிக்கை **1991**–ல் உள்ள அம்சங்களின்படி, கடற்கரை ஒழுங்குமுறைபடுத்தப்பட்ட பகுதி–1ல் கருதப்பட்டுள்ள நினைவகம் கட்டுவதற்கு அனுமதிப்பதற்கு இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்; எனவே, கருத்துருவைப் பரிசீலனை செய்வதற்கு இயலவில்லை என்பதற்கு வருந்துகிறோம்; அறிவிக்கையில் சொல்லப்பட்டுள்ள அம்சங்களுக்கேற்ப நினைவகம் அமைக்கத்தக்க இடத்தை தாங்கள் தெரிவிக்கலாம். இந்த இடம் முடியாது; நாகர்கோயிலிலே, கன்னியாகுமரியிலே வேறு எங்காவது இடம் பாருங்கள்; அந்த இடம் முடியாது என்று எந்த இடம் வேண்டுமென்று அங்குள்ள காங்கிரஸ் நண்பர்களும் மற்ற தோழர்களும் போராடி வருகிறார்களோ, அந்த இடம் முடியாது என்று மத்திய அரசு கடிதம் மூலமாக அனுப்பியது. இவ்வளவு நினைவூட்டு கடிதங்களுக்குப் பிறகும்.

அது மாத்திரமல்ல; தில்லையாடி வள்ளியம்மைக்கு ஒரு தபால் தலை வெளியிட வேண்டுமென்று எழுதப்பட்ட கடிதத்திற்கு அதுவும் முடியாது என்று பதில் வந்துவிட்டது. மத்திய அரசின் அஞ்சல்துறை விதிமுறைகளின்படி இது பொருந்தி வரவில்லை. தில்லையாடி வள்ளியம்மாள் மத்திய அரசின் அஞ்சல் துறையினுடைய விதிமுறைகளின்படி பொருந்தி வரவில்லையாம். இதனால் அது முடியாது போய்விட்டது. பிறகு நான் **1.3.1999** அன்று பிரதமருக்கு இந்தக் கோரிக்கையை ஏற்க வேண்டும் என்று மறுபடியும் கடிதம் எழுதி இருந்தேன். அதுபோலவே, ஓமந்தூர் ராமசாமி ரெட்டியார் அவர்களுக்கு அஞ்சல் தலை வெளியிட வேண்டுமென்றும் எழுதியிருந்தேன். ஓமந்தூர் ராமசாமி ரெட்டியார் – அவர் தாடியில்லாத பெரியார் என்று அழைக்கப்பட்டவர் – அந்தக் காரணத்தினாலோ என்னவோ அதையும் அவர்கள் ஏற்றுக்கொள்ளத் தயாராக இல்லை. யார் யாருக்கோ அஞ்சல் தலை வெளியிடப்படுகிறது. நான் யாரையும் இதனால் தாழ்த்தியோ, இறக்கியோ பேச விரும்பவில்லை. இதற்கும் வெளியிடலாம். ஆனால், ஓமந்தூராருக்கு வெளியிட, காந்தியடிகளோடு தென்னாப்பிரிக்க போராட்டத்திலே இணைந்து பாடுபட்ட தில்லையாடி

வள்ளியம்மைக்குத் தபால் தலை வெளியிட, பெருந்தலைவர் காமராஜருக்கு கடற்கரை ஓரத்திலே மண்டபம் எழுப்ப மத்திய அரசிடமிருந்து வந்துள்ள பதில்களைத்தான் உங்கள் முன்னிலையிலே நான் வைத்திருக்கிறேன். எனவே, இந்த அரசினுடைய குற்றம் அல்ல என்பதை தெரிவித்துக்கொள்கின்றேன்.

இதிலே, புதுக்கோட்டை மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகம் பற்றிப் பேசும்போது, நம்முடைய திருநாவுக்கரசு அவர்கள் – அதை தொண்டமான் நினைவு மாளிகை என்று ஏற்கெனவே அரசு அறிவித்திருக்கிறது – குறைந்த விலைக்கு வாங்கிவிட்டோம் என்று சொன்னார்கள். அப்போது 35 இலட்சம், 40 இலட்சம் என்றால், இப்போதுள்ள பண மதிப்பீட்டில் அது எந்த அளவு என்று தெரியும். அதனால் மதிப்பை குறைத்து வாங்கிவிடவில்லை. இருவருக்கும் திருப்தியாகத்தான் அது வாங்கப்பட்டது. இடையில் நம்முடைய அருமை நண்பர் அன்பில் தர்மலிங்கம் அவர்கள் முன்நின்றுதான், அந்தக் குடும்பத்தாருடன் பேசி அரசுக்கு அந்த இடத்தை அன்றைக்குப் பெறுவதற்கான முயற்சிகளிலே ஈடுபட்டிருந்தார். அதற்குப் பிறகு, அங்கே இராஜகோபால் தொண்டமானுடைய பெயரை அந்த மாளிகைக்கு வைக்கப்படவேண்டுமென்ற அந்தக் கோரிக்கை ஏற்கப்பட்டு அந்தப் பெயர் வைக்கப்பட்டிருக்கிறது. அந்த மாளிகை முகப்பிலே ஒரு சிலை வைக்கப்படவேண்டுமென்று திருநாவுக்கரசு அவர்களுடைய கோரிக்கையை ஏற்று விரைவிலே சிலை வைக்கப்படும் என்பதையும் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மனிதக்கழிவுகளை மனிதர்களே அகற்றும் கொடுமை தமிழகத்தில் ஒழிக்கப்படும் – துப்புரவுப் பணியாளர்களுக்கு மாற்றுப்பணி**


மனிதக் கழிவுகளை அகற்றுகின்ற பணி, அது நிதிநிலை அறிக்கையிலே அறிவிக்கப்பட்டது. அதுபற்றி கூட இங்கே அன்பில் பொய்யாமொழி பேசும்போது, நம்முடைய நண்பர் அழகிரி எம்.எல்.ஏ. அவர்கள் குறுக்கிட்டு, ஏற்கெனவே உள்ள திட்டம்தான், என்ன நிதி ஒதுக்கியிருக்கிறீர்களா என்றெல்லாம் கேட்டார்கள். ஒரு நல்ல திட்டத்தை வரவேற்கிற நேரத்திலே அதற்கு சிறு ஊனம் வருகின்ற அளவிற்கு பேசுவது முறையாக இருக்க முடியாது. இருந்தாலும் கூட நான் சொல்ல விரும்புகின்றேன். ஏற்கெனவே, இது மத்திய சர்க்கார் அறிவித்து பல மாநில அரசுகளால் பின்பற்றப்படாமல் ஏற்றுக்கொள்ளப்படாமல் அப்படியிருக்கின்றத் திட்டம். நம்முடைய மாநிலம்தான் 1989–ல் இந்த ஆட்சியிருந்தபோது இந்தத் திட்டத்தை அமல்படுத்த வேண்டுமென்று அதற்கான செலவையெல்லாம் செய்யத் தொடங்கியது. அது பற்றிய விவரத்தை சொல்ல விரும்புகிறேன். மனிதக் கழிவுகளை அகற்றும் தொழிலில் ஈடுபட்டிருக்கும் துப்புரவுப் பணியாளர்களுக்கு மறுவாழ்வு அளிக்க பின்வரும் திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளன. உள்ளாட்சி அமைப்புகளிலே பணிபுரிந்து வரும் துப்புரவுப் பணியாளர்களுக்கு சாலைகளைப் பெருக்குதல் போன்ற மாற்றுப் பணிகள் வழங்கப்படும். மாற்றுப் பணிகள் செய்ய விருப்பம் இல்லாதவர்களுக்கும் உள்ளாட்சி அமைப்புகளில் பணிபுரியாத பணியாளர்களுக்கும் தாட்கோ நிறுவனம் சொந்தமாக வியாபாரம் அல்லது தொழில் செய்ய அவர்களுக்கு உதவிட முன்வரும். **துப்புரவு பணியாளர்களுக்கோ அல்லது அவர் குடும்பத்தார்களுக்கோ அவர்கள் விரும்பும் தொழிலில் பயிற்சி அளிக்கப்படும்.** பயிற்சிக் காலத்திற்கு ஓராண்டு வரை **மாதம் ஒன்றுக்கு ரூ.350 உதவித் தொகையாகவும் அளிக்கப்படும்.** வியாபாரம் அல்லது **சுயதொழில் தொடங்க 50,000 ரூபாய் வரை நிதியுதவி அளிக்கப்படும். இதில் மானியம் 50 விழுக்காடு** அதிகபட்சம் 10,000 ரூபாய், விளிம்புத்தொகை Margin Money கடன் 15 விழுக்காடு, இதற்கு வட்டி 4 விழுக்காடு, மீதி 35 விழுக்காடு வங்கிக் கடனாக வழங்கப்படும். 1989–90–ல் எடுக்கப்பட்ட கணக்கெடுப்பின்படி தமிழ்நாட்டில் 35,561 துப்புரவு பணியாளர்கள் மனிதக் கழிவை அகற்றும் பணியில் ஈடுபட்டிருந்தார்கள். பிறகு ஏற்கெனவே கொஞ்சம் கொஞ்சமாக பணியமர்த்தப்பட்ட 15,000, 16,000 போக மீதமுள்ள 18,000 முதல் 20,000 துப்புரவு பணியாளர்களுக்கு தாட்கோ நிறுவனத்தின் மூலம் உதவிட 19 கோடி ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டுள்ளதோடு மேலும், உள்ளாட்சி அமைப்புகளின் மூலம் ஒரு கோடியே 7 இலட்சம் ரூபாயும் இந்தத் திட்டத்திற்காக நிதி ஒதுக்கப்பட்டுள்ளது என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன். இந்தத் திட்டம் முழுமையாக நிறைவேறுவதன் மூலம் தமிழ்நாட்டில் மனிதக் கழிவுகளை மனிதர்களே அகற்றும் கொடுமை ஒழிக்கப்படும் என்ற நல்ல செய்தியை இந்த அவைக்கு நான் தெரிவிக்க விரும்புகிறேன்.

உணவு உற்பத்தி வளர்ச்சியைப் பற்றி கோடிட்டு காட்டப்பட்டிருந்தது. இதிலே மொத்த உற்பத்தி வளர்ச்சி 1997–98ஆம் ஆண்டின் அளவான 6.31 விழுக்காட்டோடு ஒப்பிடும்போது 1998–99ஆம் ஆண்டில் 6.78 விழுக்காட்டை எட்டும் நிலையிலே உள்ளது என்று குறிப்பிடப்பட்டிருந்தது. இந்த ஆண்டு உணவு தானிய உற்பத்தி 98 இலட்சம் டன் என்ற அளவில் இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது என்றும் மகிழ்ச்சியோடு குறிப்பிடப்பட்டிருந்தது. இது பற்றி பேசிய நம்முடைய சுப்பராயன் அவர்கள், இதை

நான் பாராட்டுகிறேன், ஆனால் இந்த வளர்ச்சிக்கு, இந்த விளைவுக்கு 98 இலட்சம் டன் கிடைப்பதற்கு உதவியாக இருந்தவர்களையெல்லாம் மறந்து விட்டீர்களே என்றார். அவர்கள் எல்லாம் இந்த பட்ஜெட்டிலே இடம் பெறவில்லையே என்று அவர்கள் மிகுந்த வேதனையோடு இன்றைக்கு பேசியிருக்கின்றார்கள்.

### விவசாயிகள் நலனுக்காக அரசு ஆற்றிவரும் பணிகள்

நான் சுப்பராயன் அவர்களுக்கு மாத்திரமல்ல, விவசாயிகளுக்காக கவலை தெரிவிப்பது இயல்பானது. அவர்களும், தமிழ்நாட்டு வளர்ச்சிக்கு மிக முக்கியமான ஆதாரமாக இருப்பவர்கள். தொழிலாளர்கள், பொதுவான பாட்டாளி மக்கள், குறிப்பாக விவசாய பெருங்குடி மக்கள், தமிழ்நாட்டின் வளர்ச்சிக்கு ஆதாரமாக இருப்பவர்கள், என்பதை நான் நிச்சயமாக மறுக்க மாட்டேன். ஆனால், விவசாயிகள் நலனுக்கு அதில் எதுவுமே இல்லை என்று பழனிசாமி அவர்கள் கூட சொன்னார்கள். உலகத்தையெல்லாம் பார்க்கிற கலைஞர், இந்தியாவிற்கே அரசியல் நடத்துகிற கலைஞர், ஏன்தான் அந்த விவசாயிகளை மறந்துவிட்டார்களோ தெரியலையே என்று சொன்னார்கள். எங்கள் வீட்டிலே கேட்பார்கள், ஊர் எல்லாம் சுற்றுகிறீர்கள், வீட்டை கவனிப்பதில்லை என்று. அதுமாதிரி நம்முடைய பழனிசாமி உலகத்தையெல்லாம் பார்க்கிற கலைஞர் எங்களை கவனிக்கவில்லையே என்று சொன்னார். எப்படி அப்படி கவனிக்கிறோம் என்பதை கொஞ்சம் ஞாபகத்தில் வைத்துக்கொள்ள வேண்டும், அதை விவசாயிகளிடத்திலே சொல்ல வேண்டும். இப்போது, விவசாயிகளிடம், அவர்கள் கிட்டேபோய் கையிலே ஒரு 100 ரூபாய் கொடுத்தால்தான் அவர்களை கவனிப்பதாக அர்த்தமா? அதை சுப்பராயன் விரும்புவாரா? அது தொங்கும் சதை ஆயிற்றே, அதை ஒத்துக்கொள்வாரா?



### நீர்வள ஆதாரத் திட்டங்கள்

அவர்களுக்கு அடிப்படையிலே பொருளாதார ரீதியாக வசதிகளைப் பெருக்குவதன் மூலம் அவர்களுக்கு உதவிட வேண்டும். இப்போது பாசன தண்ணீர் கிடைப்பதை அதிகரிக்கச் செய்ய ஆற்றுப் படுகைகள், கால்வாய்கள், வடிகால்கள் மற்றும் குளங்கள் ஆகியவற்றை ரூ.58 கோடி செலவில் தூர்வாரும் பணிகள் மேற்கொள்ளப்பட்டன. மேலும், வரும் ஆண்டில் 50 கோடி ரூபாய் அதற்கு ஒதுக்கப்பட்டுள்ளது. நீர்வள ஆதார நிலைப்படுத்தும் திட்டம் மொத்தம் 1,140 கோடி ரூபாய் செலவில் உலக வங்கி நிதியுதவியோடு செயல்படுத்தப் பட்டு வருகிறது. இதுவரை 344 கோடி ரூபாய் மதிப்பீட்டுச் செலவில் 174 பணிகள் தொடங்கப்பட்டுவிட்டன. பாசனத்திற்காக கடந்த 3 ஆண்டுகளில் 174.88 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 9 நீர்ப்பாசனத் திட்டங்களுக்கு ஒப்புதல் அளிக்கப் பட்டுள்ளது. மேலும் வரும் நிதியாண்டிற்கு 91 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 6 புதிய திட்டங்கள் அறிவிக்கப்பட்டுள்ளன.

### தரிசு நில மேம்பாட்டு ஆணையம் உருவாக்கம்

விவசாயிகளின் நலன் கருதி தரிசு நில மேம்பாட்டிற்கு வரலாற்றில் இடம் பெறும் திட்டம் ஒன்றை வரும் நிதியாண்டிலேயே தொடங்கப்பட்டு 10 ஆயிரம் எக்டேர் பரப்பளவில் செயல்படுத்தப்படும் என இந்த அரசு அறிவித்துள்ளது. தரிசு நில மேம்பாட்டு ஆணையம் Waste Land Development Authority ஒன்றையும் அரசு அமைக்கும் என நிதிநிலை அறிக்கையிலே கூறியிருக்கிறேன்.

தோட்டக்கலை உற்பத்தி பொருள்கள் உபரியாக இருக்கும் காலத்தில் உழவர்கள் அவற்றை சேமித்து வைத்து நியாயமான விலை பெற ஏதுவாக குளிர்பதன சேமிப்பு கிடங்கு கட்டும் திட்டம் 40.52 கோடி ரூபாய் மதிப்பீட்டில் தொடங்கப்பட்டு உள்ளது. 1997–98 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையில் யூரியாவிற்கான விற்பனை வரி 4 விழுக்காட்டிலிருந்து 2 விழுக்காடாக

குறைக்கப்பட்டது. பருத்திக்கான கொள்முதல் வரி 4 விழுக்காட்டிலிருந்து 2 விழுக்காடாக குறைக்கப்பட்டது. மேலும் சொட்டு நீர்பாசன சாதனங்கள் போன்ற நீர்ப்பாசன சாதனங்களுக்கான விற்பனை வரி 11 விழுக்காட்டிலிருந்து 4 விழுக்காடாக குறைக்கப்பட்டது. மீன் மற்றும் கால்நடை தீவனங்களுக்காக முழு வரி விலக்கு அளிக்கப்பட்டது.

1999–2000 ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையில் விசை உழவுக் கருவிகள், இழுவைகள் மீதான விற்பனை வரி 11 விழுக்காட்டிலிருந்து 4 விழுக்காடாக குறைக்கப்பட்டுள்ளது. நடப்பு ஆண்டில் விவசாயி களுக்கு, நடப்பாண்டில் அல்ல, நடந்த ஆண்டிலே விவசாயிகளுக்கு நிலவரி தள்ளுபடி செய்யப்பட்டது. இதனால் அரசுக்கு 44 கோடி ரூபாய் இழப்பு ஏற்பட்டது.

விவசாயிகளுக்கு அரசு இலவசமாக மின்சாரம் வழங்குவதால் 1996–97 ஆம் ஆண்டில், 6,678 மில்லியன் யூனிட் மின்சாரம் அவர்களுக்கு வழங்கப்படுவதால், அதற்கு தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு 1,321 கோடி ரூபாய் இழப்பு ஏற்பட்டது. 1997–98 ஆம் ஆண்டில் 7,196 மில்லியன் யூனிட் மின்சாரம் வழங்கப்பட்டு 1,580 கோடி ரூபாய் இழப்பு ஏற்பட்டது. இந்த ஆண்டு 7,586 மில்லியன் யூனிட் மின்சாரம் வழங்கப்படுகிறது. இதனால் யூனிட் ஒன்றுக்கு 2 ரூபாய் 58 காசு என்ற விகிதத்தில் தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு 1,945.19 கோடி ரூபாய் இழப்பு ஏற்படுகிறது. கடந்த 3 ஆண்டுகளில் இவ்வாறு ஏற்பட்ட மொத்த இழப்பு 4,847 கோடி ரூபாய் என்பதை நான் ஞாபகப்படுத்துகின்றேன்.



தமிழ்நாட்டில் விதிக்கப்படும் தண்ணீர் தீர்வை நாட்டிலேயே மிகவும் குறைவானது ஆகும். இது 1962ஆம் ஆண்டிலிருந்து உயர்த்தப்படவே இல்லை. பெரிய, நடுத்தர மற்றும் சிறுபாசனங்கள் மூலம் அரசுக்கு இந்த ஆண்டு 10 கோடி ரூபாய் மட்டுமே வரவு கிடைக்கும். ஆனால், இந்தப் பாசனத் திட்டங்களைப் பராமரிக்கும் செலவு 37 கோடி ரூபாய். 37 கோடி ரூபாய் செலவழித்துவிட்டு, 10 கோடி ரூபாய்தான் வரியாகப் பெறுகிறோம். இந்த வகையிலேயும் விவசாயிகள்தான் பயன் அடைகிறார்கள். இது தவிர ஆண்டில் உணவு தானிய உற்பத்தி, தரிசு நில மேம்பாடு போன்ற பல்வேறு திட்டங்களுக்கு ரூபாய் 48 கோடி உதவித் தொகையாக வழங்கி, அரசு ஒதுக்கீடு செய்துள்ளது. கிராமங்களுக்கு இணைப்புச் சாலை, ஊரகக் குடிநீர்த் திட்டம், அண்ணா மறுமலர்ச்சித் திட்டம், நமக்கு நாமே திட்டம் போன்றவைகள் எல்லாம் கிராமங்களிலே உள்ள விவசாயிகளுடைய நலன் கருதி திட்டப்படும்

திட்டங்கள்தான். தமிழகத்திலே 1993–லேயிருந்து 1995 வரை, 6.6 விழுக்காடாக உயர்ந்த விவசாயத் தொழிலாளர்களுடைய கூலி, 1996–லேயிருந்து 1998 வரை 26.8 விழுக்காடாக விவசாயிகளுடைய கூலி உயர்ந்துள்ளது என்பதை ஞாபகப்படுத்துகிறேன். மேலும் விவசாயிகள் உற்பத்தி செய்யும் பொருட்களின் விலைப்புள்ளிக் குறியீடு (Price Index) அவர்கள் பயன்படுத்தும் பொருட்களின் விலைப்புள்ளி குறியீடுகளைவிட (Terms of Trade) 20 விழுக்காடு உயர்ந்துள்ளது. சிறு மற்றும் குறு விவசாயிகளின் கடன் பாக்கிகளை வசூல் செய்வதில் ஜப்தி நடவடிக்கை எடுக்கப் படமாட்டாது என்று ஏற்கெனவே அறிவித்திருந்தேன். இப்போது இந்த விவாதத்தில் அவையில் பல உறுப்பினர்கள் விவசாயிகளுடைய அபராத வட்டியைத் தள்ளுபடி செய்யவேண்டுமென்று கூறியிருக்கிறார்கள். அவ்வாறு செய்வதற்கு நபார்டு வங்கி ஒப்புதல் அளிக்கவில்லை. எனவே அதற்குப் பதிலாகத்தான் கடன்களைத் திருப்பி செலுத்தும் சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு ஊக்கத்தொகை அளிக்க அரசு முடிவு எடுத்துள்ளது.

**கூட்டுறவுக் கடன்களைத் திருப்பிச் செலுத்துவோருக்கு ஊக்கத்தொகை**

ஆந்திராவிலே இருப்பதைப் போல செய்யக்கூடாதா என்று எதிர்கட்சித் தலைவர் கேட்டார். பழனிசாமி அவர்களும் கேட்டார்கள். மற்றவர்களும் கேட்டிருக்கின்றார்கள். இந்த மாநிலத்தில் தஞ்சையில் மாத்திரம் 60,000 சிறு மற்றும் குறு விவசாயிகள் மீது ஜப்தி நடவடிக்கை கிடையாது என்றும், இந்தச் சலுகை மாநிலம் முழுமைக்கும் பொருந்தும் என்றும் குறிப்பிட்டிருக்கிறேன். அந்த வகையில் மாநிலம் முழுவதும் இயங்கிவரும் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளில் 11,21,000 சிறு மற்றும் குறு விவசாயிகள் விவசாயம் மற்றும் விவசாயம் சார்புடைய குறுகிய கால மற்றும் மத்திய கால கடன்களை பெற்றுள்ளார்கள். நிலுவையிலே உள்ள கடன்கள் முழுவதும் வட்டி மற்றும் அபராத வட்டியோடு நடப்பு கூட்டுறவு ஆண்டில் திருப்பிச் செலுத்துவோருக்கு – திருப்பிச் செலுத்த வேண்டும். அடிக்கடி கேட்கக்கூடாது. அதையெல்லாம் 'அட்ஜெஸ்ட்' பண்ணிக் கொள்வார்கள். அது அவர்களுக்குத் தெரியும். திருப்பிச் செலுத்துவோருக்கு அவர்களது நடப்புக் கடனில் 6.25% விழுக்காடு தொகையை, ஊக்கத்தொகையாக தமிழக அரசு வழங்கும் என்று முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

உதாரணமாக ரூ.5,000 நடப்புக் கடன் செலுத்துவோருக்கு ரூ.312.50 ஊக்கத்தொகை வழங்கப்படும். ரூ.10,000 நடப்புக் கடன் செலுத்துவோருக்கு ரூ.625 ஊக்கத்தொகை வழங்கப்படும். ரூ.25,000 நடப்புக் கடன் செலுத்துவோருக்கு ரூ.1,562 ஊக்கத்தொகை வழங்கப்படும். இந்தக் கணக்கைப் பார்த்துக்கொள்ள வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன். நடப்பு ஆண்டு ஏற்கெனவே செலுத்தியவர்களுக்கு இந்தத் தொகை ஈடுசெய்யப்படும் என்பதையும் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

**கீழ்பவானி ஆற்றுப்பாசனக் கால்வாய்கள் மேம்பாட்டிற்கு ரூ.10 கோடி ஒதுக்கீடு**

இத்தோடு பல திட்டங்களை அறிவித்தேன். நேற்றையதினம் பொதுப்பணித்துறை அமைச்சர் என்னிடத்திலே பேசும்போது சொன்னார்கள். இந்தத் திட்டங்களுக்காக ஒதுக்கியுள்ள தொகையில் 'டெண்டர்' விட்டதில் அதைவிடக் கொஞ்சம் குறைவான செலவுதான் தஞ்சை போன்ற இடங்களில், திருச்சி போன்ற இடங்களில் ஆகும் என்று தெரிகிறது. ரூபாய் 10, 12 கோடி மிச்சம் ஏற்படும் என்று தெரிகின்றது என்றார். அப்படியானால் வேறு மாவட்டங்களுக்கு அதைத் திருப்பு என்று பொதுப்பணித்துறை அமைச்சரிடம் திருப்புங்கள் என்று சொன்னேன். (அவையிலே திருப்பு என்று சொல்லக்கூடாது) அதன்படி கீழ்பவானி ஆற்றுப் பாசனப் பகுதியிலே உள்ள பாசனக் கால்வாய்கள் நீண்டகாலமாக தூர் வாரப்படாமலும், பழுதடைந்து கட்டுமானப் பகுதிகள் சீர் செய்யப்படாமலும் இருப்பதால் கடை மடைக்கும், அதன் பாசனப் பகுதிகளுக்கும் போதிய நீர் கிடைக்கவில்லை. இக்குறையைப் போக்க வேண்டுமென்று திருமதி. சுப்புலட்சுமி ஜெகதீசன் அவர்கள் ஒரு மனுவைக் கொடுத்தார்கள். இந்த மிச்ச ரூபாயை என்ன செய்வது என்று எண்ணிக்கொண்டிருந்தபோது அதற்கு ஒரு கிராக்கி வந்துவிட்டது. அதன்படி அந்தக் குறையைப் போக்க இந்த ஆண்டு முதல் தவணையாக ரூ.10 கோடி அதற்காக ஒதுக்கப்படுகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**தாமிரபரணி – கோதையாறு பாசனக்கால்வாய்கள் தூர்வாரி சீரமைக்கும் திட்டங்கள்**

அதைப்போலவே, நெல்லை, தூத்துக்குடி மாவட்டங்களில் பாசனத்திற்குப் பயன்படும் தாமிரபரணி, குமரி மாவட்டத்திலே பாயும் கோதையாறு ஆகிய ஆற்றுப் பகுதிகளிலே உள்ள கால்வாய்களை இந்த ஆண்டே சீர் செய்து தூர் வாரப்பட

வேண்டுமென்பதை பொதுப் பணித்துறை அமைச்சருக்கு வேண்டுகோள் விடுத்திருக்கிறேன். அவர் எழுதிக் கொடுக்கும்போது உத்தரவிட இருக்கிறேன் என்று எழுதிக் கொடுத்திருக்கிறார். பொதுப்பணித் துறை அமைச்சருக்கு இதுமாதிரி வேண்டுகோள் விடுத்திருக்கிறேன். உலக வங்கி நிதியிலிருந்து இப்பணிக்கு போதிய நிதி வழங்கப்படும் என்றும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**வரிக்குறைப்பும் – வரிவிலக்கும்**

வரிகளைப் பற்றி நம்முடைய எதிர்க்கட்சித் தலைவர் இங்கே குறிப்பிட்டார்கள். மேலும் இந்த வரி மாற்றம் பற்றிய சில அறிவிப்புகளை இங்கே வழங்க நான் முன்வருகின்றேன்.

தமிழ்நாடு பொது விற்பனை வரிச்சட்டம் பகுதி டி – வரிசை எண் 67–லே உள்ள எந்த அட்டவணையிலும் இடம் பெறாத பிற பொருட்கள் அவற்றுக்கு ஈடான பொருட்கள் இடம் பெறுபவைகளில் சேர்க்கப்படும் என்று அறிவித்திருந்தேன். இதுபற்றி சிறு விளக்கம் தெரிவிக்க வேண்டுமென்பதற்காக என்னென்ன இனங்களுக்கு 11 விழுக்காடு வரியிலேயிருந்து வரிவிலக்கு, வரி குறைப்பு அளிக்கப்பட்டுள்ளது என்பதை பின்வரும் உதாரணங்களோடு எடுத்துரைக்க விரும்புகின்றேன்.

பருத்தியினால் செய்யப்பட்ட கயிறு, பிரம்பினால் செய்யப்பட்ட தட்டி, கூடை மற்றும் முறம், கரும்பு சக்கை போன்ற பொருள்களுக்கு விற்பனை வரியிலிருந்து முழு விலக்கு அளிக்கப்படுகிறது.

அகர்பத்தி, வெப்ப அளவி, லேக்டோஸ் IP/BP. காலி gas சிலிண்டர், அனைத்து வகை கம்பித் தடுப்புகள் (GRILLS) காகித நாப்கின்கள், சாவிக் கொத்துக்கள், போட்டோ ஆல்பங்கள், இரும்பு அல்லாத மற்றும் கலப்பு உலோகங்களின் கழிவுகள், கண்ணாடிப் புட்டிகளில், சாஷேக்களில், கேன்களில் அடைக்கப்பட்ட தண்ணீர், டிஸ்டில்டு வாட்டர், செயற்கை எலும்புகள், எலும்பு சிமெண்டு, அப்டாமினல் பெல்ட், நீ கேப் போன்ற பொருள்களுக்கு விற்பனை வரி 11 விழுக்காட்டிலிருந்து 8 விழுக்காடாகக் குறைக்கப் படுகிறது.

பழுதடைந்த (Condemned) கோணிப் பைகள், அனைத்து வகை கொசு வலைகள், நாப்தலின் உருண்டைகள், சணலினால் செய்யப்பட்ட மேஜை விரிப்பு, மிதியடி, கைவினைப் பொருட்கள், உடற்பயிற்சிக்கான பொருள்கள் மற்றும் உபகரணங்கள், குழந்தைகள் பயன்படுத்தும் விளையாட்டு சாதனங்கள், ஓட்ஸ், பாத்திரங்களை சுத்தப்படுத்தும் பொடிகள், வேர்க்கடலை, எள், பொரி, வருகடலை, எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சொன்ன வருகடலை, எள், பொரி மற்றும் பட்டாணி, பருப்பு வகையினால் செய்யப்பட்ட இனிப்புப் பண்டங்கள், வணிக சின்னமிடப்பட்ட சுண்டைக்காய் வத்தல், கத்தரிக்காய் வத்தல், கொத்தவரங்காய் வத்தல், மணத்தக்காளி வத்தல் போன்ற காய்கறி வத்தல்கள், செம்மன்/சிகப்பு சரளைகற்கள் ஆகிய பொருட்களுக்கு 11 விழுக்காடு வரியிலிருந்து 4 விழுக்காடு வரியாகக் குறைக்கப்படுகிறது.

வணிக சின்னம் இல்லாத சுண்டைக்காய் வத்தல், கத்தரிக்காய் வத்தல், கொத்தவரங்காய் வத்தல், மணத்தக்காளி வத்தல் போன்ற காய்கறி வத்தல்கள் ஆகியவற்றிற்கு 11 விழுக்காடு வரியிலிருந்து 2 விழுக்காடாகக் குறைக்கப்படுகிறது.

அட்டவணைப்படுத்தும் கணக்கிடும் எந்திரங்களுக்கு (மின்னணு அல்லாதவை – பிரிவு ஜி வரிசை எண் 18) 20 விழுக்காடு வரியிலிருந்து 8 விழுக்காடாகக் குறைக்கப்படுகிறது.

நம் நாட்டில் உற்பத்தி செய்யப்படும் நடுத்தர அடர்த்தி இலை அட்டை எம்.டி.எஃப் போர்டுக்கு வரி 16 விழுக்காட்டிலிருந்து 8 விழுக்காடாகக் குறைக்கப்படுகிறது. இறக்குமதி செய்யப்படும் மேற்கண்ட பொருட்கள் 16 விழுக்காட்டில் நீடிக்கும் வகையில் அட்டவணையில் குறிப்பாகச் சேர்க்கப்படுகிறது.

தமிழ் தினசரி நாட்காட்டிக்கு வ்ரி 8 விழுக்காட்டிலிருந்து 4 விழுக்காடாகக் குறைக்கப் படுகிறது.

பழைய பாட்டில்கள் வியாபாரம் செய்யும் சிறு வணிகர்களுக்கு வரி விதிப்பிலிருந்து விலக்களிக்க வேண்டுமென்று கோரப்பட்டது. அவர்கள் மீது விதிக்கப்படும் விற்பனை வரியை விலக்கி அந்த பாட்டில்களை வாங்கி பயன்படுத்துவோருக்கு கொள்முதல் வரியாக மாற்றி அமைக்கப்படுகிறது என்பதைத் தெரிவித்துக்கொண்டு இப்போதிருக்கிற அதே பர்சன்டேஜ்தான். இந்த அளவோடு இந்த வரி மாற்றங்களை வெளியிடுவதோடு, வரிக்கு வரி இந்த வரவு, செலவு திட்டத்தைப் படித்து அருமையான கருத்துக்களை, குறைகளை வழங்கிய அனைவருக்கும் நன்றியினைத் தெரிவித்து அண்ணா வாழ்க என்று கூறி என் உரையை முடிக்கின்றேன்.



# விவசாயத் தொழிலாளர்களுக்கு ஊதியம் உயர்வு

– சட்டப்பேரவையில்

முதலமைச்சர் **கலைஞர்** அறிவிப்பு

தமிழ்நாடு அமைச்சரவைக் கூட்டம் 4–9–99 அன்று நடைபெற்றது. அதில் எடுத்த இரண்டு முக்கியமான முடிவுகள் குறித்து இந்தப் பேரவையிலே சட்டப் பேரவை விதி 110 இன் கீழ் இந்த அறிக்கையினை அளிக்கிறேன்.

விவசாயிகளுக்கு வெள்ளத்தினால் ஏற்படும் பாதிப்புக்களைக் குறைக்கவும், காவிரி கழிமுகப் பகுதிகளில் நீர், ஆறுகளிலும், கால்வாய்களிலும், வடிகால்களிலும் தங்குதடையின்றி கடைமடைப் பகுதிகளைச் சென்றடையவும், மாநில அரசால் தூர்வாரும் பணிகள் பெருமளவில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

**நடப்பு நிதியாண்டில் தூர்வாரும் பணிகளுக்கு ரூ.50 கோடி செலவிட திட்டம்**

1997–98 ஆம் ஆண்டு இதற்காக ரூ.32.66 கோடியும், 1998–99 ஆம் ஆண்டில் 46.50 கோடியும் செலவிடப்பட்டன. நடப்பு நிதியாண்டில் (1999–2000) இதற்காக ரூ.50 கோடியும் செலவிடத் திட்டமிடப்பட்டுள்ளது.

இதுதவிர, உலக வங்கி உதவியுடன் செயற்படுத்தப் பட்டு வரும் நீர்வள ஆதாரத் தொகுப்பு திட்டத்தின் கீழ் மாநிலத்தின் காவிரிப் படுகை தவிர்த்த மற்ற அனைத்துப் பாசன அமைப்புகளிலும் உள்ள கால்வாய்களில் தூர் அகற்றல், உள்ளுரை அமைத்தல், பாசனக் கட்டமைப்புக்களைப் பழுது நீக்கி மேம்படுத்தல் போன்ற பணிகள் பெரிய அளவில் ரூ.350 கோடி செலவில் நடைபெற்று வருகின்றன. இப்பணிகள் அனைத்தும் செப்டம்பர் 2001–க்குள் முடிவடையும்.



**சிறு கால்வாய்கள் – வயற்கண்ணிகள் நன்கு பராமரிக்கப்பட வேண்டும்**

ஆறுகளிலும், கால்வாய்களிலும், வடிகால்களிலும் இவ்வாறு தூர்வாரும் பணிகளை மேற்கொண்ட போதிலும், பாசனப் பிரிவு வாய்க்கால்களுக்குக் கீழேயுள்ள சிறுகால்வாய்களையும், வயற்கண்ணி களையும் நன்கு பராமரிப்பது இன்றியமை யாததாகும். இந்தப் பராமரிப்பும், அவற்றின் பயனீட்டாளர்களான விவசாயிகளின் ஈடுபாட்டுடன் செய்யப்பட்டால் அது சிறப்பாக நடைபெறும். முன்பிருந்த குடிமராமத்து முறை

முற்றிலுமாக கைவிடப்பட்ட நிலையில் பிரிவு வாய்க்கால்களின் கீழுள்ள பாசன அமைப்புகள் சீரழிந்துவிட்டன.

ஆந்திர மாநிலத்தில் பிரிவு வாய்க்கால்களின் கீழுள்ள பாசன அமைப்புகளின் செயலாக்கம் மற்றும் பராமரிப்புப் பொறுப்பினை விவசாய சங்கங்களிடம் ஒப்படைக்கும் பணி ஆந்திரப் பிரதேச விவசாயிகள் பாசன அமைப்பு மேலாண்மைச் சட்டம், 1997 (Andhra Pradesh Farmers' Management of Irrigation Systems Act, 1997) மூலம் வெற்றிகரமாக நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.



நமது மாநிலத்திலும் 'நமக்கு நாமே' திட்டம் வெற்றிகரமாக செயற்படுத்தப்பட்டுள்ளது. இந்த நமக்கு நாமே திட்டத்தின் அடிப்படையிலேயே, பிரிவு வாய்க்கால்களுக்குக் கீழுள்ள பாசன அமைப்புகளின் செயலாக்கம் மற்றும் பராமரிப்புப் பொறுப்பினை விவசாய சங்கங்களிடமே ஒப்படைக்க வேண்டி, இத்தகைய சட்டத்தை நம் மாநிலத்திலும் கொண்டு வர அமைச்சரவை **4–4–99** அன்று நடைபெற்ற கூட்டத்தில் முடிவு செய்துள்ளது. செயலாக்கம் மற்றும் பராமரிப்புச் செலவினங்களுக்குத் தேவையான நிதி அரசின் மூலம் விவசாய சங்கங்களுக்கு ஒதுக்கப்படும்.

பொதுப்பணித்துறை, விவசாயத் துறை, உள்ளாட்சித் துறை அமைச்சர்களும், அதிகாரிகள், பொறியாளர்களும் அடங்கிய குழு ஒன்று, ஆந்திர மாநிலத்திற்கு விரைவில் சென்று அவர்களது சட்டம் எவ்வாறு செயல்படுகிறது என்பதைக் கண்டறிந்து, இதற்கான சட்ட முன் வடிவொன்றினைப் பரிந்துரை செய்யும், இதற்கான சட்டம் இக்கூட்டத் தொடரிலேயே சட்டமன்றத்தில் அறிமுகப்படுத்தப்படும்.

இத்துடன் நேற்று நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட மற்றொரு முக்கியமான முடிவையும் அவைக்கு அறிவிக்கிறேன்.

**கோலப்பன் குழு அறிக்கையின் மீது எடுக்கப்பட்ட முடிவுகள்**

மேதகு தமிழக ஆளுநர் அவர்கள் இந்த அவையில் **17.2.99** அன்று "விவசாயிகளின் குறைந்தபட்ச ஊதியம் குறித்த கோலப்பன் குழுவின் அறிக்கையை அரசு

பரிசலித்து வருகிறது. அது குறித்து அரசு எடுத்துள்ள முடிவுகள் இந்தக் கூட்டத் தொடரில் அறிவிக்கப்படும்" என்று கூறியிருந்ததையொட்டியும் 1999-2000ஆம் ஆண்டுக்கான நிதி நிலை அறிக்கையை இந்த அவையிலே 17-3-99 அன்று நான் அளித்தபோது "விவசாயத் தொழிலாளர்களின் குறைந்த பட்ச ஊதியம் குறித்த திரு.கோலப்பன் குழுவின் அறிக்கையின் மீது அரசு உரிய முடிவு எடுத்து இக்கூட்டத் தொடரில் அறிவிக்கப்படும்" என்று தெரிவித்ததையொட்டியும் நேற்றைய தினம் அமைச்சரவையிலே கோலப்பன் குழுவின் அறிக்கையிலே விவசாயத் தொழிலாளர்களின் குறைந்த பட்ச ஊதியம் குறித்து விரிவாக விவாதிக்கப்பட்டு பின்வரும் முடிவுகள் எடுக்கப்பட்டுள்ளன.

- சொந்த ஏர்மாட்டுடன் உழவு செய்யும் விவசாயத் தொழிலாளர்களுக்குத் தற்போதைய குறைந்தபட்ச ஊதியம் நாள் ஒன்றுக்கு ரூ55. இதிலே கோலப்பன் குழு செய்துள்ள பரிந்துரை ரூ.100. அரசு இந்தப் பரிந்துரையை அப்படியே முழுவதுமாக ஏற்றுக் கொள்கிறது.

- சொந்த ஏர்மாடு இல்லாமல் உழவு செய்யும் விவசாயத் தொழிலாளர்களுக்கு நாள் ஒன்றுக்குத் தற்போதைய குறைந்தபட்ச ஊதியம் ரூ.32. இது குறித்து கோலப்பன் குழு செய்துள்ள பரிந்துரை 54 ரூபாய். இந்தப் பரிந்துரையையும் அரசு அப்படியே ஏற்றுக் கொள்கிறது.

- நெல் அறுவடை செய்யும் விவசாயத் தொழிலாளர் – அறுவடை களத்திற்கு எடுத்துச் சென்று கதிரடித்தல், அளந்து மூட்டைகளில் கட்டுதல் – ஆகிய பணிகளிலே ஈடுபடுவோருக்குத் தற்போதைய ஊதியம் நாள் ஒன்றக்கு 32 ரூபாய் அல்லது விளைச்சலில் எட்டில் ஒரு பகுதியாகும். ஆண் தொழிலாளர்களும் பெண் தொழிலாளர்களும் இந்தப் பணியை ஒரே விதமாக மேற்கொள்வதால் இந்தப் பணியிலே ஆறு மணி நேரம் ஈடுபடும் ஆண் தொழிலாளர்களுக்கு 54 ரூபாய் என்றும் ஐந்து மணி நேரம் ஈடுபடும் பெண் தொழிலாளர்களுக்கு 45 ரூபாய் என்றும் அதாவது இரு தரப்பினரையும் ஒரேவிதமாக கருதி மணிக்கு ஒன்பது ரூபாய் வீதம் ஊதியம் இருக்க வேண்டுமென்று கோலப்பன் குழு பரிந்துரை செய்துள்ளது. இந்தப் பரிந்துரையையும் அரசு அப்படியே ஏற்றுக் கொள்கிறது.

நெல் தவிர்த்த பிற தானியங்களை அறுவடை செய்யும் தொழிலாளர்களுக்குத் தற்போதைய குறைந்தபட்ச ஊதியம் நாள் ஒன்றுக்கு 32 ரூபாய். இதனையும் கோலப்பன் குழு ஆராய்ந்து ஆண் தொழிலாளர்களுக்கு 54 ரூபாய் என்றும் பெண் தொழிலாளர்களுக்கு 45 ரூபாய் என்றும் பரிந்துரை செய்துள்ளது. இந்தப் பரிந்துரையும் அப்படியே அரசால் ஏற்றுக் கொள்ளப்படுகிறது.

விதைத்தல், நாற்றுப் பறித்தல், நடுதல், களை எடுத்தல் போன்ற தொழில்களில் ஈடுபடும் விவசாயத் தொழிலாளர்களுக்குத் தற்போதைய குறைந்த பட்ச ஊதியம் நாள் ஒன்றுக்கு விதைத்தலுக்கு 32 ரூபாய் என்றும் நாற்று பறித்தல்/நாற்று நடுதல் ஆகியவற்றுக்கு 30 ரூபாய் என்றும், களை எடுப்பதற்கு 29 ரூபாய் என்றும் உள்ளது. இந்த மூன்றையும் ஒருங்கிணைத்து இத்தகைய பணியிலே ஈடுபடுவோருக்கு ஆண் தொழிலாளருக்கு 54 ரூபாய் என்றும் பெண் தொழிலாளருக்கு 45 ரூபாய் என்றும் மணிக் கணக்குப்படி குறைந்த பட்ச ஊதியத்தை கோலப்பன் குழு பரிந்துரை செய்துள்ளது. இந்தப் பரிந்துரையையும் அரசு ஏற்றுக் கொள்கிறது.

**இதர விவசாயப் பணிகளுக்கும் ஊதியம் உயர்வு**

பிற விவசாயப் பணிகளில் அதாவது வரப்பு வெட்டுதல், கோழி வளர்த்தல், தேனீ வளர்த்தல், பால் பண்ணை மற்றும் மரம் ஏறுதல் ஆகிய பணிகளை மேற்கொள்ளும் தொழிலாளர்களுக்கு தற்போது நாள் ஒன்றுக்கு குறைந்த பட்ச ஊதியம் ரூபாய் 32. கோலப்பன் குழு இதிலே செய்துள்ள பரிந்துரை நாள் ஒன்றுக்கு ஆண் தொழிலாளர்களுக்கு 54 ரூபாய் என்றும் பெண் தொழிலாளர்களுக்கு 45 ரூபாய் என்பதுமாகும். இந்தப் பரிந்துரையையும் அரசு அப்படியே ஏற்றுக் கொள்கிறது.

சம ஊதியச் சட்டப்படி இதில் நேரமும் பணியும் ஒரே மாதிரியாக இருக்குமேயானால் ஆண், பெண் தொழிலாளர் இருவருக்கும் சமமான ஊதியம் தரப்பட வேண்டும் என்ற ஒரு முடிவையும் அரசு இன்று இந்த அவையிலே அறிவிக்கின்றது. இது கோலப்பன் குழுவினால் சுட்டிக்காட்டப்படாவிட்டாலும் கூட அரசு புதிதாக அறிவிக்கின்றது.

இந்தக் குறைந்த பட்ச ஊதியம் அரசு சார்புடைய பண்ணைகள், வேளாண்மைப் பல்கலைக் கழகங்கள் ஆகியவைகளுக்கும் பொருந்தும். மேலும் ஏற்கெனவே நியாயக் கூலி சட்டம் அமலில் உள்ள 11 வட்டங்களுக்கும் கூட இந்த முடிவுகள் பொருந்தும்.

இது பொதுவான குறைந்தபட்ச ஊதிய நிர்ணயமாகும். சில பகுதிகளில் ஆங்காங்குள்ள நிலைமைகளுக்கு ஏற்றவாறு மாவட்ட வருவாய்த் துறை அதிகாரிகள் கூட்டும் முத்தரப்பு பேச்சுவார்த்தை மூலமாக தானியமாக வழங்குவதோ அல்லது பணமாக வழங்குவதோ ஆகியவவைகளைப் பற்றி முடிவு எடுத்துக் கொள்வார்களானால் அதனையும் அரசு ஏற்றுக் கொள்ளும்.

*– மாண்புமிகு முதலமைச்சர் **கலைஞர்** அவர்கள்*
***5.4.99** அன்று சட்டப் பேரவையில்*
*அளித்த அறிக்கை.*

★ ★ ★



# மாணவர்களை பள்ளியில் சேர்க்க இயக்கம்

– கல்வி அமைச்சர்
பேராசிரியர் க. அன்பழகன்
அறிவிப்பு.

கல்வி அமைச்சர் பேராசிரியர் க. அன்பழகன் அவர்கள் 31–3–99 அன்று சட்டப் பேரவையில் கல்வி மான்யக் கோரிக்கை மீதான விவாதங்களுக்கு பதிலளிக்கையில் குறிப்பிட்டதாவது :

தாய்மொழிக் கல்வியை விட சிறுகுழந்தைகளுக்குச் சிறந்த கல்வி வேறு கிடையாது. கல்வி என்பதைக்கூட குழந்தைகள் அது ஒரு பயிற்சி என்ற எண்ணம் இல்லாமல் உணருவதற்கு வாய்ப்பாக இருப்பதற்குப் பெயர்தான் குழந்தைகளுக்கான கல்வி. மேல்நாடுகளிலே எல்லாம் ஐந்து வயது வரையில் பாடப்புத்தகமே இல்லாமல் ஏதோ விளையாட்டோடு சேர்ந்த கல்வி வழங்குகிற முறைதான் மழலையர் பள்ளியிலே வழங்குகிறார்கள். அந்த நிலை நம்முடைய நாட்டின் பொருளாதார நிலையில் எளிதாக வராது. ஆகவே அப்படி வராத ஒன்றை தமிழ்நாட்டிலே செய்ய முடியும் என்ற ஒரு எண்ணத்தை ஏற்படுத்தத் தயாராக இல்லை.

ஐந்து வயதுக்கு மேற்பட்ட பதினான்கு வயது வரையில் உள்ள ஆண் பெண் அனைவரும் கட்டாயமாகக் கல்வி கற்க ஒரு வாய்ப்பு அளிக்க வேண்டும் என்பதும் அவர்களை கல்வியை விட்டு விலகாமல் பாதுகாக்கக் வேண்டும் என்பதும் அரசியல் சட்டம் ஏற்றுக்கொள்ளப்பட்ட அடிப்படைக் கொள்கை. அதைத்தான் கட்டாயக் கல்வி என்று நாம் சொல்கிறோம். ஜனநாயகம் அடியோடு கெட்டுப் போகமல் இருக்கவும் இந்தக் கட்டாயக் கல்வி தேவை. அதேநேரத்தில் தங்களுடைய உரிமையைக் காத்துக் கொள்ளவும் இந்தக் கட்டாயக் கல்வி தேவை. அதை வழங்குவதிலேகூட 100–க்கு 95 பங்கு தமிழ்நாட்டிலே நாம் இப்போது பெற்றிருக்கிறோம்.

மகளிர் இன்னும் சற்று அதிகமான அளவிற்குக் கல்வி கற்க முன்வருகிற ஒரு சூழ்நிலை உருவாக்குகிறபோது இன்னும் 2,3 ஆண்டுகளில் 100–க்கு 100 பேர் கல்வி வாய்ப்பைப் பெற்றிருக் கிறார்கள் என்று சொல்லக்கூடிய நிலைமையை நாம் உருவாக்க முடியும். அந்த வகையிலே தான் தொடக்கக் கல்வியில் இந்த ஆண்டு மேலும் 400 பள்ளிக்கூடங்களைத் தொடங்கி கடந்த ஆண்டு 300–ஏற்கெனவே 30 ஆயிரம் மொத்தத்திலே ஏறத்தாழ 31 ஆயிரம் பள்ளிக்கூடங்கள் இயங்கக்கூடிய நிலைமை மூலமாக எல்லா கிராமப்புறத்திலேயுள்ள மிக மிகத் தாழ்ந்த, பின்தங்கிய நிலையிலே வாழ்கிற ஏழைகள் வீட்டு ஆண்கள், பெண்கள் அனைவரும் பள்ளிக் கூடங்களிலே சேர்க்கப்படுவதற்கு ஒரு வாய்ப்பை உருவாக்கித் தர வேண்டும் என்ற ஒரு கிலோமீட்டர் தொலைவிற்குள் தங்களுடைய பிள்ளைகளைப் பள்ளிக்கு அனுப்ப முடியும் என்ற நிலையை பெற்றோர்களுக்கு ஏற்படுத்தித் தர வேண்டும் என்று அரசு கருதி அந்த முயற்சியிலே ஈடுபட்டிருக்கிறது.

இந்த ஆண்டு ஜூன், ஜூலையிலே அப்பள்ளிக் கூடங்கள் மிச்சமுள்ள இடங்களிலே தொடங்கப்படும். சமத்துவபுரத்திலேயும் பள்ளிக்கூடங்கள் தொடங்குவதை ஏற்றுக்கொண்டு அதற்கும் சில பள்ளிக்கூடங்கள் ஒதுக்கப்பட்டு நடைமுறைக்கு வருகின்றன.

### மாணவர்களை பள்ளிகளில் சேர்க்க இயக்கம் நடத்த வேண்டும்

வருகிற மே திங்களில் மாணவர் களை, குழந்தைகளைப் பள்ளி களிலே சேர்க்க வேண்டும் என்பதற்காக கிராமப் பகுதியில் ஒரு இயக்கம் நடத்த வேண்டும். பஞ்சாயத்துத் தலைவர்கள், உள்ளாட்சி மன்றத் தலைவர்கள், மக்கள் நலப்பணியாளர்கள், அரசு

அலுவலர்கள், பள்ளியாசிரியர்கள், பெற்றோர் – ஆசிரியர் கழகத்தைச் சேர்ந்தவர்கள் – கூடுமானால் அந்தந்த வட்டாரத்திலேயுள்ள சட்டமன்ற உறுப்பினர்கள் ஒரு இயக்கம், ஒரு உணர்வை ஏற்படுத்துவதற்கு நடத்த வேண்டும் என்றும் முதலமைச்சர் அவர்கள் நிதிநிலை அறிக்கையிலே தெரிவித் திருக்கிறார்கள். அது இந்த நாட்டுக்காக, சமூகத்திற்காக, அடித்தட்டு மக்களுக்காக நாம் ஆற்ற வேண்டிய பணி என்ற உணர்வோடு சட்டமன்ற உறுப்பினர்கள் ஆங்காங்கே கலந்து கொள்ள வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

நான் 89–90லே கல்வி யமைச்சராக இருந்துவிட்டு, 96–லே வந்து பார்க்கிறபொழுது அதைவிடக் கொஞ்சம் முன்னேறியிருக்கும் என்று நினைத்துக்கொண்டுதான் நான் இந்தப் பொறுப்பை எடுத்துக் கொண்டேன். ஆனால் 91–லே இருந்ததைவிட கெட்டுப்போய் இருக்கிற நிலைமையிலேதான் நான் இந்தப் பொறுப்புக்கு வந்தேன்.

இன்றைக்குக் கல்வித்துறையில் செலவாகிற பணத்தில் 100–க்கு 75 பங்கு கிராமப் பகுதிகளில்தான் செலவாகிறது. அது கிராமப் பகுதியில் செலவாகிறது என்று சொன்னால் அதிகம் என்று சொல்லவில்லை அவசியம் தேவை. செலவாகிறது அந்தப் பணத்தால் பயன்பெறக்கூடியவர்களாக இருப்பவர்கள் ஆசிரியர்களில் நூற்றுக்கு எண்பது பேர் பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட, மிக மிகப் பின்தங்கிய சமுதாயத்தைச் சார்ந்தவர்கள்தான்.

1994–95ல் அரசாங்கம் ஏற்றுக்கொண்ட பள்ளிக்கூடங்கள், அரசாங்கம் நடத்துகிற பள்ளிகளிலே இருந்த ஆசிரியர்களுக்கும், மாணவர்களுக்கும் விகிதாச்சாரம், பிரைமரி ஸ்கூலிலே 1:50. 1994–95லேயே ஒரு ஆசிரியருக்கு 50 மாணவர்கள். 1995–96லேயும் 50 மாணவர்கள். 1996–97ல் நாம் பொறுப்புக்கு வந்ததற்குப் பின்னர் 1:40. 1997–98ல் மாணவர்கள் எண்ணிக்கை அதிகமாகி இருக்கிறது. அப்போது 1:40. இப்போது, 1998–99இல் 1:38. நாம் ஐடியல் என்பது 1:35; அதுவரைக்கும்தான் போக முடியும். ஆக, இந்த வளர்ச்சி, இந்த 5 ஆண்டுகளில் மெல்ல மெல்ல ஏற்பட்டு இருப்பதை புள்ளி விவரத்தின் மூலமான நான் தெரிவித்துக் கொள்ள விரும்பு கிறேன்.

அதேபோல, இடைநிலை ஆசிரியர்களுடைய பணி யிடங்களிலே எல்லாம் பட்டதாரி ஆசிரியர்களை நியமிக்க வேண்டும் என்று ஒரு கருத்து சொல்லப்பட்டது. ஒரு கொள்கை,



பட்டதாரி ஆசிரியர்கள், இடைநிலை ஆசிரியர் இடங்களில் எந்த அளவுக்கு வாய்ப்பு இருக்கிறதோ, அந்த அளவுக்கு நியமிக்கலாம் என்று ஒவ்வொரு ஆண்டும் 100 பட்டதாரி ஆசிரியர்கள் நடுநிலைப் பள்ளி களுக்காக அனுமதிக்கப்பட்டு, அவர்கள் எடுக்கப்படுகிறார்கள். ஆனால், இடைநிலை ஆசிரியர் இடங்களையே குறைத்து, அந்த இடங்களில் பட்டதாரி ஆசிரியர் களை நியமிக்க முடியுமா என்று கேட்டால், 2 குறைபாடுகள் இருக்கின்றன; ஒன்று, இடைநிலை ஆசிரியர், அதாவது இடைநிலை ஆசிரியர் இடத்தை பட்டதாரி ஆசிரியர்களைக் கொண்டு நிரப்ப முடியாது என்பது நீதிமன்றத் தீர்ப்பு. என்ன காரணம் என்றால், இது வேறு பயிற்சி; அது வேறு பயிற்சி. மற்றொன்று, இடைநிலை ஆசிரியர் சம்பளத்திற்கு பட்டதாரி ஆசிரியர்கள் தொடர்ந்து வேலை செய்ய விரும்புவார்களா என்பது அடுத்த கேள்வி.

இந்த 21ஆம் நூற்றாண்டு, கணினி மூலமாகத்தான் உலகம் மாபெரும் மாற்றத்தை, வளத்தை அடைய இருக்கிறது. ஆகவே, நல்லவேளையாக நம்முடைய முதல்வர் கலைஞர் அவர்கள் மிகப்பெரிய அளவிலே அதனுடைய தாக்கம் இருக்கும் என்பதை உணர்ந்து, இந்த ஆண்டு தொடக்கத்திலேயே அதற்கான ஏற்பாடுகளைச் செய்து, கணினியிலே தமிழை உரிய முறையில் பயன்படுவதற்கான அடிப் படைகளை உருவாக்குவதற்காக இண்டெர்நெட் மூலமாக, தமிழ் பயன்படுவதற்காக, ஒரு மாநாடு மூன்று மாதங்களுக்கு முன்னாலே நடத்தி, தமிழையும் பயன்படுத்துவது மட்டும் அல்ல, தமிழ்நாட்டு இளைஞர்கள் அதிலே அதிக அளவு, அதைப் பயன்படுத்தி வாழ்க்கையில் தொழில் வாய்ப்பைப்

பெற வேண்டும். அதிலும் ப்ளஸ் – 2 படிக்கிற மாணவர்களுக்கு தமிழ்நாட்டிலே பரவலாக இந்தக் கணினி அறிவை வழங்க வேண்டுமென்று, அவர்கள் ஆணையிட்டு, அதற்கான ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன.

**1200 மேல்நிலைப் பள்ளிகளில் கணினிப் பயிற்சி**

பள்ளிகளில் கணினிப்பயிற்சி 100 பள்ளிக்கூடங்களில் வழங்கலாம் என்று கருதி, திட்டமிட்டோம். இப்போது 1,200 பள்ளிக் கூடங்களிலேயும், மேல்நிலைப் பள்ளிக் கூடங்களிலேயும் அந்த வாய்ப்பை உருவாக்குவதற்கு, பெரிய நிறுவனங்கள், கணினி அடிப்படையில் செயல்படுகிற பெரிய நிறுவனங்கள் இந்தப் பள்ளிக் கூடங்களைப் பொறுப்பேற்றுக் கொண்டு, ஒரு ஒப்பந்த முறையில் ஒரு மூன்று ஆண்டு, ஐந்து ஆண்டு ஒப்பந்த முறையில் இந்தப் பள்ளி மாணவர்களுக்கு பயிற்சி அளிக்க வேண்டுமென்று கேட்கப் பட்டி ருக்கிறது. அந்த ஒப்பந்தம் செய்வதற்கான ஆணை பிறக்கப் பட்டிருக்கிறது. விரைவாக ஒரு முடிவு ஏற்பட்டு, அதன் மூலமாக கல்வி வளர்ச்சி மாணவர்களிடத்திலே, கிராமத்து மாணவர்களிடத்திலே ஏற்படும் என்று, பயன் ஏற்படும் என்று நான் நிச்சயமாக எதிர்பார்க்கிறேன்.

மற்றொரு, அழுத்தமான கருத்து, 15 விழுக்காடு கிராமத்து மாணவர்களுக்கு ஒற்றைச் சாளர முறையில், பொறியியல் கல்லூரியில், அதேபோல பல்தொழில் பயிலகம், பாலிடெக்னிக் கல்லூரியில் வழங்குவதாக ஏற்பாடு செய்து, கடந்த ஆண்டு அது செம்மையாக நடைப்பெற்றிருக்கிறது. அதிலே ஒரு அழுத்தமான எண்ணம், அந்தக் கிராமப்புறப் பள்ளிக்கூடங்கள் என்று பெயர்ப்பட்டியல், மாவட்ட ஆட்சித் தலைவர் நமக்கு அனுப்பினாலும்கூட, கிராம நிறுவனங்கள் என்ற அடிப்படையில் அனுப்பினாலும் கூட பேரூராட்சிமன்ற வளாகம் அதிலே விடுபட்டுப் போகின்ற காரணத்தால், பேரூராட்சி மன்றத்திலே இருக்கின்ற பள்ளிக்கூடங்களையும் அதிலே இணைக்க வேண்டுமென்ற ஒரு கருத்து இருக்கிறது.

ஆனால் பேரூராட்சி மன்றத்திலே இருக்கின்ற பள்ளிக்கூடங்கள் என்ற முறையிலே அவை இணைவது, கிராமத்துப் பிள்ளைகள் அந்தப் பள்ளிக் கூடத்திலே படிக்கிறார்கள் என்ற காரணம் சொல்வதற்கு இடமாக இருக்குமே தவிர, அங்கே கிராமத்துப் பிள்ளைகள் மட்டும் படிக்கவில்லை. ஆகவே, கிராமத்து பிள்ளைக்குத்தான் அந்த இடம். 15 விழுக்காடு என்று பேரூராட்சிப் பள்ளிக்கூடங்களும் அதிலே இல்லாமல் இருப்பதுதான் பாதுகாப்பு. பேரூராட்சிப் பள்ளிக்கூடங்கள் இடம் பெறுமானால் இந்த உரிமை, அடித்தட்டு மக்களுக்குக் கிடைக்கின்ற உரிமை பறிபோகும்.

★ ★ ★



பொருளாதாரச் சார்பாகப் பார்த்தாலும் சாதி நன்மை தரக்கூடியது அல்ல. சாதி ஏற்பாட்டினால் சமூகம் விருத்தியடைய முடியாது.

★ ★ ★

மதம் மனிதனுக்காகவே அன்றி, மனிதன் மதத்திற்காக அல்ல.

**– டாக்டர் அம்பேத்கர்**

தீண்டாமையை தாக்குவது உயர்வு, தாழ்வு வேற்றுமையை தாக்குவதாகும். தீண்டாமை ஒழிந்தால் அதே விநாடியில் சாதிமுறை பரிசுத்தமாகிவிடும்.



எவன் தனக்குத்தானே கட்டுப்பாடுகளை ஏற்படுத்திக் கொள்கிறானோ அவன்தான் சுதந்திரமனிதன்.

**– காந்தியடிகள்**



“சாதி முறையை ஒழிப்பதும் சமதர்ம திட்டம்தான்”

★ ★ ★

மக்களிடையே சமத்துவம் மலர வேண்டும்; அதற்கு அன்பு ஆட்சி செய்தல் வேண்டும்.

**– பேரறிஞர் அண்ணா**



# தரமான தமிழ்ப்படங்களுக்கு மானியம்

**– முதலமைச்சர் கலைஞர் வழங்கினார்.**

மாண்புமிகு முதலமைச்சர் **கலைஞர்** அவர்கள் 1997ஆம் ஆண்டிற்கான குறைந்த செலவில் தயாரிக்கப்பட்டு வெளியிடப்பட்ட தரமான தமிழ்த் திரைப்படங்களுக்கு மானியத்தொகையினை 29.3.1999 அன்று வழங்கினார்.

குறைந்த செலவில் தயாரிக்கப்பட்டு வெளியிடப்பட்ட தரமான தமிழ்த் திரைப்படங்களுக்கு ஏற்கெனவே வழங்கப்பட்டு வந்த மானியத் தொகையான ரூ.3 இலட்சத்தை ரூ.5 இலட்சமாக 17.7.96 முதல் உயர்த்தி வழங்க முதலமைச்சர் கலைஞர் அவர்கள் ஆணை பிறப்பித்தார்.

அதன்படி தேர்வுக்குழுவால் தேர்வு செய்யப்பட்ட 11 திரைப்படங்களுக்கு தலா ரூ.5 இலட்சத்திற்கான காசோலையினை முதலமைச்சர் அவர்கள் அப்படத் தயாரிப்பாளர்களிடம் வழங்கினார்.

தனுஜா பிலிம்ஸ் தயாரிப்பான 'நேசம்' என்ற திரைப்படத்திற்கு திரு.கே.சுபாஷ், தெய்வானை மூவிஸ் தயாரிப்பான 'மைஇந்தியா' என்ற திரைப்படத்திற்கு திருமதி. அமுதாராஜ், கஸ்தூரி பிலிம்ஸ் இண்டர்நேஷனல் தயாரிப்பான, 'கோபுரதீபம்' திரைப்படத்திற்கு திரு. அசோக் சாம்ராஜ், ஆனந்த் மூவிலேண்ட் தயாரிப்பான 'வாசுகி' என்ற திரைப்படத்திற்கு திரு. ஜி.வி.ஆனந்தன், தமிழ் அன்னை சினி கிரியேஷன்ஸ் தயாரிப்பான 'தினமும் என்னை கவனி' திரைப்படத்திற்கு திரு.அ.செ.இப்ராகிம் இராவுத்தர், கோமதி சங்கர் பிலிம்ஸ் தயாரிப்பான 'கல்யான வைபோகம்' திரைப் படத்திற்கு திரு.கே. ஆறுமுகம், விஜயா கௌரி பிலிம்ஸ் தயாரிப்பான 'புதல்வன்' திரைப்படத்திற்கு திருமதி. விஜயா கௌரி, எஸ்.பி. பிலிம்ஸ் தயாரிப்பான 'வாய்மையே வெல்லும்' திரைப்படத்திற்கு திரு.எஸ்.ஆர். பாலாஜி, லட்சுமிகரன் எண்டர்பிரைசஸ் தயாரிப்பான, 'சாம்ராட்' திரைப்படத்திற்கு திரு.லட்சுமிகரன், சோழா கிரியேஷன்ஸ் தயாரிப்பான 'சாதிசனம்' திரைப்படத்திற்கு திரு. எஸ். பொன்னுரங்கம் மற்றும் மனிதர் சினி ஆர்ட்ஸ் தயாரிப்பான, 'ரோஜா மலரே' திரைப்படத்திற்கு திரு.டி.என். ஜெயமுருகன் ஆகிய திரைப்பட தயாரிப்பாளர்களுக்கு தலா ரூ.5 இலட்சம் வீதம் மானியத் தொகையாக மொத்தம் ரூ.55 இலட்சத்தை முதலமைச்சர் கலைஞர் அவர்கள் வழங்கினார். மாண்புமிகு செய்தி, விளம்பரம் மற்றும் அச்சுத்துறை அமைச்சர் திரு. வ. முல்லைவேந்தன், தேர்வுக்குழுத் தலைவர் நடிகர் திரு. சிவகுமார், செய்தி-சுற்றுலாத்துறை செயலாளர் திரு.இராஜரெத்தினம், செய்தி மக்கள் 'தொடர்புத்துறை இயக்குநர் திரு.க. முத்துசாமி, தமிழ்நாடு திரைப்படப்பிரிவு மற்றும் தொலைக்காட்சி நிறுவன இயக்குநர் திரு. அமிர்தம் ஆகியோர் உடனிருந்தனர். ★

# நகர்புற நிலவரி விதிப்பு முறை சீரமைக்கப்படும்

– சட்டப்பேரவையில் வருவாய்த்துறை அமைச்சர்

திரு. நாஞ்சில் கி. மனோகரன் அறிவிப்பு



சமுதாய மாற்றத்திற்கும், சமூக நீதி காப்பதற்கும், நில சீர்திருத்தச் சட்டங்கள் மூலமும், வீட்டுமனை மற்றும் விவசாய நில ஒப்படைகள் மூலமும் ஏழை – எளியவர்களுக்கு பயன்தரும் வகையில் வருவாய்த்துறை பணிபுரிந்து வருகிறது. **1998–99** ஆம் ஆண்டில் வீட்டுமனைகள் வழங்க நிர்ணயிக்கப்பட்ட இலக்கு அறுபதாயிரம் மட்டுமே. இந்த ஆண்டு பிப்ரவரி வரை ஒரு இலட்சத்து **96** ஆயிரத்து **973** வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டு இருக்கிறது. **8** ஆயிரத்து **600** ஏக்கருக்கு மேல் விவசாய நிலம் ஒப்படை செய்யப்பட்டுள்ளது.

பல ஆண்டுகளாக அரசு நிலங்களில் வீடு கட்டி குடியிருந்து வருபவர்களுக்குப் பட்டா வழங்க வேண்டும் என்று உறுப்பினர்கள் சிலர் கோரிக்கை எழுப்பி உள்ளார்கள்.

***நில ஆக்கிரமிப்புகள் ஆய்வுக்குழு***

அரசு நிலங்களில் அனுமதியின்றி குடியிருப்பது ஆக்கிரமிப்பு ஆகும். குளம், ஏரி ஆகிய நீர் நிலைப் புறம்போக்குகள் பாதுகாக்கப்பட வேண்டியவை. இவற்றில் உள்ள ஆக்கிரமிப்புகள் ஆட்சேபனையானதாகக் கருதப்படுகின்றன. ஆட்சேபணையற்ற புறம்போக்குகளில் குடியிருந்து வருவோருக்கு அவ்வப்போது பட்டா வழங்கப்பட்டு வருகிறது. இருப்பினும் ஏழை எளியவர்களுக்கு உதவ வேண்டும் என்பதற்காக ஆக்கிரமிப்புகளை வரன்முறை செய்வது குறித்து ஆய்வு செய்ய முதல்வர் அவர்கள் ஒரு குழுவினையும் அமைத்தார்கள்.

அக்குழுவும் தன் பரிந்துரைகளை அரசுக்கு அனுப்பியது. பெரும்பாலான ஆக்கிரமிப்புகள் நீர் நிலைகளில் இருந்ததால் பொதுப்பணித்துறை தலைமைப் பொறியாளரின் அறிக்கையைப் பெறுமாறு அரசு, நில நிர்வாக ஆணையரை அறிவுறுத்தியுள்ளது. அவரது அறிக்கை வந்தவுடன், ஆட்சேபணை இல்லாத ஆக்கிரமிப்புகளை வரன்முறை செய்வதை அரசு பரிசீலிக்கும்.

தாமதங்கள் தவிர்க்கப்பட வேண்டும் என்பது முதல்வரின் ஆணை. அதிகாரங்கள் பரவலாக்கப் படுவதின் மூலம் தாமதம் தவிர்க்கப்படும் என்பதால், ஒப்படை செய்வதற்கான நிதி வரம்புகளை உயர்த்தி அண்மையில் அரசு ஆணை வெளியிட்டுள்ளது.

***நில சீர்திருத்த சட்ட திருத்தங்கள்***

அதேபோல, நில உச்ச வரம்பு மிச்ச வரம்பாக இருந்த நிலையை மாற்ற முதல்வர் அவர்கள் **1970** ஆம் ஆண்டுகளில் கொண்டுவந்த நிலச்சீர்திருத்த உச்சவரம்பை **30** ஏக்கரிலிருந்து **15** ஏக்கராக மாற்றியது உள்ளிட்ட பல சட்ட திருத்தங்கள் வாயிலாக எவ்வளவு மிகை நிலங்கள் கூடுதலாகக் கிடைத்தன.என்பதை கொள்கை விளக்கக் குறிப்பு தெளிவாக்குகிறது.

**1961** முதல் **70** வரை கிடைத்த மிகை நிலங்கள் **19** ஆயிரத்து **28** ஏக்கர் மட்டுமே. பயனடைந்தோர் எட்டாயிரத்துக்கும் குறைவானவரேயாவர். ஆனால் முதல்வர் கொண்டு வந்த சட்டத் திருத்தங்களால் சென்ற ஆண்டு வரை மிகை நிலமாக அறிவிக்கப்பட்ட மொத்த பரப்பு ஒரு இலட்சத்து **98** ஆயிரத்து **630** ஏக்கராகும்.

ஒரு இலட்சத்து 37 ஆயிரத்து 189 பேர்களுக்கு, ஒரு இலட்சத்து 82 ஆயிரத்து 612 ஏக்கர் நிலம் ஒப்படை செய்யப்பட்டுள்ளது. ஒப்படை பெற்றவர்கள் நிலத்தை மேம்படுத்தி வாழ்க்கையில் மேலும் வளம் காண அவர்களுக்கு ஹெக்டேருக்கு ரூ. 2,500 நிதி உதவி வழங்கப்படுகிறது.

முன்பு இச்செலவினம் மைய அரசுக்கும் மாநில அரசுக்கும் சம பங்காக இருந்தது. ஆனால் 1997–98லிருந்து இதனை மாநில அரசே முழுமையாக ஏற்று வருகிறது. இவை அனைத்தும் ஏற்கெனவே நான் கூறியபடி ஏழைகளின் இன்னல்களைக்களைய இந்த அரசு மேற்கொண்டு வருகிற முயற்சிகளின் எடுத்துக்காட்டுகளேயாகும்.

இந்த நேரத்தில் ஆங்கிலக் கவி ஷெல்லியின் சில வரிகளை நான் நினைவு கூர விரும்புகிறேன்.

The seed ye sow another reaps;
The wealth ye find another keeps;
The robes ye weave another wears;
The arms ye forge another bears;
Sow seed, - but let no tyrant reap;
Find wealth, - let no imposter heap;
Weave robes, - let not the idle wear;
forge arms, in your defence to bear.

நீ விதைக்கிறாய் வேறொருவன் கதிர் அறுக்கிறான்;
நீ கண்ட செல்வத்தை மற்றவன் அடைகிறான்;
நீ நெய்யும் ஆடையை மற்றவன் அணிகிறான்;
உனது பட்டறையில் உள்ள ஆயுதத்தை
வேறோருவள் சுமக்கிறான்;
இந்த நிலை மாறவேண்டும்.

ஆகவே,

விதையை நடு – வேறு எக்கொடியவனும் பயிரை அறுக்க வேண்டாம்;

செல்வத்தைத் தேடு – வஞ்சகர் எவரும் அதைத் துய்க்க வேண்டாம்;

ஆடையை நெய்க – சோம்பேறி யாரும் அதை உடுத்த வேண்டாம்;

ஆயுதங்கள் உருவாக்கு – அது உன் பாதுகாப்பிற்கே இருக்கட்டும்;

உழுபவனுக்கே நிலம் சொந்தம், உழைப்பவனுக்கே அதன் பலன் சொந்தம் என்ற நமது கொள்கைகள், இந்தக் கவிதை வரிகளின் உருவகமே ஆகும்.

1971ஆம் ஆண்டிலே நமது அரசு கொண்டுவந்த குடியிருப்பு அனுபோகதாரர்கள் (உடமை உரிமை வழங்குதல்) சட்டத்தின்படி பட்டா வழங்கப்பட்ட ஏழைகளுக்கு இந்திரா நினைவுத் திட்டத்தின் கீழ் முன்னுரிமை கொடுத்து, வீடுகள் கட்டிக் கொள்ள அனுமதி வழங்குமாறு ஊரக வளர்ச்சித் துறை இயக்குநருக்கு அரசு அறிவுறுத்தியுள்ளது குறிப்பிடத்தக்கது.

**ச**முதாய முற்போக்குக்கும், சமத்துவத்துக்கும், விடுதலைக்கும் புதியதாக நாம் கைக்கொள்ள வேண்டியது என்னவென்றால் அறிவு வளர்ச்சிக்கும் சமத்துவத்திற்கும் தடையாய் இருப்பவற்றினை அழித்துவிடவேண்டும் என்பதேயாகும்.

– தந்தை பெரியார்

**தூய்மையான – வெளிப்படையான நிர்வாகம்**

நிர்வாகம் தூய்மையாகவும், வெளிப்படையான தாகவும், மக்களால் எளிமையாக அணுகுவது போலும் அமையவேண்டும் என்பதில் நமது முதல்வர் அவர்கள் எவ்வளவு முனைப்புடன் இருக்கிறார் என்பதை நாடே அறியும். 1997ஆம் ஆண்டு தகவல் பெறும் உரிமைச் சட்டம் (Right to know information Act) தமிழகத்திலே இயற்றப்பட்டது. நலத் திட்டங்கள் பற்றி மக்களுக்குத் தெரிந்திருக்க வேண்டும் என்ற காரணத்தால், வருவாய்த்துறை தொடர்பான கையேட்டினை – மக்கள் சாசனம் என்றே அதற்குப் பெயர் – எல்லா அலுவலகங்களிலும் வைத்திருக்க வேண்டும் என்ற அவரது ஆணை செயல்படுத்தப் பட்டுள்ளது. சட்டமன்றத்திலும் அது தாக்கல் செய்யப்பட்டது.

மேலும் பல நிர்வாகச் சீர்திருத்தங்கள் அமைப்பு ரீதியாக வருவாய்த் துறையிலும் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. இந்த அரசு பொறுப்பேற்ற பிறகு –

4 மாவட்டங்கள், 8 கோட்டங்கள் மற்றும் 24 வட்டங்கள் உருவாக்கப்பட்டுள்ளன.

மக்களின் தேவைகளையும், உறுப்பினர்களின் கோரிக்கைகளையும் கருத்திற்கொண்டு சென்ற ஆண்டில் மட்டும் ஒரு வருவாய் கோட்டமும், 12 வட்டங்களும் ஏற்படுத்த முதல்வர் அவர்கள் ஆணையிட்டார்கள்.

ஒரு கோட்டத்திற்கு சுமார் ரூ. 53 இலட்சமும், ஒரு வட்டத்திற்கு சுமார் ரூ. 123 இலட்சமும், அரசுக்கு செலவாகும் என மதிப்பிடப்பட்டுள்ளது. ஆகவே, மேலும் புதிய அமைப்புகளை உருவாக்கும் முன்பு அதற்கான நிதிச் செலவினத்தைக் கருத்தில் கொள்ள வேண்டியது அவசியமாகிறது.

புதிய அமைப்புகள் உருவாக்குவது மாவட்ட நிர்வாகம் என்ற தலைப்பின் கீழ் வருவதால் இது தொடர்பான கோரிக்கைகளை அந்த மானியக் கோரிக்கையின் போது முதல்வர் அவர்கள் பரிசீலிப்பார்கள் என்பதை உறுப்பினர்களுக்குத் தெரிவிக்க விரும்புகிறேன்.

கடந்த அக்டோபர் முதல் டிசம்பர் வரை வடகிழக்குப் பருவமழை தீவிரமாகப் பெய்ததால் சில மாவட்டங்களில் பயிர்களும், நீர்நிலைகளும், சாலைகளும் சேதம் அடைந்தன.

நிவாரணப் பணிகளை உடனடியாக முடுக்கிவிட வேண்டும் என்று முதல்வர் அவர்கள் இட்ட கட்டளையின் படி அமைச்சர்களும், துறை அதிகாரிகளும் உரிய நடவடிக்கைகளை மேற்கொண்டனர்.

சென்னை மாநகரில் வெள்ளச் சேதங்களை தடுப்பதற்குத் தேவையான முன் எச்சரிக்கை நடவடிக்கைகளை, வணக்கத்திற்குரிய மேயர், தம்பி ஸ்டாலின் சிறப்பாக செய்த காரணத்தால், சென்னை மாநகரில் தண்ணீர் தேங்கி நிற்கும் நிலை பெருமளவில் ஏற்படவில்லை.

வெள்ளத்தால் பாதிக்கப்பட்டோருக்கு நிவாரணம் அளிப்பதற்கும், சேதம் அடைந்த சாலைகள், கரைகள் ஆகியவற்றை சீரமைக்கவும் முதல்வர் அவர்கள் 35.14 கோடி ரூபாய் நிதி அனுமதித்தார்கள்.

சென்ற ஆண்டு மானியக் கோரிக்கையின் போது ஓர் அறிவிப்பு செய்தேன். சட்டம் – ஒழுங்கு பாதிக்கப்படும் நேரங்கள், புயல் வெள்ளம் போன்ற இயற்கைச் சீற்றகாலங்கள் ஆகிய சமயங்களில் மாவட்ட மற்றும் மாநில தலைமையிடங்களுடன் உடனடியாக தொடர்பு கொள்ள V.H.F. போன்ற நவீன தொலைத் தொடர்பு வசதிகளை ஏற்படுத்த அரசு பரிசீலிக்கும் என்று குறிப்பிட்டிருந்தேன்.

அதன்படி–

12 கடலோர மாவட்டங்களில் அடங்கிய

19 வருவாய்க் கோட்டங்களிலும்

36 வட்டங்களிலும்

மாநில தலைமையிடத்தில் வருவாய் நிர்வாக ஆணையர் அலுவலகத்திலும் V.H.F. என்ற தொலைத் தொடர்பு வசதி செய்யப்பட உள்ளது. இதற்காக முதல்வர் அவர்கள் 110.75 இலட்சம் ரூபாயை ஒதுக்கி இருக்கிறார்கள். நிவாரணப் பணிகள் உடனுக்குடன் விரைந்து செயல்பட இந்த வசதி மிகவும் உறுதுணையாக இருக்கும்.

அதேபோல் 1–7–99க்குள் மாநிலத்தில் 50 வட்டங்களில் 'ஏ' ரெஜிஸ்தர் மற்றும் சிட்டா கணக்குகள் கணினி மயமாக்க கருதப்பட்டுள்ளது. நில அளவை அலுவலர்களுக்கு நவீன உத்திகளிலும், கருவிகளிலும் பயிற்சி தருவதற்காக அண்ணா பல்கலைக்கழக வளாகத்தில் நவீன அதிநுட்ப பயிற்சி நிலையம் ஒன்று அமைக்கப்பட உள்ளது. இதற்காக 127.03 இலட்சம் ரூபாய் ஒப்பளிக்கப்பட்டுள்ளது.

அவுல் பக்கீர் ஜெயினுலாபுதீன் அப்துல்கலாம் – அண்மையில் பாரத ரத்னா விருது பெற்ற விஞ்ஞானி, இந்திய அரசின் பாதுகாப்பு அமைச்சகத்தில் முக்கியமான கருத்தாழமிக்க விஞ்ஞான இலட்சியங்களைத் தந்து கொண்டிருப்பவர் – தமிழகத்தைச் சேர்ந்தவர் – சொந்த ஊர் இராமேஸ்வரம் – அவர் கூறுகிறார்.

A developed India by 2020 or even earlier is not a dream. It is a vision for many young Indians. It is a mission we all can and succeed.

கி.பி.2020 அல்லது அதற்கு முன்போ கூட இந்தியாவை ஒரு வளர்ச்சி பெற்ற நாடாக மாற்றுவது என்பது ஒரு கனவல்ல;

பல இளம் இந்தியர்களுக்கு அது ஒரு ஆசை. ஆனால் இது, நாம் அனைவரும் ஒன்றுபட்டு ஆற்றக்கூடிய, அடையக்கூடிய ஒரு குறிக்கோளாகும்.

முதல்வர் அவர்கள் வழிகாட்ட நாம் அனைவரும் அந்தக் குறிக்கோளை நிறைவேற்றப் பாடுபடுவோம்.

தமிழகத்தை 21ஆம் நூற்றாண்டை நோக்கி இட்டுச் செல்லும் பல திட்டங்களை நமது முதல்வர் அவர்கள் உருவாக்கி வருகிறார்கள். அரசு விண்ணப்பப் படிவங்கள் அனைத்தும் இன்னும் ஓராண்டில் தமிழ், ஆங்கில கணிப்பொறி இணையத்தில் (INTERNET) கிடைக்கும் என்றும், இந்த இணையத்தின் வாயிலாக அரசு திட்டங்களின் விவரங்களும் பெற இயலும் என்றும் நிதிநிலை அறிக்கையில் முதல்வர் அவர்கள் அறிவித்ததை நீங்கள் அறிவீர்கள்.

11, 12ஆம் வகுப்புகளில் கணினியை விருப்பப் பாடமாக வழங்கும் திட்டத்தை நடப்பு ஆண்டில் தொடங்கி ஆண்டுதோறும் நாற்பத்து எட்டாயிரம் மாணவர்களுக்கு (Software) மென்பொருள் துறையில் வேலை வாய்ப்பிற்குத் தகுதியாக்கவும் கருதப்பட்டுள்ளது. நான் ஏற்கெனவே தெரிவித்தவாறு,

வருவாய்த்துறையைப் படிப்படியாக கணினி மயமாக்க முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

சென்ற ஆண்டு வருவாய்த்துறையின் பணிகள் மனநிறைவைத் தந்துள்ளன எனறு கூறும் நேரத்தில், வரும் ஆண்டில் இத்துறை மேற்கொள்ள இருக்கும் பணிகள் குறித்து சில அறிவிப்புகளைத் தெரிவிக்க நான் விரும்புகிறேன்.

வருவாய்த்துறை அலுவலகங்களில் எந்த மனு கொடுக்கப்படும் போதும் தாமதங்களைத் தவிர்த்து, நடவடிக்கை எடுப்பதை முறைப்படுத்த வேண்டும் என்பதைக் கருத்தில் கொண்டு, அந்த மனுவை பெற்றதற்கு ஒப்புகைச் சீட்டு வழங்கப்படும். இதனால் பொதுமக்களது மனுக்களைத் தவறாமல் ஆய்வு செய்து உரிய நடவடிக்கை எடுக்க வாய்ப்பு ஏற்படும்.

மாவட்ட நிர்வாகம் திறம்படச் செயல்பட அலுவலர்கள், வருவாய்த்துறையில் செயல்படுத்தப்படும் ஆணைகள், விதிமுறைகள் பற்றி நன்கு அறிந்திருக்க வேண்டும். எனவே, வருவாய்த் துறையில் செயல்படுத்தப்படும் பொருள்கள் பற்றிய ஒரு கையேடு தயார் செய்யப்பட்டு அலுவலர்களுக்கு வழங்கப்படும். இது அவர்களுக்கு ஒரு வழிகாட்டியாக அமைந்து விரைவில் முடிவெடுக்கப் பயன்படும். மேலும் மாவட்ட அளவில் பல்வேறு வருவாய் அலுவலர்களுக்குப் பயிற்சியும் வழங்கப்படும்.

> **ம**க்களை கெடுப்பது எதுவோ அவை எல்லாம் பாபம்; மக்களை வாழ வைப்பது எவையோ, அவையெல்லாம் புண்ணியம் என்று நாம் கொள்ளுவோமானால், அது மிகப் பொருத்தமாக இருக்கும்.
>
> **– பேரறிஞர் அண்ணா**

நிலப்பட்டாக்கள் நிரந்தரமான ஆவணங்கள் ஆகும். சாதாரண காகிதத்தில் இருப்பதால் விரைவில் சேதம் அடைந்து விடுகிறது. இதனைத் தடுக்க இந்த பட்டாக்கள் இனி நல்ல தரமான தாள்களில் அச்சிட்டு வழங்கப்படும்.

அரசு சுகாதாரத் துறையின் கீழ் இயங்கும் ஆரம்பச் சுகாதார நிலையங்கள், மருத்துவமனைகள் ஆகியவற்றிற்கும், அரசு கல்வித் துறையின் கீழ் இயங்கும் பள்ளிக் கூடங்கள், பயிற்சி நிலையங்கள் ஆகியவற்றிற்கும் நிலம் தேவைப்படும்போது வெகுவிரைவில் நில மாற்றம் செய்யப்பட வேண்டும் என்று அரசு கருதுகிறது.

எனவே, நீர்நிலைப் புறம்போக்கு போன்ற பொதுப்பணித்துறை நிலங்களைத் தவிர்த்து, ஏனைய நிலங்களைப் பொருத்தமட்டிலும் நில மாற்றம் செய்வதை மாவட்ட ஆட்சியரே இறுதி முடிவு எடுத்து ஆணை பிறப்பிக்கும் வகையில் அரசாணை வெளியிடப்படும்.

நீர்ப்பாசன மேம்பாட்டு வரியிலிருந்து விலக்கு பெறும் மதிப்பீட்டு உச்சவரம்பினை உயர்த்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

நகர்ப்புற நிலவரி தற்போது சந்தை விலையில் ஒரு குறிப்பிட்ட சதவிகிதம் என்ற அளவில் வரி விதிப்பு முறை உள்ளது. இதனால் கணக்கீடு செய்வதில் காலதாமதமும், பொதுமக்களுக்குக் குழப்பமும் ஏற்படுவதாகத் தெரிய வருகிறது.

வெளிப்படையான நிர்வாகத்தைத் தரவேண்டும் என்று முதல்வர் அவர்கள் சுட்டிக்காட்டி வருகிறார். ஆகவே, நகர்ப்புற நிலவரி விதிப்பு முறையைச் சீரமைத்து, நடைமுறையை எளிமைப்படுத்த வேண்டும் என்று அரசு விரும்புகிறது. அதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

நில உடைமைப் பதிவேடு திட்டம் தற்போது 16 மாவட்டங்களில் செயல்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டு வருகிறது. எஞ்சியுள்ள மாவட்டங்களிலும் படிப்படியாக இத்திட்டம் விரிவுபடுத்தப்படும்.

நில உரிமையாளர்களுக்கு வழங்கப்படும் நில உடைமைப் பதிவேட்டுடன் புலத்தின் வரைபட நகலையும் இணைத்து வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

விண்கோள் நிலஅளவை முறையை அறிமுகப்படுத்த அரசு கருதி உள்ளது. அந்த வகையில் முன்னோடித் திட்டமாக முதலில் ஒரு வட்டத்தில் இதை நடைமுறைப்படுத்த முயற்சி மேற்கொள்ளப்படும்.

நிர்வாகத்திற்கும், பொதுமக்களுக்கும் உதவி செய்ய வேண்டும் என்பதற்காக நிர்வாக சீரமைப்புகள் செய்யப்பட்டு வருகின்றன.

*– மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் திரு. நாஞ்சில் கி. மனோகரன் அவர்கள் சட்டப்பேரவையில் வருவாய்த்துறை மானியக் கோரிக்கை மீதான விவாதத்திற்கு, பதிலளித்து 6.4.99 அன்று ஆற்றிய உரையிலிருந்து.*

★ ★ ★



# தமிழ்நாட்டில் 100 இலட்சம் மெட்ரிக் டன் அரிசி உற்பத்தி

*– வேளாண்மைத்துறை அமைச்சர்*
**திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம் அறிவிப்பு.**

வறட்சிக்கு இலக்கான அல்லது தரிசு நிலங்களாக இருக்கக்கூடிய நிலங்களை விளை நிலங்களாக கொண்டுவர வேண்டுமென்பதற்காக ஓர் உயர்மட்டக்குழு, 'வி.சி. குழந்தைசாமி' அவர்களுடைய தலைமையிலே நியமித்து அதனுடைய அறிக்கையைப் பெற்றபிறகு, அவர்கள் தந்திருக்கிற அந்த அறிக்கையைப் பெற்று, அரசு பரிசீலித்துக் கொண்டிருக்கிறது.

அதைப்போல நல்ல மண்ணுக்கேற்ற வேளாண் விளைபொருளை விவசாயிகள் செய்ய வேண்டும், அவர்கள் எல்லாம் இலாபகரமாக இருக்க வேண்டும், அந்தத் தொழிலில் ஈடுபட்டு இருக்கக்கூடியவர்களுக்கு ஒரு நம்பிக்கை ஏற்பட வேண்டும், அதற்கான தொழில் நுட்பத்தைத் தரவேண்டும் என்பதற்காக இஸ்ரேல் நாட்டினுடைய தொழில்நுட்ப ஆலோசனைகளைப் பெறுவதற்காக 2 கோடியே 35 இலட்ச ரூபாய் செலவழித்து, அந்தத் தொழில்நுட்ப ஆலோசனைகளையும் பெற்று அதையும் வறட்சிக்கு இலக்கான மாவட்டங்களான நான்கு மாவட்டங்களிலே நிறைவேற்ற நடவடிக்கை எடுத்திருக்கிறோம்.

### *தரிசு நில மேம்பாட்டு ஆணையம்*

இந்த நிதிநிலை அறிக்கையிலே நம்முடைய முதல்வர் அவர்கள், 10,000 எக்டேர் தரிசு நிலங்களை விளைச்சல் நிலங்களாக மாற்ற தரிசு நில மேம்பாட்டு ஆணையம் ஒன்று அமைக்க முடிவு எடுத்து, நிதிநிலை அறிக்கையிலே அறிவித்ததை பேரவை உறுப்பினர்களாகிய நீங்கள் எல்லாம் அறிவீர்கள். அந்த அறிக்கைக்கேற்ப இன்று ஒவ்வொரு மாவட்டத்திலும் ஆயிரம் எக்டேர் நிலங்களைத் தேர்வு செய்து, அந்தத் தரிசு நிலங்களை மேம்படுத்த 6 திட்டங்களும், 4,000 எக்டேரிலிருந்து 40,000 எக்டேர் பரப்பு வரை மேம்படுத்த 7 திட்டங்களும் அரசின் பரிசீலனையில் உள்ளன.

குழந்தைசாமி அவர்கள் பரிந்துரைப்படி 72 கோடியே 24 இலட்ச ரூபாயில் 1,11,756 எக்டேர் பரப்பில் தரிசு நில மேம்பாட்டு பணிகளை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப் பட்டிருக்கின்றன.

### *உணவு உற்பத்தி அதிகரிப்பு*

கடந்த மூன்று ஆண்டுக்காலமாகத் தமிழகத்தினுடைய உணவு உற்பத்தி அதிகரித்து இருக்கிறது. சராசரியாக நம்முடைய மாநிலத்திலே இருக்கின்ற மழை அளவைவிட கூடுதலாக 11 சதவிகிதம் பெய்திருக்கிறது. அதனால், 1998-99 ஆம்



ஆண்டில் நெல் பயிரிடும் பரப்பு உத்தேசிக்கப்பட்ட 22 இலட்சம் எக்டேர் பரப்புக்குக் கூடுதலாக ஒரு இலட்சம் எக்டேரில் பயிரிடப்பட்டுள்ளது. அதனால் உணவு உற்பத்தி அதிகரிக்கக்கூடிய வாய்ப்பு நமக்கு ஏற்பட்டது. 1996-97 ஆம் ஆண்டு புள்ளி விவரங்களின்படி தமிழ்நாட்டில் சாகுபடியில் உள்ள நிலப்பரப்பு 28.11 இலட்சம் எக்டேர் நிலங்கள் பாசன வசதிகள் பெற்றிருக்கின்றன.

1995-96வது ஆண்டு மொத்த உணவு உற்பத்தி அரிசி இலக்கு 66.75 இலட்சம் மெட்ரிக் டன். ஆனால் உற்பத்தி ஆனது 52.90 இலட்சம் மெட்ரிக் டன். 1996-97வது ஆண்டில், இந்த அரசு ஆட்சிக்கு வந்தவுடன் 68 இலட்சம் மெட்ரிக் டன் இலக்கு நிர்ணயிக்கப்பட்டது. உற்பத்தி 58.05 இலட்சம் மெட்ரிக் டன் ஆகும். 1997-98வது ஆண்டு 70 இலட்சம் மெட்ரிக் டன் சாதனை அடைந்து உள்ளது. 1998-99ஆம் ஆண்டு 75 இலட்சம் மெட்ரிக் டன் இலக்கு பிப்ரவரி மாதம் வரை 72 இலட்சம் மெட்ரிக் டன் உற்பத்தி அடைந்துள்ளது.

மேலும் இந்த ஆண்டு இறுதியில் சுமார் 75 இலட்சம் மெட்ரிக் டன் குறியீட்டைவிட, இன்னும் சொல்லப்போனால், 75 இலட்சம் மெட்ரிக் டன்னுக்கு கூடுதலாக இருக்கும் என்று கணக்கிட முடியும், சொல்ல முடியும். அதற்கான ஆதாரங்கள் இருக்கின்றன. இருந்தாலும் 75 இலட்சம் மெட்ரிக் டன் என்று நிர்ணயித்து இருக்கிறோம்.

1999-2000வது ஆண்டில் அரிசி உற்பத்தியைப் பொறுத்தவரையில் குறியீடு இந்த அரசு நிர்ணயித்து இருப்பது 74 இலட்சம் மெட்ரிக் டன். மொத்த உணவு உற்பத்தி இந்த அரசு நிர்ணயித்து இருப்பது 100 இலட்சம் மெட்ரிக் டன். உணவு உற்பத்தியில் நம்முடைய முதல்வர் ஆட்சியில், சென்சுரி அடிப்போம் என்ற அந்த மகிழ்ச்சிக்கரமான செய்தியை இங்கே தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

***விவசாயிகளுக்கு ஊக்கத்தொகையாக ரூ.50 கோடி***

இன்றைக்கு 10 இலட்சம் மெட்ரிக் டன் நெல் கொள்முதல் நாம் செய்திருக்கிறோம். இதன் மூலம் விவசாயிகளுக்கு 50 கோடி ரூபாய் ஊக்கத்தொகை கிடைத்திருக்கிறது.

ஆதிதிராவிடப் பழங்குடியினர் மற்றும் பெண் விவசாயிகள் இவர்களுக்குச் சொட்டு நீர்ப்பாசனம், தெளிப்பு நீர்பாசனம் முறைகளில் அவர்களுக்கு 90 சதவீதம் மானியம் வழங்கப்படுகிறது. இதைப்போல இதர விவசாயிகளுக்கு 70 சதவீதம் மானியம் சொட்டு நீர்ப்பாசனம், தெளிப்புநீர்ப்பாசனத்திற்கு நாம் வழங்குகிறோம் அதிகபட்சம் ஒரு ஹெக்டேருக்கு 25 ஆயிரம் மானியமாக இந்தத் திட்டத்தின் மூலம் நாம் வழங்குகிறோம்.

இதை தமிழ்நாட்டிலே, இன்றைக்கு கோவை மாவட்டத்திலே இருக்கிற விவசாயிகள் பெரும்பாலும் பயன் அடைந்திருக்கிறார்கள். அதுவும் தென்னை வளர்க்கக் கூடிய விவசாயிகள். ஏனென்று சொன்னால் அவர்களுக்கு நிலத்தடி நீர் இல்லை; கிணற்றில் தண்ணீர் இல்லை. இருக்கிற தண்ணீரை வைத்துக் கொண்டு தென்னை மரத்தைக் காப்பாற்ற வேண்டுமென்று சொல்லி, திராட்சை எல்லாவற்றுக்கும்தான் அந்த அடிப்படையிலே இன்றைக்கு சொட்டு நீர்ப் பாசன, தெளிப்பு நீர்ப் பாசனமுறையை பயன்படுத்துகின்றனர்.

அதைப்போல 1998-99 ஆம் ஆண்டு பிப்ரவரி முடிய ரூ.904.12 இலட்சம் மானியமாக வழங்கப்பட்டுள்ளது. இதனால் சுமார் 35,000 ஹெக்டேர் பரப்பில் சிக்கன பாசன முறை கொண்டு வரும் இத்திட்டத்தை வரும் நிதியாண்டில் ரூ.1,400 இலட்சம் செலவில் செயல்படுத்த இந்த ஆண்டும் முடிவெடுக்கப் பட்டிருக்கிறது.

***கலைஞர் பிறந்த நாளில் மரம் நடும் விழா***

மரம் வளர்க்கும் திட்டத்தினைக் கொண்டு வரலாம் என்று கருதுகிறபோது, முதலமைச்சரிடத்திலே அத்திட்டத்திற்கு அவரது பெயரையே வைக்கலாம் என்பது பற்றிக் கேட்டபோது, அவர் சொன்னார், "என்னுடைய பெயராலே வேண்டாம். ஏனென்றால் இந்தத் திட்டம் அறிவிக்கப்படுவதற்கு முன்பே, 1994 லேயே சுற்றுப்புறச் சூழலை பாதுகாக்க, என்னுடைய பிறந்த நாளை நீங்கள் மேடை போட்டு, பெரிய போஸ்டர் போட்டு, லைட் எல்லாம் போட்டு கொண்டாடுவதைவிட நாட்டு மக்களுடைய நலன் முக்கியம். சுற்றுப்புறச் சூழல் பாதுகாக்கப்பட வேண்டும் என்பதால் மரங்கள் நடுங்கள்; செடிகள் நடுங்கள்; செடிகளை வைத்து மரங்களை வளருங்கள்" என்று சொன்னார். சுற்றுப்புறச் சூழல் பாதுகாக்கப்பட வேண்டும் என்று சொல்லி அவர் விடுத்த அறிக்கையை ஏற்று நாங்களெல்லாம் அந்தப் பணியிலே ஈடுபட்ட காரணத்தினாலே, இப்போது மரம் வளர்க்க வேண்டுமென்று சொன்னபோது அவர்கள் சொன்னார்கள் ஜனநாயகத்திலே இன்றைக்கு நான் முதல்வராக இருக்கலாம். நாளைக்கு இன்னொருவர் வரலாம், மீண்டும்நான் வரலாம். ஆனால் இதற்காக என்னுடைய பெயரை வைத்துவிட்டால், இன்னொருவர் வரக்கூடிய காரணத்தால், அரசியல் காழ்ப் புணர்ச்சிக்காக நாமே பார்த்திருக்கிறோம் பெயரை எடுப்பதையெல்லாம். அப்படிப்பட்ட ஒரு சூழ்நிலையில் ஒரு திட்டத்திற்குப் பெயரை மாற்றுவது, மீண்டும் வந்துவிட்டால் பெயரை வைப்பது என்பதெல்லாம் தேவையில்லை.


ஆகவே, யார் வந்தாலும் சரி, அந்தப் பெயரை எடுக்க முடியாமல் இருக்க வேண்டும் என்ற அடிப்படையிலேதான் அவர் சொன்ன பெயர் இது.

மக்கள் நலம் காக்க, 'மாண்புமிகு முதலமைச்சர் மரம் வளர்ப்புத் திட்டம்' என்பது ஆகும்.

### *விவசாயிகளுக்கு உர மானியம் இல்லை*

உரத்தைப் பொறுத்த வரைக்கும் ஐக்கிய முன்னணி அரசு இருந்தபோது, உரத்தின் விலையைக் குறைத்தார்கள். மானியம் கொடுத்தார்கள். மத்திய அரசின் சார்பில், அந்த மானியம் விவசாயிகளுக்குச் சென்று அடைய உரம் விலை குறைக்கப்பட்டது. இப்பொழுதும் உரத்திற்கு மானியம் தந்தார்கள். யூரியா போன்ற உரத்திற்கு மானியம் கொடுத்தார்கள். ஆனால் அந்த மானியம் உற்பத்தியாளருக்குத்தான் என்று சொல்லிவிட்டார்கள். அப்படி சொன்ன காரணத்தால் இப்பொழுது உரத்தின் விலை கூடிவிட்டது. யூரியா விலை குவிண்டால் ஒன்றுக்கு ரூ.183லிருந்து ரூ.200 ஆக ஆகிவிட்டது. மானியம் என்று சொல்லும்போது, அது மத்திய அரசோ, மாநில அரசோ எதுவாக இருந்தாலும் அதைப் பயன்படுத்தக் கூடியவர்களுக்குச் சலுகை இருக்க வேண்டுமென்று நினைப்பது இயற்கை. அதுதான் நம்முடைய மாநில அரசின் கொள்கை.

ஆனால் மத்திய அரசு இப்பொழுது உர விலைக்குக் கொடுத்த மானியம் முழுவதும் உரம் தயாரிக்கின்ற ஆலை அதிபர்களுக்குச் செல்லக்கூடிய வகையில் ஏற்படுத்தப்பட்டது. அதனால் பயன்படுத்தக்கூடிய விவசாயிகளுக்குக் கிடைக்க வில்லை. கிடைக்காத காரணத்தினால் ஒரு குவிண்டால் ரூ.183 லிருந்து ரூ.200 ஆக உயர்த்தப்பட்டது. ஆகவே அது இந்த அரசினுடைய பொறுப்பு அல்ல. மத்திய அரசினுடைய அந்தக் கொள்கையின் காரணத்தால், விலை உயர்த்தப்பட்டது என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.



அதேபோல, வறட்சிக்கு இலக்காகும் பகுதிகள் திட்டம் (D.P.A.P) தருமபுரி, தூத்துக்குடி, சிவகங்கை, இராமநாதபுரம், விருதுநகர், புதுக்கோட்டை, திருநெல்வேலி, சேலம், நாமக்கல், கோயம்புத்தூர், திருவண்ணாமலை, திண்டுக்கல், வேலூர், திருச்சி, பெரம்பலூர் மற்றும் கரூர் ஆகிய 16 மாவட்டங்களில், 80 ஊராட்சி ஒன்றியங்களில் செயல்படுத்தப் படவிருக்கிறது. மத்திய அரசு 50 சதவிகிதம், மாநில அரசு 50 சதவிகிதம் என்ற அடிப்படையில் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு அந்த சங்கங்கள் மூலமாக மொத்தம் 58.40 கோடி ரூபாய் செலவிடப்பட இருக்கிறது.

### *நிதி உதவிக்கு முதல்வர் அனுமதி*

இங்கே நம்முடைய முதலமைச்சர் அவர்களுடைய வேண்டுகோளின் அடிப்படையிலே சில அறிவிப்புகளைச் செய்ய நான் விரும்புகிறேன். அதைச் சுருக்கமாகத் தலைப்பை மட்டும் சொல்கிறேன். முழுவதையும் படித்தால் அதற்கே நேரமாகிவிடும் நெல் உற்பத்தி Zinc Sulphate நெல் உற்பத்தியைக் கூடுதலாக்குவதற்கு, ஒரு எக்டேருக்கு கூடுதலாக்குவதற்கு Zinc Sulphate பயிர் வகைகளில் உற்பத்தியைத் தருவதற்கு Di-Ammonium Phosphate இவைகள் தெளிப்பதற்கு, அதற்காக நெல்லுக்கு 25,000 எக்டேருக்கும், அதைப் போல பயிர் வகைகளுக்கு 50,000 எக்டேருக்கும் 25 சதவிகித மானியத்தில் இந்த ஆண்டும் நிதிஉதவி விவசாயிகளுக்கு வழங்கலாம் என்று நம்முடைய முதலமைச்சர் அவர்கள் அனுமதித்திருக்கிறார்கள்.

அதைப்போல நுண்ணுயிர் உரங்களுக்குத் தரக்கட்டுப்பாடு. இது நமக்கு மிகவும் அவசியம். தரக்கட்டுப்பாடு செய்து வாங்குவதற்காகத் திருச்சியிலே ஒரு ஆய்வகம் அமைக்க ரூ.17.50 இலட்சம். இதற்கும் முதலமைச்சர் அனுமதி வழங்கி இருக்கிறார்கள் என்பதை நான் தெரிவிக்க விரும்புகிறேன்.

விதைகள் தரமான விதைகளாகத் தரவேண்டும். இந்தியாவிலேயே மற்ற மாநிலங்களைவிட நாம்

முன்னேறித்தான் இருக்கிறோம். தரமான விதைகள் நம்முடைய விவசாயிகளுக்குத் தந்தாலும் ஈரப்பதத்தைக் கண்டறிய வேண்டும். விதைகள் வாங்குகின்றபோது என்று நம்முடைய முதல்வர் அவர்கள் ஆலோசித்து அதற்காக ஈரப்பதத்தைக் கண்டறியக்கூடிய மிஷின் ரூ.17,000 விலையிலே 160 வட்டாரங்களில் அமைக்க 25 இலட்ச ரூபாயை அனுமதித்திருக்கிறார்கள். 160 வட்டாரங்களிலே அது வாங்கப்படும் என்பதை நான் இங்கே தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

பசுமைக் குடில்கள், அந்தப் பசுமைக் குடில்கள் திட்டத்தின் கீழ் பூச்செடிகள் வளர்ப்பது, ஒரு பசுமைக்குடில் அமைப்பதற்கு 3 இலட்ச ரூபாய் செலவாகும். விவசாயி ஒரு இலட்ச ரூபாய், வங்கிக் கடனாக பெறலாம். மானியமாக ஒரு இலட்ச ரூபாய். தமிழ்நாடு எங்கும் எல்லா மாவட்டங்களிலும் எப்படியாவது 25 இடங்களில் பசுமைக் குடில்கள் அமைத்து விவசாயிகளை ஈர்க்க வேண்டுமென்ப தற்காக இந்தத் திட்டத்தை முதலமைச்சர் அவர்கள் அனுமதித்திருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

### *புதிதாக 100 டிராக்டர்கள்*

வேளாண்மையைப் பொறுத்தவரையில், வேளாண்மைப் பொறியியல் துறையிலே புதிதாக ஏற்கெனவே 120-க்கும் மேற்பட்ட டிராக்டர்கள் 25 வருடங்கள் ஆகிவிட்டன; அவையெல்லாம் சரியாக ஓடவில்லை; ஆகவே புதிதாக 100 டிராக்டர்கள் வாங்கலாம் என்று நம்முடைய முதலமைச்சர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள் என்பதை நான் இங்கே தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். அதற்காக 500 இலட்சம் ரூபாய் கடன் பெற்றுக் கொள்ள அனுமதிக்கப்பட்டிருக்கிறது.

அதேபோல், 10 ஆயிரம் ஏக்கர் பயன்படுத்தாத நிலங்களைச் சீரமைக்கின்ற பணிக்கு நம்முடைய முதலமைச்சர் அவர்கள் ரூ.8 கோடி நிதியுதவியை அளித்து, அதனைச் செயல்படுத்த அனுமதித் திருக்கிறார்கள்.

### *ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள்*

வேளாண்மை ஒழுங்குமுறை, விற்பனைக் கூடங்கள் மூலம் இடு பொருட்கள், பண்ணைக் கருவிகள் இவற்றையெல்லாம் ஒரு டெப்போ வைத்து, வாங்கி வைத்தால் விவசாயிகள் தங்கள் விளைபொருள்களைக் கொண்டுவந்து விற்றுவிட்டு, இடுப் பொருட்களை வாங்கிச் செல்வதற்கு வசதியாக இருக்கும் என்று அறிந்து, முதல் கட்டமாக 10 ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில், நல்லவரத்து அதிகமாக இருக்கக்கூடிய விற்பனைக் கூடங்களாகப் பார்த்துத் தேர்ந்தெடுத்து, ஒரு விற்பனைக் கூடத்திற்கு ஏழரை இலட்ச ரூபாய் செலவில் கட்டடம் மற்றும் அதற்கான நடைமுறை மூலதன செலவுக்கு நிதி செலவழிக்க அனுமதிக்கப்பட்டிருக்கிறது.

அதுபோல வேளாண் பொருள்களைக் கொண்டு வரக்கூடிய விவசாயிகள் எடை போடுவதற்கு, எடை மெஷின் இல்லை என்றும், அதனால் எடை குறைவாக இருக்கிறது என்றும் புகார் விவசாயிகளின் மத்தியிலே இருக்கிறது. வியாபாரிகள் விளைபொருள்களை வாங்கிக் கொண்டு வெளியே போகிறபோது எங்களுக்கு எடை போடுவதற்கு வாய்ப்பு இல்லை என்று சொல்கிறார்கள். ஆகவே, நல்ல வரத்துள்ள விழுப்புரம், செஞ்சி, திருப்பூர் ஆகிய இந்த 3 இடங்களிலும் எடை மேடை அமைக்கலாம் என்றும், ஒவ்வொன்றும் ரூ.15 இலட்சம் என்ற அளவிலே, ரூ.45 இலட்சம் அனுமதிக்கப்பட்டிருக்கிறது.

ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்திலே விவசாயிகள் தங்குவதற்கு இடவசதி செய்திருக்கிறோம். இருந்தாலும், அது போதவில்லை என்கிறார்கள். வியாபாரிகளும், அவர்கள் தங்குவதற்கு இடவசதி இல்லை என்று கேட்கிறார்கள். ஆகவே, அவர்களுக்கு அறைகள் கட்டிக் கொடுப்பதற்கு, 10 ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில், அறை ஒன்றுக்கு 8 இலட்ச ரூபாய் வீதம் மொத்தம் 80 இலட்சம் ரூபாய் இதற்காக நிதிஒதுக்கம் செய்யப்பட்டிருக்கிறது.

### *உலர் களங்களுக்கு ரூ.3 கோடி அனுமதி*


உலர் களங்களைப் பற்றி எல்லோரும் இங்கே பேசினார்கள். உலர் களம் அமைக்க, சென்ற ஆண்டு நாம் திட்டமிட்டு அது சிறப்பாக நிறைவேற்றப்பட்டிருக்கிறது. இந்த ஆண்டு மேலும் அதை விரிவுபடுத்த, தஞ்சாவூர், நாகப்பட்டினம், திருவாரூர், கடலூர் ஆகிய மாவட்டங்களில் மட்டும் மாவட்டத்திற்கு ஒன்றாக 10 உலர் களங்கள் அமைப்பது என்றும், மற்ற மாவட்டங்களுக்கு 5 உலர் களங்கள் என்று மொத்தம் 175 உலர் களங்கள் அமைக்க நம்முடைய முதலமைச்சர் ரூ.2.97 கோடி அனுமதித்திருக்கிறார்கள் என்பதை நான் இங்கே தெரிவிக்க விரும்புகிறேன்.

### *விவசாயிகளுக்கு பொருளீட்டுக் கடன்*

வியாபாரிகளால், விளைபொருள்கள் வரத்து அதிகம் வரும் காலங்களில், உடனுக்குடன் விவசாயிகளுக்கு பணம் பட்டுவாடா செய்ய முடியாத நிலை ஒழுங்குமுறை விற்பனைக்கூடங்களில் நிலவி வருகின்றது. விவசாயிகளுக்கு பொருளீட்டுக் கடன் வழங்குவதைப்போல, வியாபாரிகளுக்கும் 1998 ஆம் ஆண்டில், அதிகபட்சமாக ரூ.25,000 அல்லது பொருளின் மதிப்பில் 25 சதவீதம், இவற்றில் எது குறைவோ அத்தொகை பொருளீட்டுக் கடனாக வழங்கப்பட்டு வருகிறது. இத்தொகை மிகவும் குறைவானது என்றும், கடனை திருப்பிச் செலுத்த அனுமதிக்கப்பட்ட காலம் மிகவும் குறைவானதாக

உள்ளதெனவும் வியாபாரிகள் தரப்பில் தெரிவிக்கப் பட்டதைக் கருத்தில் கொண்டு வியாபாரிகளுக்கு பொருளீட்டு கடனாக ரூபாய் ஒரு இலட்சம் அல்லது பொருளின் மதிப்பில் 50 சதம் கடனாக வழங்கப்படும். அதுபோல கடன் திரும்பச் செலுத்தும் கால அவகாசம் 30 நாட்களிலிருந்து, 60 நாட்களாக உயர்த்தப்படும்.

1996ஆம் ஆண்டு ஜூன் மற்றும் டிசம்பர் மாதங்களிலும், 1997ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்திலும், 1999ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்திலும் பெய்த பெருமழையால் ஏற்பட்ட வெள்ளத்தில் பாதிக்கப்பட்ட வீடுகளுக்கு, பயிர்களுக்கு, கால்நடைகளுக்கு மற்றும் மனித உயிர்களுக்கு நம்முடைய இந்த அரசு எதுவுமே செய்யவில்லை என்றும் சிலர் சொல்கிறார்களே, அதற்காக இந்தத் துறையின் மூலம் சில தகவல்களைத் திரட்டிய போது



எனக்கு கிடைத்தவற்றை நான் சொல்கிறேன். இதற்காக மட்டும் ரூ.192 கோடியே 58 இலட்சத்து, 40 ஆயிரம் கொடுத்திருக்கிறோம். இந்த மூன்று வருடத்திலே, ஆட்சிக்கு வந்தபிறகு ஏற்பட்ட விவசாய சேதங்களுக்காக 192 கோடியே 58 இலட்சத்து, 40 ஆயிரம் ரூபாய் கொடுத்து இருக்கின்றோம்.

இது மட்டுமல்லாது 1989இல் கழக ஆட்சியில் இதே முதலமைச்சர் இருந்தபோது இலவச மின்சாரம் வந்தது. அப்போது இலவச மின்சாரத்திற்கு சலுகை கொடுத்தபோது அதாவது 12 இலட்சத்து 35 ஆயிரத்து 941 பம்புசெட்டுகளுக்கு இலவச மின்சாரம் வழங்கப்பட்டது. ஆண்டு ஒன்றிற்கு 40,000-க்கு மேற்பட்ட பம்புசெட்டுகளுக்கு சீனியாரிட்டி அடிப்படையிலேதான் கொடுத்திருக்கிறோம். அது பற்றிக் கூட இங்கே பேசப்பட்டது. 15 இலட்சத்து 71 ஆயிரத்து 431 பம்புசெட்டுகள் இப்போது இருக்கின்றன. இதிலே 1989 முதல் 1999 வரை மொத்தமாக மின்சார வாரியத்திற்காக மட்டும் அரசின் சார்பிலே செலுத்தப்பட்டிருக்கின்ற பணம் - இவையெல்லாம் விவசாயிகள் செலுத்த வேண்டிய பணம் ரூ.4,556.48 கோடி.

அதாவது 4,556.48 கோடி ரூபாய் மின்சார வாரியத்திற்கு, விவசாயிகள் பயன்படுத்திய மின்சாரத்திற்கு, இந்த அரசு கட்டுகிறது என்று சொன்னால், கலைஞர் அவர்களைத் தவிர வேறு யாராவது இருந்தால், இந்தச் சலுகை விவசாயிகளுக்குக் கிடைத்திருக்குமா? யோசித்துப் பார்க்க வேண்டாமா? நன்றியுள்ள விவசாயிகள் நினைப்பார்கள். எவ்வளவு பெரிய சலுகை.

அது மட்டுமல்ல, 1990ஆம் ஆண்டு விவசாயிகள் பெற்ற கூட்டுறவுக் கடன்கள் தள்ளுபடி செய்யப்பட்டபோது, அப்போது தேசிய முன்னணி அரசு வந்தபோது, அப்போது அறிவித்த கொள்கை - அதாவது 10,000 ரூபாய் வரை கடன் வாங்கியிருந்தால் அந்த ஆண்டிற்குப் பிறகு தள்ளுபடி செய்ய வேண்டும் என்று அறிவித்ததை இந்தியாவிலே முதன்முதலாக அமலாக்கியது கலைஞர் அவர்கள்தான்.

அப்படி செய்யும்போது ரூ.209 கோடியே 12 இலட்சத்து 87 ஆயிரம் கொடுத்திருக்கிறோம். தள்ளுபடி வகையிலே, அதாவது கூட்டுறவு சங்கங்கள் தள்ளுபடி செய்ததை நம்முடைய அரசாங்கம் திருப்பிக்கொடுத்தது அது. ஆக, இதுபோன்ற சலுகைகளை, வேறு எந்த மாநிலத்திலும், செய்யாத அளவிற்கு நம்முடைய விவசாயிகளுக்கு அரசாங்கம் சிறப்பாக செய்து வருகிறது.

### *வேளாண் உற்பத்தியில் சாதனைகள்*

ஆக, விவசாயத்திலே நாம் கவனம் செலுத்த வேண்டுமென்று அன்றைக்கு அண்ணா உணர்த்தினார். அந்தக் கருத்தைத்தான் நம்முடைய முதலமைச்சர் அவர்கள் ஏற்றுக் கொண்டிருக்கக் கூடிய காரணத்தினாலே, அவர் சொல்கிறார் உழுதுண்டு வாழ்வதற்கு ஒப்பில்லை, அதே எல்லா தொழில் களுக்கும் மேலானது. மூலமானது. வேளாண்மை உற்பத்தியில் ஏற்பட்டுள்ள சாதனையைப் பொறுத்தே பொருளாதாரத் திட்டங்களின் வெற்றியும் அமையும். வேளாண்மைப் பொருள்களின் நியாயமான விலைவாசிகளே நாட்டின் பொருளாதார வளர்ச்சியைத் தூண்டும்.

*– மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர்*
*திரு.வீரபாண்டி எஸ்.ஆறுமுகம் அவர்கள்*
*சட்டப்பேரவையில் 5–4–1999 அன்று*
*வேளாண்மைத்துறை மானியக் கோரிக்கை மீதான*
*விவாதங்களுக்குப் பதிலளித்து ஆற்றிய உரையிலிருந்து...*

ஆசிரியரும் வெளியிடுபவரும் : **க.முத்துசாமி,** இ.ஆ.ப., இயக்குநர், செய்தி–மக்கள் தொடர்புத்துறை, தமிழ்நாடு அரசு.
சென்னை–தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
தமிழரசு அலுவலகம், ஓமந்தூரார் அரசினர் தோட்டம், அண்ணா சாலை, சென்னை–600 002.
தொலைபேசி:568926/568927/564906

## கோ-ஆப்டெக்ஸ் -ன் நல்வாழ்த்துகள்

# அன்றும் இன்றும் என்றும் கோ-ஆப்டெக்ஸ்



கோ-ஆப்டெக்ஸ் ரகங்கள்:

- பருத்தி, பாலியஸ்டர், பட்டுச் சேலைகள்.
- பருத்தி, பாலியஸ்டர் சர்ட்டிங்ஸ், பட்டுத் துணிகள்.
- பருத்தி, பாலியஸ்டர் சூட்டிங்ஸ்
- லுங்கிகள், துவாலைகள், வேட்டிகள்
- படுக்கை விரிப்புகள், அலங்காரத் துணி வகைகள்.

கோ-ஆப்டெக்ஸ்
தமிழ் நாடு கைத்தறி

★ இன்றே அருகில் உள்ள கோ-ஆப்டெக்ஸ் விற்பனை நிலையத்திற்கு வருகை தாரீர்.

தமிழரசு

பதிவு எண் M.8676
Licence No.TN/MS(C)PP-23

